Registered as a news paper

பக்கங்கள்: பன்னிரண்டு

விலை: ரூபா 6.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர் : 02 திருவள்ளுவர் ஆண்டு: 2034 மார்கழி 18 ஆம் நாள், ஹிஜ்ரி 1425 துல்ஹஃதா 09 (02.01.2004) வெள்ளிக்கிழமை இதழ்:93

விரைவாகவும், துல்லியமாகவும்
உங்கள் இல்லங்களிலிருந்து
உலகெங்குமுள்ள உங்கள் உறவினர்களுடன்
INTERNET
மூலம் தொடர்புகொள்ள
உள்நாட்டு வெளிநாடுகளுக்கான சகல
விதமான துரித தபால்/பொதிகள் சேவை
Sri Murugan
Tele Communication & Agency Post Office
303, K.K.S. ROAD, JAFFNA T.P - 021 2222670
FAX - 222 3214 email - del - smskr@eureka.lk
(சி-2015)

## குடியிருப்புக்கான பாதையை திறந்துவிடக்கோரி மறியல்!

(தென்மராட்சி)

கொடிகாமம் - கோயிலாமனை பாதையைத் திறந்து மக்கள் போக்குவரத்து செய்வதற்கும், விவசாயம் செய்வதற்கும் அனுமதிக்க வேண்டுமெனக்கோரி, கோயிலாமனை நாவலர் சன சமூக நிலையத்தினர் தென்மராட்சி பிரதேச செயலகத்திற்கு முன்னால் மறியற்போராட்டத்தில் ஈடுபட்டதுடன், பிரதேச செயலாளரிடம் மகஜர் ஒன்றினையும் கையளித்தனர்.

இந்த மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது.

கோயிலாமனை பாதையை மக்கள் பாவனைக்குத் திறந்து விட வேண்டும் என பல மகஜர்களை கொடுத்தபோதிலும் இதுவரை எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

எனவே, பிரதேச செயலாளர் உடனடியாக உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும் எனக் கோரப்பட்டிருந்தது.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## 2003 இன் சிறந்த தமிழனாக வை.கோ. தெரிவானார்!

(சென்னை)

தமிழக இணையத்தளம் ஒன்று நடத்திய 2003 ஆம் ஆண்டுக்கான சிறந்த தமிழனை தெரிவுசெய்வதற்கான கருத்துக்கணிப்பில் ம.தி. மு.க பொதுச்செயலாளர் வைகோ 52 வீதமான வாக்குகளைப் பெற்று முதலாம் இடத்தைப் பெற்றுள்ளார்.

இதேவேளை, போட்டியின் வாக்களிப்பு நாள் முடிவதற்கு ஓரிரு தினங்களுக்கு முன்பே போட்டியாளர் வரிசையில் சேர்க்கப்பட்ட தமிழீழத் தேசிய தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் 9 வீதமான வாக்குகளையும், இந்திய ஜனாதிபதி அப்துல்கலாம் 7 வீதமான வாக்குகளையும் பெற்றுள்ளனர்.

கடந்த மாதம் முற்பகுதியில் தமிழகத்தில் இருந்து இயங்கிவரும் 'தற்ஸ் தமிழ்' என்ற தமிழ் இணையத்தளம் தமிழக முதல்வர் ஜெயலலிதா, ம.தி.மு.க பொதுச்செயலாளர் வைகோ, விடுதலைச் சிறுத்தைகள் இயக்கப் பொதுச்செயலாளர் திருமாவளவன், காஞ்சிமடாதிபதி சங்கராச்சாரியார், திரைப்பட இயக்குநர் பாலா ஆகியோரின் பெயர்களை வெளியிட்டு - அவர்களில் இந்த ஆண்டுக்கான சிறந்த தமிழன் யார் என்பதை தெரிவு செய்யுமாறு வாக்களிப்பிற்கு விட்டிருந்தது.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## திட்டமிடல், அபிவிருத்தி அலுவலகம் கிளிநொச்சியில் நேற்று திறந்துவைப்பு!

(கிளிநொச்சி)

திட்டமிடல் மற்றும் அபிவிருத்திக்கான செயலகம் விடுதலைப்புலிகளால் நேற்று கிளிநொச்சியில் திறந்துவைக்கப்பட்டது.

நேற்றுமுதல் செயற்படத் தொடங்கியுள்ள இந்தச் செய்லகம், அபிவிருத்தித் தேவைகள் தொடர்பான கொள்கை வகுப்பு, வழி நடத்தல் மற்றும் மூலோபாயங்களைத் தயாரிக்கவுள்ளது.

திட்டமிடல் மற்றும் அபிவிருத்திச் செயலகத்தின் பணிப்பாளர் தூயவனின் தலைமையில் குழுவொன்று இந்த நடவடிக்கையில் ஈடுபடவுள்ளது.

கிளிநொச்சியில் அமைக்கப்பட்ட இந்தச் செயலகத்தின் ஆரம்ப வைபவத்தில் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன், பொருளாதார விவகார ஆலோசகர் கலாநிதி ஜோய் மகேஸ்வரன் மற்றும் திட்டமிடல்

(12 ஆம் பக்கம் பார்க்க)

# சர்வதேச நிதி உதவிகளைப் பெற நோர்வேயுடன் அரசாங்கம் பேச்சு!

## அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவிப்பு

(கொழும்பு)

**ரோக்கியோ உதவி வழங்கும் மாநாட்டில் சர்வதேச சமூகத்தினால் உறுதியளிக்கப்பட்ட நிதி உதவிகளைப் பெற்றுக்கொள்வதற்கு நோர்வே அரசின் உதவியை அரசாங்கம் நாடியிருப்பதாகவும் - இதுதொடர்பாக பேச்சுக்கள் நோர்வே அரசுடன் நடத்தப்பட்டு வருவதாகவும் அமைச்சரவைப் பேச்சாளர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார்.**

நேற்றுக் கொழும்பில் நடந்த செய்தியாளர் மாநாட்டில் தகவல் வெளியிட்ட அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ்,

நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்காக நிதியுதவியை வழங்க ரோக்கியோ மாநாட்டில் உறுதியளித்த நாடுகளிடமிருந்து நிதியைப் பெற்றுக்கொள்வது தொடர்பாக நோர்வே தூதுவருடன் பேச்சுக்கள் நடத்தப்பட்டுவருகின்றன.

நாட்டில் ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடி காரணமாக சமாதான முயற்சிகள் தாமதமடைந்துள்ளது. இதன்காரணமாக ரோக்கியோ மாநாட்டில் உறுதியளிக்கப்பட்ட நிதியுதவி குறைக்கப்படவில்லை.

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்பட

(12 ஆம் பக்கம் பார்க்க)

## விண்ணாணம் விநாசியர்



காசைக் கறக்கிறதில மட்டும் குறியாய் இருக்கினம்...!

## ஆசிரிய ஆட்சேர்ப்பு விண்ணப்ப திகதி நீடிப்பு

(கொழும்பு)

வட-கிழக்கு மாகாணங்களில் க.பொ.த. உயர்தரம் சித்தியடைந்தவர்களிடமிருந்து ஆயிரம் தமிழ்மொழிமூல ஆசிரியர்களுக்கான ஆட்சேர்ப்பு விண்ணப்பத் திகதி இந்த மாதம் 23 ஆம் திக்திவரை நீடிக்கப்பட்டுள்ளது.

(12 ஆம் பக்கம் பார்க்க)

# மோட்டார் சைக்கிள் விபத்தில் ஒருவர் பலி; மற்றொருவர் காயம்!

## அல்வாய் - மாலுசந்திப் பகுதியில் சம்பவம்

(வடமராட்சி)

வேகமாக வந்த மோட்டார் சைக்கிள் ஒன்று கட்டுப்பாட்டை இழந்து மின்கம்பத்துடன் மோதியதில் ஒருவர் பலியானதுடன் மற்றொருவர் படுகாயமடைந்தார்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் இரவு அல்வாய் - மாலுசந்திப் பகுதியில் இடம் பெற்றது. இந்தச் சம்பவத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த மூன்று பிள்ளைகளின் தந்தையான பொன்னம்பலம் தயாரூபன் (வயது 30) என்பவரே பலியானவராவார்.

இவருடன் மோட்டார் சைக்கிளில் பயணித்த மற்றையவர் வெளிநாட்டில் இருந்து திருமணம் புரிந்து கொள்வதற்காக தனது சொந்த இடத்திற்கு வந்தவரான முகமாலையைச்

(12 ஆம் பக்கம் பார்க்க)

# தற்போதைய பிரச்சினைகளைத் தீர்க்க தேர்தல் ஒன்றை நடத்துவதே ஒரே வழி!

## அமைச்சர் ரவி கருணாநாயக்க கூறுகிறார்

(கொழும்பு)

தேர்தல் ஒன்றை நடத்துவதே நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான ஒரேவழி என - வர்த்தக, பாவனையாளர் அமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்தார்.

நேற்று தனது அலுவலகத்தில் நடத்திய செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது -

நாட்டில் தற்போது ஏற்பட்டிருக்கும் நெருக்கடி நிலையைப் போக்குவதற்கு நான்கு வழி முறைகள் உள்ளன.

ஒன்று - ஜனாதிபதி தனது பதவியிலிருந்து விலகவேண்டும். அல்லது தான் ஏற்ற மூன்று அமைச்சுப் பதவிகளையும் மீண்டும் பிரதமர் தலைமையிலான அரசாங்கத்திடம் ஒப்படைக்க வேண்டும், அல்லது ஜனாதிபதி தானே தலைமை ஏற்று பேச்சை முன்னெடுக்க

(12 ஆம் பக்கம் பார்க்க)

## ஆனந்தசங்கரியின் அனுமதியின்றி

# கூட்டணி மத்திய குழுவை கூட்ட விதிக்கப்பட்டுள்ள தடை நீடிப்பு!

(கொழும்பு)

தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் ஆனந்தசங்கரியின் அனுமதி இல்லாமல் தமிழர் விடுதலைக் கூட்டணியின் மத்திய குழுக் கூட்டங்களை நடத்தக்கூடாதென பிறப்பிக்கப்பட்ட இடைக்காலத் தடையுத்தரவு மேலும் நீடிக்கப்பட்டுள்ளதாக கொழும்பு மாவட்ட நீதி மன்றம் நேற்றுமுன்தினம் அறிவித்தது.

எதிர்வரும் 14 ஆம் திகதிவரை இந்த தடையுத்தரவு நீடிக்கப்பட்டது.

தமிழ் மக்களின் ஏகபிரதிநிதிகள் தமிழீழ விடுதலைப் புலிகள் இல்லை என்ற தமது கருத்து ஊடகங்களில் வெளியாகிய பின்னர் தமக்கு எதிரான கட்சியின் எதிர்ப்பு நிலைப்பாடுகள் மேற்கொள்ளப்பட்டதாக மனுதாரரான

(12 ஆம் பக்கம் பார்க்க)

# இப்போது தேர்தல் நடத்துவது ஆபத்து என்கிறார் பௌஸி!

நாடு தற்போது இருக்கும் நிலையில் தேர்தல் ஒன்றை நடத்துவது மிகவும் ஆபத்தானது என சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஏ.எச்.எம். பௌஸி தெரிவித்தார்.

நாட்டில் பொதுத்தேர்தல் ஒன்று இடம் பெறச் சாத்தியம் இருக்கின்றதா? என நேற்று அவரிடம் ஊடகவியலாளர்கள் கேட்டதற்குப் பதிலளித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது -

நாடு தற்போது இருக்கும் நிலையில் பொதுத்தேர்தல் ஒன்று இடம்பெறுவது பொருத்தமற்ற காரியம்.

சமாதான முன்னெடுப்புக்களைக் கருத்தில் கொண்டு ஜனாதிபதியும், பிரதமரும் ஓர் உடன்பாட்டிற்கு முன்வருதல் வேண்டும்.

அதைவிடுத்து வேறு வழிகளைக் கடைப்பிடிக்க எண்ணுவது நாட்டிற்குப் பல பிரச்சினைகளை ஏற்படுத்தும்.

அவ்வாறு ஒரு தேர்தல் இடம்பெறுமாக இருந்தால் ,அது ஜே.வி.பி கட்சிக்கும், தமிழ் தேசியக் கூட்டமைப்பினருக்குமே வாய்ப்பாக அமையும்.

இதன்மூலம் அவை தமது அதிகாரத்தையும், வலுவையும் அதிகரித்துக்கொள்ள வாய்ப்பு ஏற்படுமெனவும் எனத் தெரிவித்தார்.

இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை....
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021 - 2223891 2226297
0712348888 0712349999 0114512666 0112360290 0112360291
email :- jaffna @ expoavi . com , xesexva tions @ expoavi.com.
எக்ஸ்போஎயார்
EXPOAIR
வான் வெளியில் உங்கள் நண்பன்...
your friend in the skies...
(சி -1753)

# ஈழ மக்களினது பிரச்சினை தொடர்பில் இந்தியாவின் நிலைப்பாடு மாறவேண்டும்!

## சர்வதேச இந்துமத குருமார் ஒன்றியம் வாஜ்பாய்க்கு கடிதம்

(யாழ்ப்பாணம்)

ஈழத்தமிழர் பிரச்சினை தொடர்பாக இந்தியா கடைப்பிடித்துவரும் நிலைப்பாட்டையிட்டு நாம் மிகவும் வருத்தம் அடைகின்றோம். தமிழர்களின் போராட்டம் என்பது உரிமைக்கான போராட்டம் எனும் உண்மை நிரூபிக்கப்படவேண்டிய விடயமல்ல. எனவே இந்தியா ஈழத்தமிழர் தொடர்பில் தனது நிலைப்பாட்டை மாற்றவேண்டும் எனக்கேட்டுக்கொள்கின்றோம்

இவ்வாறு சர்வதேச இந்துமத குருமார் ஒன்றியம் பிரதமர் வாஜ்பாய்க்கு அனுப்பிய கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அக்கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

தென்னிலங்கைப் பேரினவாத சக்திகள் எமது நியாயமான கோரிக்கைகளை மறுத்ததுமட்டுமன்றி, இனப்பேரழிவுக்கான கொடூரப்போரையும் எம்மீது தொடுத்திருந்தது. நம் இனத்தை அழியவிடாது, உரிமைகளை வென்றெடுத்து, கௌரவத்துடன் வாழ்வதற்கு நாமே தற்பாதுகாப்புப் போர் ஒன்றை மேற்கொள்வதற்கு நிர்ப்பந்திக்கப்பட்டோம்.

எமது உரிமைப் போராட்டத்தை முன்னெடுத்து வருகின்ற தமிழீழ விடுதலைப் புலிகளை, தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகளாக - தமிழ் மக்களும், ஏன் சர்வதேசமும் ஏற்றுக்கொண்ட விடயமாகும். "இராணுவத்தீர்வு" என்ற அரசின் கொள்கை பயனற்றது. சமாதானப்பேச்சு வார்தைகளில் முழுமூச்சுடன் புலிகள் தற்போது அர்ப்பணிப்புடன் செயற்பட்டுவருகின்றனர்

போர் நிறுத்த ஒப்பந்தத்தின் பின்னர், சில ஆத்திரமூட்டும் சந்தர்ப்பங்கள் ஏற்பட்டும் புலிகள் பொறுமையைக் கடைப்பிடித்திருந்ததும், இடைக்கால நிர்வாகம் பற்றிய திட்டமொன்றை முன்வைத்ததும் ஜனநாயகத் தீர்வுமட்டில் அவர்கள் கொண்டுள்ள மனவுறுதியை எடுத்துக்காட்டுகிறது.

இந்தச் சூழலில் தென்னிலங்கைத் தலைமைத்துவம் அமிழ்ந்திருக்கும் அரசியல் குழப்பம், கடந்த ஐந்து தசாப்தங்களாக அவர்கள் பின்பற்றிவந்த அரசியல் கலாசாரத்தைப் பிரதிபலிக்கின்றது.

இப்பின்னணியில், தமிழ் மக்களின் உரிமைப் போராட்டப் பாதையில் அளப்பரிய தியாகங்களைப் புரிந்த தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு பயங்கரவாதிகள் என்ற பெயரைச்சூட்டி, அவர்களைப் புறந்தள்ளுவதும், தென்னிலங்கை அரசியல் தலைமைத்துவம் பக்கம் சார்ந்துநின்று தமிழ்மக்களின் உரிமைகளை நசுக்குகின்றார்கள்.

எனவே இந்தியா தன் நிலைப்பாட்டை மாற்றவேண்டுமென்று தங்களைக் கோருகின்றோம்.

முன்பு இராணுவ நடவடிக்கையால், தங்கள் உயிரைப் பாதுகாக்க தப்பியோடி தஞ்சம் தரவேண்டி முதலில் இந்தியத் தாயையே தமிழ்மக்கள் நாடினர். அகதிகள் என்ற அவலநிலை வெளிநாடுகளில் மட்டுமல்ல-உள்நாட்டிலும் இன்னும் மாறவில்லை. இராணுவ உயர் பாதுகாப்பு வலயம் என்று பெயர்சூட்டப்பட்டு மக்கள மீளக் குடியமரமுடியாதநிலை. இராணுவ நடவடிக்கையால் சேதமாக்கப்பட்டு முற்றாக அழிக்கப்பட்ட எமது வணக்கத்துக்குரிய ஆலயங்கள் ஒருபுறம் இருக்க, இன்னும் எத்தனையோ ஆலயங்கள் சுதந்திரமாக வழிபாட்டுக்கு அணுகமுடியாத வகையில் அவ் உயர்பாதுகாப்பு வலயங்களுள் சிக்கிக்கிடக்கின்றன.

இனிவரும் காலங்களில் தங்களுடைய நிலைப்பாடு மாற்றமடைந்து, ஈழத் தமிழ்மக்களுக்கு விடிவுதரும் முழுமையான பங்களிப்பைக்கொண்டதாக இருக்க வேண்டுமென்று தங்களை மீண்டும் நன்றியுடன் கோருகின்றோம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.



இந்து சமய அலுவல்கள் அமைச்சர் தியாகராசா மகேஸ்வரனின் அழைப்பின்பேரில், தமிழ்நாட்டு பேரூர் ஆதீன முதல்வர் தவத்திரு சாந்தலிங்கம் இராமசாமி அடிகள் - திருவெம்பாவையை முன்னிட்டு யாழ்ப்பாணத்தில் பல ஆலயங்களிலும் அருளுரைகள் நிகழ்த்த நேற்று வருகை தந்தார். இவரை அமைச்சர் மகேஸ்வரன் வரவேற்பதை காணலாம்.



கண்டி வீதியிலிருந்தான கொயிலாமனை கிளை வீதியைத் திறந்துவிடக்கோரி, அக்கிராம மக்கள் நேற்று தென்மராட்சிப் பிரதேச செயலகம் முன்பாக மேற்கொண்ட மறியற் போராட்டத்தின் போது எடுக்கப்பட்டபடம். (202)

### புனர்வாழ்வளிப்பு அகதிகள் மீள்குடியமர்த்துகை அமைச்சினால் யாழ்.மாவட்டத்திற்கு நிவாரணத்திற்கு வழங்கப்படும்

01. சிவப்பு நாட்டரிசி (புழுங்கல்)
02. அரிசி (தீட்டல் பச்சை)

வழங்கலுக்கான கேள்வி கோரல்

மேற்படி கேள்விக்குரிய கால எல்லை பின்வருமாறு நீடிக்கப்பட்டுள்ளது.

01. விண்ணப்பிக்கும் கடைசித் திகதி - 16.02.2004 பி.ப.2.00மணி
02. கேள்வி திறக்கும் நேரம் - 16.02.2004 பி.ப. 3.00 மணி (சிவப்பு நாட்டரிசி)
03. கேள்வி திறக்கும் நேரம் - 16.02.2004 பி.ப. 4.00 மணி (அரிசி தீட்டல் பச்சை)

செ.பத்மநாதன்,
அரசாங்க அதிபர், யாழ்.மாவட்டம். (சி-2014)

### வீடியோ படக்காட்சி

யாழ்.பல்கலைக்கழக ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி நிலையத்தின் ஆதரவுடன் 'ஜஹ்னு பருவா' வின் நெறியாள்கையில் உருவாக்கப்பட்ட 'குஹ்க்ஹல்' (விடுதலையின் விலை) என்னும் இஸ்லாமியமொழித் திரைப்படம் ஆங்கிலத் துணைத் தலைப்புக்களுடன் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிக்கு புவியியற்துறை மண்டபத்தில் காண்பிக்கப்படும்

படக்காட்சியின் இறுதியில் எழுததாளர் அ.யேசுராசா, க.சட்டநாதர் ஆகியோரின் நெறிப்படுத்தலின்கீழ் கலந்துரையாடல் இடம்பெறும் என இணைப்பாளர் தெரிவிக்கின்றார்.


சிறு விளம்பரம்
தபால் மூலம் சிங்களம்

இப்போது நீங்கள் சிங்கள மொழியை வீட்டில் இருந்தவாறு பேச/எழுத/வாசிக்க/படிக்கலாம். விபரங்களுக்கு எழுதவும் :-வழிகாட்டல் ஆசிரியர் திரு.மல்வான, இல.56, அம்மன் ரோட், கந்தர்மடம், யாழ்ப்பாணம். (சி-2006)


### வலைப்பந்தாட்ட சுற்றுப்போட்டி

(பருத்தித்துறை)

பருத்தித்துறை கிறிஸ்தவ வாலிபர் சங்கம் நடத்திய வலைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியில், பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழக வலைப்பந்தாட்டக்குழு சாம்பியனானது. நக்கீரன் விளையாட்டுக்கழகம் இரண்டாம் இடத்தைப் பெற்றது.(17)


திறைஞ்சனைஸ் சங்கானை
மாதவன், ஜோதிகா நடித்த
இன்று மட்டும்
பிரியமான தோழி
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 (பு.நே)
KEOMA (சி-2004)

ராஜா யாழ்ப்பாணம்.
விஜய், ஜோதிகா, ரகுவரன், கௌசல்யா நடித்த
திருமலை
காட்சிநேரம் :
10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே) (சி-2005)


### யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம் ஆதனவரி - 2004

20.11.2003 இல் யாழ்.மாநகரசபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் படி, மாநகரசபை எல்லைக்குள் அமைந்த ஆதனங்களில் நீர் விநியோகத்தைப் பெறுபவர்கள், ஆதனவரி மதிப்பீட்டில் மேலதிகமாக 2% த்தினை 01.01.2004 இல் இருந்து செலுத்த வேண்டும் என்பதை அறியத்தருகிறேன்.

மாநகரசபை அலுவலகம்,
யாழ்ப்பாணம்,
01.01.2004 (சி-2017)

இ.இராமலிங்கம்,
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.


அனைவருக்கும் எம் இனிய புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்

எங்களிடம் நவீன டிசைன்களில் புதிய மொடல்களில் மங்கையரின் அழகை ஜொலிக்க வைக்கும் தங்க ஆபரணங்களை உடனுக்குடனும், ஓடரிலும் குறித்த நேரத்தில் பெற்றுக்கொள்ள நம்பிக்கையான ஸ்தாபனம்

ரூபி நகையகம்
கண்டி வீதி,
கொடிகாமம்
(சி-1962)

மலிவு விற்பனை

வாடிக்கையாளர்களின் வேண்டுகோளுக்கிணங்க மலிவுவிற்பனை தை 14 ஆம் திகதிவரை நீடிக்கப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றனர் லைடன் புடவை நிலையத்தினர்.

சகல பொருட்களுக்கும் விசேட கழிவு அரிய சந்தர்ப்பத்தை நழுவவிடாதீர்கள்.

லைடன் புடவை நிலையம்
(பஸ் நிலையம் எதிர்)
410, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். T.P: 2222381 (சி-2016)


### நல்லூர் பிரதேச சபை கேள்வி அறிவித்தல் - 2004

15.01.2004 ஆம் திகதி முதல் 31.12.2004 ஆம் திகதிவரையான காலப்பகுதிக்கு வழங்குவதற்கான மீள்கேள்வி கோரப்படுகின்றது.

| | மீளளிக்கப்படாத கேள்விப்பத்திர பணம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்பு பணம் | ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆகக்குறைந்த தொகை (வற்வரி தவிர்ந்த) |
|---|---|---|---|
| 1. கோண்டாவில் வடக்கு அரசடி வீதி மீன் சந்தை | 100.00 | 500.00 | 1,115.00 |
| 2. கொக்குவில் உப உலுவலக ஆட்டிறைச்சிக்கடை | 350.00 | 5,000.00 | 50,342.50 |

❖கேள்விப் பத்திரம் வழங்கும் இறுதித் திகதி 08.01.2004 வியாழன் 12.00 மணிவரை
❖கேள்விப் பத்திரம் ஏற்றுக்கொள்ளும் இறுதித்திகதி 09.01.2004 வெள்ளி 10.00 மணிவரை
❖கேள்விப்பத்திரம் திறக்கும்திகதி 09.01.2004 வெள்ளி 2.00 மணிக்கு

மேலதிக விபரங்களை நல்லூர், கொக்குவில் பிரதேசசபை உப அலுவலகங்களிலும் பிரதேசசபை தலைமைச் செயலகத்திலும் காரியாலய நேரத்தில் அறிந்துகொள்ளலாம்.

நல்லூர் பிரதேசசபை, திருநெல்வேலி. (சி-2013)

# நல்லிணக்க அரசில் இணையத்தவறின் மாற்று வழிகளினை நாட நேரிடுமாம்!

## பிரதமர் ரணிலுக்கு சந்திரிகா எச்சரிக்கை



வேறு வழிகள் இல்லாமையாலேயே எல்லைகடந்த விட்டுக்கொடுப்புக்களைக் கடைப்பிடிக்கிறேன். இதனை அரசாங்கம் சரியாகப் பயன்படுத்தாவிடின் பாரிய மாற்றங்களுக்குத் தயாராகவேண்டிவரும்.

இவ்வாறு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்தார்.

சிங்கள ஊடகமொன்றிக்கு நேற்றுமுன்தினம் அவர் அளித்த செவ்வியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது-

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கம் நல்லிணக்க ஆட்சி நிலையில் இணையத் தயாரில்லாவிட்டால், ஜனநாயக மாற்றுவழிகளைக் கையாளவேண்டிய நிர்ப்பந்தம் எனக்கு ஏற்படும்.

வேறுவழிகள் இன்றி நான் இவ்வாறு விட்டுக்கொடுப்புக்களை மேற்கொண்டு நடப்பதைச் சரியாகப் பயன்படுத்தாது அரசாங்கம் நடந்து கொண்டால் - சமாதானத்தை நிலைநாட்டவும், மக்களைக் காக்கவும் நான் வேறு வழியை நாடவேண்டிவரும்.

தொடர்ச்சியாக பல தடவைகள் தோல்விகண்ட நிலையிலேயே 13 மாற்றுக்கட்சி உறுப்பினர்களைத் தன்னுடன் இணைத்துக்கொண்டு ஐக்கிய தேசியக் கட்சி தற்போது ஆட்சியில் உள்ளது.

ஆட்சி பறிபோய்விடுமோ என்ற அச்சம் அந்தக் கட்சியைச் சேர்ந்த பல நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு இன்னும் இருந்துவருகிறது.

அத்துருகிரிய ஆயுதக்கிடங்கு தொடர்பான விசாரணைகளுக்கென அமைக்கப்பட்ட குழுவின் அறிக்கை கிடைத்ததும் அது தொடர்பான விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு உரிய சட்டநடவடிக்கைகள் எடுக்கப்படும்.

ஜே.வி.பியுடன் சிறிலங்கா சுதந்திரக் கட்சி கூட்டணி அமைக்கவுள்ளது உண்மையே. ஆனால், அது எப்போது எனக் கூறிவிடமுடியாது. ஜே.வி.பி தற்போது அரசியல் தீர்வொன்று எமது நாட்டிற்கு அவசியம் என்பதை உணர்ந்துள்ளது.

சமஷ்டி முறையிலான தீர்விற்கு தமிழீழ விடுதலைப் புலிகள், தமிழ் மக்கள் உள்ளிட்ட அனைவரையும் உள்ளடக்கிய தீர்மானமொன்று எடுக்கப்படுதல் வேண் டும் என்பதில் உறுதியாக உள்ளோம்.

அரசியல் தீர்வு விடயத்திற்கு என்னால் 2000 ஆம் ஆண்டு முன்வைக்கப்பட்ட யோசனைகள் உதவியாக இருக்கும். பல நல்ல தீர்வுகள் அதில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இதனைப் பிரதமர் கூட சில சந்தர்ப்பங்களில் ஒத்துக்கொண்டுள்ளார். ஜே.வி.பியுடன் இணைந்து நாட்டிற்கு ஒரு தீர்வினைப் பெற்றுக்கொடுக்க முன்வருமாறு அழைப்பு விடுத்தபோது, ஐக்கிய தேசிய முன்னணி அதனை நிராகரித்துவிட்டது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

---

இலங்கை அரசியல் உரிமை மீறல்களுக்கு

## மனித உரிமைகளுக்கான ஆசிய மையம் கண்டனம்

புதுடில்லியை தளமாகக் கொண்டு இயங்கும் மனித உரிமைகளுக்கான ஆசிய மையம் இலங்கையின் அரசியல் மற்றும் சிவில் உரிமை மீறல்கள் குறித்து கண்டனம் தெரிவித்துள்ளது.

இது குறித்து இந்த மையம் வெளியிட்டுள்ள 139 பக்க அறிக்கையில் 2003 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணைக்குழு வெளியிட்ட நடைமுறைகளை அரசு கடைப்பிடிக்க வேண்டும் எனவும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

தன்னிச்சையான கைதுகள், தடுத்து வைப்பு, சித்திரவதைகள், சிறையில் பாலியல் பலாத்காரம், சட்டத்திற்கு புறம்பான கொலைகள், காணாமல் போதல், பத்திரிகைச் சுதந்திர மீறல், நீதித்துறையின் சுதந்திரம் போன்ற பல்வேறு மனித உரிமை மீறல்கள் இலங்கையில் நடைபெற்றிருப்பதாக இவ்வறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

1994 ஆம் ஆண்டு சித்திரவதை ஒரு குற்றச்செயல் என இலங்கையில் அங்கீகரீக்கப் பட்டிருந்தும், அரசு 43 பொலிஸ் அதிகாரிகள் மீதே இதுவரை குற்றப்பத்திரிகைள் தாக்கல் செய்து, 12 பொலிஸ் அதிகாரிகள் மீதே ஒழுங்கு நடவடிக்கை மேற் கொள்ளப்பட்டிருப்பதாகவும் அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மனித உரிமை மீறல்களை மேற்கொண்ட பொலிஸ் அதிகாரிகளுக்கு தண்டனை வழங்கப்படாமல் இருப்பது, மனித உரிமை மீறல்களை மேலும் ஊக்குவிக்கவே வழிகோலும் எனவும் அவ்வறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

---

## அரசியல் இணக்கப்பாடு இன்றேல் நாடு பேரழிவைச் சந்திக்கும்!

### வாசுதேவ நாணயக்கார கூறுகிறார்

(கொழும்பு)

ஜனாதிபதியும் பிரதமரும் ஓர் உடன்பாட்டிற்கு வந்து சமாதானப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்க வேண்டும். இல்லையெனில் நாடு பேரழிவை எதிர்நோக்க வேண்டிய சூழ்நிலை வருமென, நவசமசமாசக்கட்சியின் பொதுச் செயலாளர் வாசுதேவ நாணயக்கார எச்சரிக்கை விடுத்துள்ளார்.

தற்போதைய அரசியல் சூழ்நிலை தொடர்பாக கருத்து வெளியிட்ட வாசுதேவ நாணயக்கார மேலும் தெரிவித்தாதவது -

பொதுத்தேர்தலோ, மாகாணசபைத் தேர்தலோ தற்போதைக்கு நடத்தக்கூடிய சூழ்நிலை இல்லை. தேர்தல் ஒன்றுக்கு முகங்கொடுக்க நாட்டுமக்கள் தயாராக இல்லை.

ஜனாதிபதியும், பிரதமரும் அதிகாரப் போட்டியில் தொடர்ந்தும் ஈடுபடுவது நாட்டின் அமைதிக்கு உகந்தது அல்ல. ஓய்ந்து போயிருக்கும் யுத்தத்தை ஆரம்பிக்க அதுவே வாய்ப்பை உருவாக்கும். இத்தகைய அரசியல் நெருக்கடியை பயன்படுத்தி இனவாதிகள் சிலர் சமாதானப் பேச்சைக் குழப்பமுறப்படுகின்றனர்.

இந்த நிலையில் ஜனாதிபதி, பிரதமர் ஆகியோர் விரைவில் ஒரு உடன்பாட்டுக்கு வர வேண்டிய தேவையுள்ளது. தேசிய நலன் கருதி நாட்டின் தலைமைகள் ஒன்றுபடுவது குற்றமல்ல.

இத்தகைய நெருக்கடியை காரணம் காட்டி பொதுத்தேர்தல் ஒன்றுக்குச் செல்வது தேர்தலில் பலத்தை நிரூபிக்க முயல்வது ஏற்புடையதல்ல.

அவ்வாறான தேர்தல்களை மக்கள் சந்திக்கத்தயாரில்லை. தேர்தல் நடைபெற்றாலும் எந்தக்கட்சியும் பெரும்பான்மை பலத்தோடு ஆட்சி அமைக்கமுடியாது.

ஐக்கிய தேசியக்கட்சி அரசு மீண்டும் ஆட்சி அமைத்தாலும், பாதுகாப்பு அமைச்சை ஜனாதிபதி மீளளிப்பார் என எதிர்பார்க்கவும் முடியாது. அவ்வாறு எதிர்பார்த்தால் தொடர்ந்தும் சிக்கல் நிலைமைதான் ஏற்பட இடமுண்டு.

எனவே, பிரதமரும், ஜனாதிபதியும் உடன்பாட்டுக்கு வருவது தவிர வேறுவழியில்லை. குறுகிய லாபங்களைக் கைவிட்டு இணக்கப்பாட்டுக்கு வர அனைவரும் ஒத்துழைக்கவேண்டியது அவசியமாகும்.

இதுதான் தற்போதைய அரசியல் நெருக்கடிக்கு தீர்வுக்குரிய சிறந்த வழியாகும். இவ்வாறு அவர் மேலும் தெரிவித்தார்.

---

## ஈ.பி.டி.பி உறுப்பினர் புலிகளால் கடத்தப்பட்டாராம்!

ஊர்காவற்றுறைப் பகுதியில் வைத்து, கடந்த செவ்வாய்க்கிழமை விடுதலைப் புலிகள் அமைப்பைச் சேர்ந்தவர்களால் ஈ.பி.டி.பி உறுப்பினர் ஒருவர் கடத்தப்பட்டதாகப் பொலிஸாரிடம் முறைப்பாடு செய்யப்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது.

மருத்துவ சிகிச்சை பெறும் நோக்குடன் ஊர்காவற்றுறையில் இருந்து யாழ்.நகர் நோக்கி வந்து கொண்டிருந்தவேளை - வான் ஒன்றில் வந்த நான்கு பேரடங்கிய விடுதலைப் புலிகளின் உறுப்பினர்கள் இவரைக் கடத்தியதாகவும் முறையிடப்பட்டுள்ளது.

இந்தச்சம்பவம் தொடர்பாக போர்நிறுத்தக்கண்காணிப்புக் குழுவின் யாழ்.அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டிருப்பதாகவும், பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுவருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

---

வடக்கு - கிழக்கு முஸ்லிம் மக்களுக்காக

## ஒவ்வொரு மாவட்டத்திலும் தனியான அரச அதிபர்கள்

### பேரியல் அஷ்ரப் கோரிக்கை

வடக்கு - கிழக்கு பகுதிகளில் முஸ்லிம்களுக்காக மேலதிக அரசாங்க அதிபர்களை ஒவ்வொரு மாவட்டத்திலும் நியமிக்கும்படி, தேசிய ஐக்கிய முன்னணியின் தலைவி பேரியல் அஷ்ரப் கோரிக்கை விடுத்துள்ளார்.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிடமே இந்தக் கோரிக்கையை பேரியல் அஷ்ரப் முன்வைத்துள்ளார்.

வடக்கு - கிழக்கு பகுதிகளில் வாழும் முஸ்லிம் மக்கள் முகங்கொடுத்து வரும் பல்வேறு பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்காகவே ஒவ்வொரு மாவட்டங்களிலும் மேலதிக அரச அதிபர்கள் நியமிக்கப்பட வேண்டுமெனவும் அவர் மேலும் கேட்டுள்ளார்.

பேரியல் அஷ்ரப்பின் இந்தக்கோரிக்கை குறித்து கவனத்தில் எடுத்துக்கொள்வதாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்தார்.

---

## தைப்பொங்கலுக்குப் பின் ஜனாதிபதி பாதுகாவலர் சங்கத்தைச் சந்திப்பார்

எதிர்வரும் தைப்பொங்கலுக்குப் பின, ஜனாதிபதியை வடக்கில் கைது செய்யப்பட்டு காணாமல் போனோர் பெறறோர் பாதுகாவலர் சங்கத்தினர் சந்திப்பர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் ஜனாதிபதியின் செயலாளரிடம் தமது மகஜரைக் கையளித்த வடக்கில் கைது செய்யப்பட்டு காணாமல் போனோர் பாதுகாவலர் சங்கத்தினர் ஜனாதிபதியைச் சந்திக்கப் போவதாக கேட்டபோது, எதிர்வரும் தைப் பொங்கலின் பின்னர் அவரைச் சந்திக்கமுடியுமென, ஜனாதிபதியின செயலாளர் உறுதியளித்ததாகத் தெரியவருகின்றது.

இதேவேளை நேற்றுமுன்தினம் ஜனாதிபதியைச் சந்திக்கவுள்ளதாக காணாமல்போனோா சங்கத்தினர் தெரிவித்தபோதிலும் ஜனாதிபதி அவரகளைச் சந்திக்க மறுத்து விட்டதும் குறிப்பிடத்தக்கது.

---

## அரச ஊழியர்களின் இடமாற்றம் காலதாமதமின்றி நடைபெறும்!

### பொதுநிர்வாக அமைச்சு அறிவிப்பு

அரசாங்க சேவையில் உள்ள ஊழியர்களின் இடமாற்றங்கள் எவ்வித காலதாமதமுமின்றி இடம்பெறும்.

இவ்வாறு பொதுநிர்வாக அமைச்சு அறிவித்துள்ளது.

அரச சேவையில் உள்ள ஒருவர் ஐந்து வருடங்கள் குறித்த நிறுவனத்தில் வேலைசெய்திருந்தால் இவ்வாறான இடமாற்றங்கள் அவருக்குக் கொடுக்கப்படும்.

வருடப்பிறப்பன்று முதல் அமுல் செய்யப்படுகின்ற இந்த நடைமுறையில் எந்தவிதமான அரசியல் தலையீடும் இருக்க இடமளிக்கப்படமாட்டாது. இடமாற்றம் தொடர்பான அரசியல் தலையீடுகள் போன்ற முறைப்பாடுகள் ஏற்கனவே பல கிடைத்துள்ளது. அவை உரிய முறையில விசாரணை செய்யப்படும்.

ஐந்து வருடங்கள் ஒரு நிறுவனத்தில் பணிபுரிந்த ஊழியர் இந்த வகையில் இடமாற்ற உத்தரவைப் பெறத்தகுதியுடையவராவார்.

இதன்மூலம் வீட்டுக்கு அண்மையில் உள்ள ஒரு நிறுவனத்தில் பணிபுரியக்கூடிய வாய்ப்பு இதனால் ஏற்படும். மோட்டார் திணைக்களம், குடிவரவு, குடியகல்வுத் திணைக்களம் போன்றவற்றிக்கும் இவ்வாறான தூர இடைவெளியில் பணியாற்றிய பின்னர் 5 வருடங்களில் வீட்டுக்கு அண்மையில் பணிபுரியும் வாய்ப்பு ஏற்படும். ஊழியர்களின் நலன்கருதி இந்த நடவடிக்கை எடுக் கப்படுகின்றது என்று பொதுநிர்வாக அமைச்சு தெரிவித்தது.

---

## புதிய கல்விக்கொள்கை ஜனாதிபதியிடம் கையளிப்பு

(கொழும்பு)

நாட்டின் கல்வி முறையில் அடுத்த வருடத்திலிருந்து புதிய கல்விக்கொள்கையை அமுல்படுத்துவதற்கான யோசனைகள் அடங்கிய வரைபை, நேற்றுமுன்தினம் தேசிய கல்வி ஆணைக்குழு ஜனாதிபதியிடம் கையளித்தது.

நேற்றுமுன்தினம் ஜனாதிபதியை தேசிய கல்வி ஆணைக்குழு சந்தித்துக் கலந்துரையாடியது. ஜனாதிபதி விடுத்த வேண்டுகோளுக்கிணங்கவே இந்த வரைபு தயாரிக்கப்பட்டது.

இனிவரும் காலங்களில் மாணவர்கள் எதிர்நோக்கும் புதிய சவால்களுக்கு முகம்கொடுக்கும் விதத்தில் கல்விக்கொள்கை மாற்றியமைக்கப்படவுள்ளது.

இதனைக் கருத்தில்கொண்டே தேசிய கல்வி ஆணைக்குழு தனது திட்டயோசனையைச் சமர்ப்பித்துள்ளது. இந்த யோசனையில் - கல்விக்குரிய சந்தர்ப்பங்கள் பாடத்திட்டங்களை ஒழுங்கமைத்தல், கல்வியாளர்களை அபிவிருத்தி செய்தல், கல்வியில் ஒழுங்குகளைக் கடைப்பிடித்தல், கல்விக்கான வள ஒதுக்கீடு, கல்வியில் நீதி அமைப்பு அரசியல் ஆகிய ஆறு முக்கிய விடயங்களே உள்ளடக்கப்பட்டுள்ளது.

இந்த அறிக்கை தொடர்பான தனது கருத்தை, ஜனாதிபதி இன்னும் இரண்டு வாரங்களில் வெளியிடுவார்

இலவச கல்விக்கொள்கையை அறிமுகப்படுத்திய சி.டபிள்யூ.கன்னங்கரவால் அறிமுகப்பட்டுத்தப்பட்ட கல்விக்கொள்கைக்குப்பின் சமர்ப்பிக்கப்பட்ட அடுத்த கல்விக் கொள்கை இதுவாகும் என்பது குறிப்பிடத்தக்கது.

---

## கிராமப்பிரதட்சண விஞ்ஞாபனம்

(தெல்லிப்பளை)

தெல்லிப்பளை சித்தியம்புளியடி அன்னமார் தேவஸ்தானத்தின் கிராமப்பிரதட்சண விஞ்ஞாபனம் கடந்த ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகியது.

எதிர்வரும் 7 ஆம் திகதி புதன் கிழமை மார்கழி திருவாதிரை விழா நடைபெற்று 8 ஆம் திகதி வியாழக் கிழமை கிராமப்பிரதட்சணம் நடைபெறவுள்ளது.

---

சட்டவிரோதமான முறையில்

## ஆட்களை வெளிநாடுகளுக்கு அனுப்பிவைத்த நபர் கைது!

(கொழும்பு)

சட்டவிரோதமாக இலங்கையரை வெளிநாடுகளுக்கு அனுப்பிவந்த நபர் ஒருவரை யால காட்டுப்பகுதியில் வைத்து பொலிஸார் கைது செய்துள்ளனர். இவர் கைதுசெய்யப்படும்போது இவரிடமிருந்து 25 கடவுச்சீட்டுகள் கைப்பற்றப்பட்டது.

இவரால் வெளிநாடுகளுக்குச் சட்டவிரோதமாக அனுப்பப்பட்டவர்களிடம் தலா 3 லட்சம் வரையில் பெற்றுள்ளார்.

இந்த நடவடிக்கையுடன் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரின் உறவினர்களும் தொடர்புபட்டிருப்பதாக, ஆரம்பக்கட்ட விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளன.

இது தொடர்பாக மேலதிக விசாரணைகளை யால பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர்.

# அவுஸ்திரேலியாவுடனான இந்தியாவின் நான்காவது டெஸ்ட் போட்டி இன்று

(சிட்னி)

இந்திய - அவுஸ்திரேலிய அணிகள் மோதும் 4 ஆவது மற்றும் கடைசி டெஸ்ட் கிரிக்கெட் போட்டி சிட்னியில் இன்று ஆரம்பமாகவுள்ளது.



கங்குலி

அவுஸ்திரேலிய கப்டன் ஸ்டீவ்வோ ஆடும் கடைசி கிரிக்கெட் போட்டி இதுவாகும். அதிக முக்கியத்துவத்தை உண்டாக்கியுள்ள இந்தப் போட்டிக்கான டிக்கெட்டுகள் அனைத்தும் ஏற்கனவே விற்று தீர்ந்துவிட்டன. முதல் 3 நாட்களுக்கான டிக்கெட் ஒரு மாதத்துக்கு முன்பே விற்பனையாகிவிட்டதாக சிட்னி மைதான அமைப்பாளர் தெரிவித்தார்.

இரு அணிகளும் தலா ஒரு போட்டியில் வெற்றிபெற்ற நிலையில், சிட்னி ஆட்டம் இந்திய மற்றும் அவுஸ்திரேலிய அணிகளுக்கு அதிக முக்கியத்துவத்தை ஏற்படுத்தியுள்ளது.

ஸ்டீவ்வோவுக்குக்கு விடைகொடுக்கும் ஆட்டம் என்பதால் உணர்ச்சி மிகுந்த மோதலாக இருக்கும் என்று இந்திய கப்டன் கங்குலி கருத்துத் தெரிவித்துள்ளார். இந்த உணர்ச்சிக்கு இந்திய வீரர்கள் மயங்கி விடக்கூடாது என்றும் அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார். முக்கியமான இந்த ஆட்டம் குறித்து கங்குலி கூறுகையில் - பொன்டிங் மற்றும் ஹெய்டன் ஆகியோர்தான், இந்திய அணிக்கு அதிக நெருக்கடி கொடுக்கிறார்கள். இவர்களை எளிதில் வீழ்த்திவிட்டால், பின்னர் வரும் வீரர்களுக்கு அதிகப்படியான பதற்றம் உண்டாகும். இதை இந்திய பந்து வீச்சாளர்கள் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்றார்.

ஓய்வு பெறப்போகும் ஸ்டீவ் வோ வழக்கத்தைவிட அதிகப்படியான பதற்றத்தில் உள்ளார். இதுபற்றி அவர் கூறுகையில், இதுபோன்ற தவிர்க்க முடியாத சூழ்நிலை வாழ்க்கையில் ஒருமுறைதான் ஏற்படும். இதை சந்தித்துத்தான் ஆக வேண்டும். எனக்கு இதுவரை கிடைத்த அனுபவங்கள் என்னை, சகஜ நிலைக்கு கொண்டுவர உதவும் என்றார்.

சர்வதேச கிரிக்கெட்டில் அதிக வெற்றிகளை குவித்த கப்டன் என்ற பெருமையைப் பெற்றிருக்கும் ஸ்டீவ்வோ, மெல்போர்ன் டெஸ்ட் போட்டியின்போது காயம் அடைந்தார். இதனால் சிட்னி போட்டியில் அவர் களம் இறங்குவது சிக்கல் என்ற கருத்தும் நிலவுகிறது.

இந்தியா, அவுஸ்திரேலியா மற்றும் சிம்பாப்வே ஆகிய 3 அணிகள் மோதும் ஒருநாள் கிரிக்கெட் போட்டித் தொடர் எதிர்வரும் 8 ஆம் திகதி முதல் பெப்ரவரி 3 ஆம் திகதிவரை நடக்க உள்ளது. ஒவ்வொரு அணியும் தலா 3 முறை மற்ற அணிகளுடன் மோதவிருக்கின்றன. இந்தப் போட்டிக்கான அவுஸ்திரேலிய அணி நேற்று முன்தினம் அறிவிக்கப்பட்டது.

இந்திய பயணத்தில் இடம் பெற்ற வில்லியம்ஸ் மற்றும் காஸ் பரோவிட்ச் ஆகியோர் இந்த அணியிலிருந்து நீக்கப்படடுள்ளனர். அவுஸ்திரேலிய அணி விபரம் வருமாறு -

ரிக்கிபொண்டிங் (கப்டன்), கில்கிறிஸ்ட், பெவன், பிக் கெல், பிராக்கன், கிளார்க், கிலெஸ்பீ, பிரெட்லீ, ஹார்வி, ஹெய்டன், பிராட்ஹாக், மார்ட்டின், சைமண்ட்ஸ்.

# கிரிக்கெட் சுற்றுப்போட்டி மாகாண மட்டத்தில்

## தேசிய கிரிக்கெட் சபை ஏற்பாடு

இலங்கை தேசிய கிரிக்கெட் சபை, மாகாண மட்டத்திலான கிரிக்கெட் சுற்றுப் போட்டிகளை நடத்த நடவடிக்கைகளை எடுத்துள்ளது -

நாளை முதல் இந்தச் சுற்றுப் போட்டிகள் நடத்தப்படவுள்ளன. கிரிக்கெட் விளையாட்டின் தரத்தை மேம்படுத்தவே இத்தகைய போட்டிகளுக்கு ஒழுங்குசெய்யப்பட்டிருப்பதாக இலங்கை கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது.

அத்துடன் இலங்கை டெஸ்ட் அணியில் இடம்பெற்றுள்ள வீரர்களை மாவன் அத்தபத்து, முத்தையா முரளிதரன், மகேல ஜெயவர்தன, சமிந்தவாஸ் ஆகியோர் ஐந்து மாகாணங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் அணிகளுக்குத் தலைமையேற்கவுள்ளார்.

மாகாண மட்டத்தில் கிரிக்கெட்டை அபிவிருத்தி செய்யும் நோக்கிலேயே அந்த ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாக கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபைத் தலைவர் திலங்க சுமதிபால தெரிவித்தார்.

இலங்கை கிரிக்கெட் அணியின் முன்நாள் உபதலைவர் அரவிந்த டி சில்வா இதுகுறித்து தகவல் வெளியிடுகையில், சிறந்த வீரர்களைத் தெரிவுசெய்து கொள்வதற்கு இது நல்லவாய்ப்பாக அமையும் எனக் குறிப்பிட்டார்.

# டெஸ்ட் தர வரிசை பட்டியலில் ரிக்கிபொண்டிங் முதலிடத்தில்

டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் துடுப்பாட்ட வரிசைப் பட்டியலில் அவுஸ்திரேலிய வீரர் ரிக்கிபொண்டிங் முதலிடத்தைப் பெற்றுள்ளார்.

டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் அடிப்படையில் வீரர்களில் வரிசைப் பட்டியலைக் கூப்பர்ஸ் நிறுவனம் வெளியிட்டுள்ளது. இதில் துடுப்பாட்ட வரிசையில் அவுஸ்திரேலிய வீரர் ரிக்கிபொண்டிங் முதலிடத்தில் உள்ளார். அவர் 970 புள்ளிகள் பெற்று (சராசரி 56.36) இந்த இடத்தைப் பிடித்துள்ளார்.

மேற்கிந்தியத் தீவுகள் அணி வீரர் லாரா 897 புள்ளிகளுடன் 2 ஆவது இடத்திலும், அவுஸ்திரேலிய வீரர் மத்யூ ஹைடன் 893 புள்ளிகளுடன் 3 ஆவது இடத்திலும் உள்ளனர்.

இந்திய அணியின் புதிய நட்சத்திர வீரராக உருவெடுத்துள்ள ராகுல் டிராவிட் 881 புள்ளிகளுடன் 4 ஆவது இடத்தைப் பிடித்துள்ளார். பாகிஸ்தான் வீரர் இன்சமாம்-உல் ஹக் 817 புள்ளிகளுடன் 5



பொண்டிங்

ஆவது இடத்தையும், தென் ஆபிரிக்க வீரர் கலிஸ் 790 புள்ளிகளுடன் 6 ஆவது இடத்திலும் உள்ளனர்.

மற்றொரு தென் ஆபிரிக்க வீரரான கிப்ஸ் 7 ஆவது இடத்திலும், நியூஸிலாந்து வீரர் ரிச்சார்சன் 8 ஆவது இடத்திலும், தென் ஆபிரிக்க வீரர் கிறிஸ்டன் 9 ஆவது இடத்திலும், இலங்கை வீரர் மகேல ஜெயவர்த்தன 10 ஆவது இடத்திலும் உள்ளனர்.

பந்து வீச்சில் இலங்கை அணி சுழற்பந்து வீச்சாளர் முரளீதரன் 908 புள்ளிகளுடன் முதலிடத்தில் உள்ளார். அவருக்கு அடுத்தபடியாக தென் ஆபிரிக்க வீரர் பொல்லக் 877 புள்ளிகளுடன் 2 ஆவது இடத்தில் உள்ளார்.

அக்தர் (பாகிஸ்தான்), மெக்ராத் (அவுஸ்திரேலியா), கிலெ[illegible] (அவுஸ்திரேலியா), நிதினி (தெ[illegible] ஆபிரிக்கா), டப்பெ (நியூஜிலாந்து), கும்ளே (இந்தியா), ஹர்பஜன்சிங் (இந்தியா), கல்லிஸ் (தென் ஆபிரிக்கா) ஆகியோர் முறையே 3 முதல் 10 ஆவது இடத்தையு[illegible] பிடித்துள்ளனர்.

# தி.மு.க - காங்கிரஸ் இடையில் கூட்டணி அமைப்பது உறுதி

## ஜெய்பால் ரெட்டி தகவல்



(டெல்கியில் சோனியா - ராம்விலாஸ் பஸ்வான் சந்திப்பில்)

(புதுடெல்லி)

பாரதீய ஜனதாக் கூட்டணியிலிருந்து தி.மு.க. விலகியதைத் தொடர்ந்து தி.மு.க - காங்கிரஸ் இடையே கூட்டணி அமைப்பதற்கான முயற்சிகள் நடைபெற்றுவருகின்றன.

காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி, தி.மு.க.தலைவர் கருணாநிதிக்கு தொலைபேசிமூலம் புத்தாண்டு வாழ்த்துக்களைத் தெரிவித்தார். இது தி.மு.க. - காங்கிரஸ் கூட்டணிக்கு அச்சாரமாக அமைந்திருப்பதாகக் கூறப்படுகிறது.

இந்தநிலையில் காங்கிரஸ் செய்தித் தொடர்பாளர் ஜெய்பால் ரெட்டி நேற்றுமுன்தினம் டெல்கியில் நிருபர்களுக்குப் பேட்டியளித்தபோது கூறியதாவது -

தமிழ்நாட்டில் தி.மு.கவுடன் காங்கிரஸ் கூட்டணி அமைப்பது உறுதியாகிவிட்டது. இதுபோல மதிமுக கூட்டுச்சேருவது பற்றி காங்கிரஸ் தலைமைதான் முடிவுசெய்யவேண்டும்.

தேர்தலுக்கு முன்பாக மதச்சார்பற்ற கட்சிகளை ஒரே குடையின்கீழ் கொண்டுவரவேண்டும் என்பதே காங்கிரஸ் கட்சியின் குறிக்கோள் ஆகும்.

பொதுவாக குறைந்தபட்ச செயல திட்டத்தின் அடிப்படையில் மதச்சார்பற்ற கட்சிகள் இணைந்து அதிகபட்ச இடங்களைப் பெறவேண்டும் என்பதே எங்கள் நோக்கமாகும்.

இது தொடர்பாக இந்திய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் சுர்ஜித் மற்றும் தி.மு.க.தலைவர் கருணாநிதி ஆகியோருடன் பேசியுள்ளார். இன்னும் பல தலைவர்களுடன் பேசவுள்ளார்.

விடுதலைப் புலிகளுடன் தி.மு.க. மென்மையாக நடந்துகொணடதாக கடந்த காலங்களில் குறை கூறப்பட்டதே என்று ஜெய்பால் ரெட்டியிடம் நிருபர்கள் கேட்டனர்.

அதற்கு அவர் பதிலளிக்கையில் மதச்சார்பின்மை என்பதுதான் இப்போதைய தலையாய பிரச்சினை கடந்தகால முரண்பாடுகளைப் புதைப்பது அவசியம் என்று கூறினார்.

இதேவேளை லோக் ஜன சக்தி தலைவர் ராம்விலாஸ் பஸ்வானை நேற்று காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி சந்தித்துப் பேசினார்.

இதுகுறித்து சோனியா காந்தி நிருபர்களிடம் கூறுகையில் -

பஸ்வானுக்கும் அவரது குடும்பத்தினருக்கும் புத்தாண்டு வாழ்த்துக்களைத் தெரிவிக்க வந்தேன். அதோடு அரசியல் பற்றி சிறிதளவு விவாதித்தோம் என்று தெரிவித்தார்.

இதுபற்றி ராம்விலாஸ் பஸ்வான் கூறுகையில் பாரதீய ஜனதாவை எதிர்க்க மதச்சார்பற்ற கூட்டணி அமைப்பதற்கான சூழ்நிலை பற்றிப் பேசினோம் என்றார்.

# இந்திய நாடாளுமன்றத் தேர்தல்: வாஜ்பாய் விரைவில் அறிவிப்பார்

இந்திய நாடாளுமன்றத் தேர்தல் எதிர்வரும் ஏப்ரல் அல்லது மே மாதம் 2 ஆவது வாரத்தில் நடைபெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதுபற்றிய இறுதி முடிவை எதிர்வரும் 11 ஆம் திகதி பிரதமர் வாஜ்பாய் வெளியிடுவார்.

தற்போதைய நாடாளுமன்றத்தின் பதவிக்காலம், எதிர்வரும் செப்டெம்பர் மாதம் வரை உள்ளது. சமீபத்தில் நடந்துமுடிந்த 4 மாநில சட்டசபை தேர்தலில் டெல்லி தவிர 3 மாநிலங்களிலும் பா.ஜனதா அமோக வெற்றிபெற்றது.

அதைத் தொடர்ந்து, நாடாளுமன்றத்துக்கு முன்கூட்டியே தேர்தல் நடத்த பாரதிய ஜனதா முடிவுசெய்தது. எனினும் அதை வெளிப்படையாக அறிவிக்காமல், தேர்தலுககான ஆயத்தப் பணிகளில் பாரதிய ஜனதா மும்முரமாக ஈடுபடத் தொடங்கியது.

துணைப் பிரதமர் அத்வானி, ஆதரவுக் கட்சியான தெலுங்குதேசம் - தலைவர் சந்திரபாபு நாயுடுவை ஏற்கனவே சந்தித்து பேசினார். தற்போது, சிவசேனா தலைவர் பால் தாக்ரேவை அவர் சந்தித்துப் பேசி இருக்கிறார். இருவருமே முன்கூட்டியே தேர்தல் நடத்தும் பா.ஜனதா முடிவை ஆதரித்துள்ளனர்.

இந்தநிலையில், எப்ரல் இறு[illegible]யில் அல்லது மே மாதம் 2 ஆவது வாரத்தில் நாடாளுமன்றத் தேர்தலை நடத்துவது பற்றி பா.ஜனதா பரிசீலித்து வருகிறது. எதிர்வரும் 11 ஆம் திகதி ஹைதராபாத்தில் பா.ஜனதா கட்சியின் தேசிய செயற்குழுக்கூட்டம் தொடங்குகிறது. அதன் தொடக்க நிகழ்ச்சியில் பங்கேற்றுப் பேசும் பிரதமர் வாஜ்பாய், எப்போது தேர்தல் என்பதை சூசகமாக அறிவிப்பார் எனத் தெரியவருகிறது.

# மூன்றாவது அணி அமைக்கும் முயற்சிகள் டெல்கியில் மும்முரம்

(புதுடெல்லி)

உத்தரப் பிரதேச முதலமைச்சர் முலாயம்சிங்கை சந்தித்துப் பேசியதைத் தொடர்ந்து, மத்திய அமைச்சர் ஜோர்ஜ் பெர்னாண்டசும், 3 ஆவது அணிக்கு வருவாரா? என்ற கேள்வி எழுந்துள்ளது.

இந்திய நாடாளுமன்றத்திற்கு ஏப்ரல் அல்லது மே மாதத்தில் தேர்தல் நடைபெறும் சூழ்நிலையில் முக்கிய அரசியல் கட்சிகள் கூட்டணி அமைப்பதில் முழுமூச்சுடன் செயற்பட்டுவருகின்றன.

உத்தரப்பிரதேச முதலமைச்சரும, சமாஜ்வாடி கட்சித் தலைவருமான முலாயம்சிங் யாதவ் நேற்றுமுன்தினம் டெல்லியில், இ.கம்யூனிஸ்ட் தலைவர் ஹர்கிஷன்சிங் சுர்ஜித்தைச் சந்தித்துப் பேச்சு நடத்தினார்.

பின்னர் மத்திய அமைச்சரும், பாரதிய ஜனதா தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணியின் ஒருங்கிணைப்பாளருமான ஜோர்ஜ் பெர்னாண்டசையும் அவர் சந்தித்துப் பேசினார். இந்தச் சந்திப்பு நீண்ட நேரம் நடைபெற்றது.

பின்னர் நிருபர்களுக்குப் பேட்டி அளித்த முலாயம்சிங், 3 ஆவது அணி அமைப்பது குறித்து சுர்ஜித்துடன் பேசியதாகத் தெரிவித்தார். ஜோர்ஜ் பெர்னாண்டசுடன் கூட்டணி பற்றிப் பேசவில்லை என்று அவர் கூறினாலும், 3 ஆவது அணி அமைப்பது தொடர்பாகத்தான் பெர்னாண்டசுடன் அவர் பேசியிருக்கலாம் என்று கூறப்படுகிறது.

முலாயம்சிங் யாதவ் தலைமையில் 3 ஆவது அணி அமைப்பது குறித்து ஏற்கனவே ஜார்ஜ் பெர்னாண்டஸ் திட்டமிட்டு இருந்தார்.

ஆனால், 'தெகல்கா' ஊழல் விவகாரத்தில் சிக்கி இருந்ததால், தேசிய ஜனநாயக கூட்டணியில் இருந்து வெளியேறுவது தனக்குச் சிக்கலை மேலும் அதிகரித்துவிடும் என்று கருதியதால், உடனடியாக 3 ஆவது அணி முயற்சியில் ஜோர்ஜ் பெர்னாண்டஸ் இறங்கவில்லை. இப்போது முலாயம்சிங்குடன் பேச்சு வார்த்தை நடத்தி இருப்பதன்மூலம் மீண்டும் அவர் 3 ஆவது அணிக்கு வருவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஆனால் முலாயம் - பெர்னாண்டஸ் சந்திப்புக் குறித்துக் கருத்துத் தெரிவித்த இ.கம்யூனிஸ்ட் தலைவர் சுர்ஜித், "எந்த அணி அமைப்பது தொடர்பாகவும் அவர்கள் பேச்சு நடத்தவில்லை" என்று மறுத்தார்.

"நாங்கள் யாரையும் எங்கள் பக்கம் இழுக்க விரும்பவில்லை. ஆனால், பாரதிய ஜனதாவில் தங்களுக்கு ஏற்பட்ட அனுபவங்களில் அங்கிருந்து வருபவர்களை வரவேற்போம்" என்று சுர்ஜித் மேலும் தெரிவித்தார்.

# மங்கையர் வெறுக்கும் சீதனம்



சீதனம் இன்றேல் சீரழிவுதான் என்ற கேள்விக்கணையைத் தொடுத்துப் பார்த்தால், ஆம் என்ற பதிலைத்தான் இன்றைய மங்கையர் கூறுகின்றனர். இதில் சம்பந்தப்பட்டவர்களின் அனுபவங்களைக் கேட்டறிவோமானால்- வெட்கத்தில் தலை குனியத்தான் வேண்டும்.

நாகரிக மோகம் அதிகரிக்க அதிகரிக்க- சீதனம் வாங்குவதும் ஏன் கொடுப்பதும் ஒரு நாகரிகம் ஆகிவிட்டது. அதாவது, வசதி படைத்தவர் தமது மகளைக் கரைசேர்க்கும் போது வீடு, காணி, வயல், புலம், நகை, கார், என சீதனமாகக்கொடுத்து, ஊராரின் புகழ்ச்சிக்கும் உட்படுகின்றார். இன்னும் சிலரோ, மகனுக்கு சீதனம் வாங்காமல் மணம் முடிப்பது நாகரிகம், கௌரவக்குறைவான செயல் என்று எண்ணி சீதனத்தைப் பெற முயல்கின்றனர்.

சீ.... இறைவனால் படைக்கப்பட்ட மனித உயிர்களுக்கு இல்லற வாழ்க்கையையும் அமைத்துக் கொடுப்பதற்கு விலைகள் நிர்ணயிக்கவேணடுமா? இந்தச் சீர்கெட்ட சீதனத்தால் சீழியும் பெணகள் எத்தனை? எத்தனை? சற்றுத் தலையை நிமிர்த்தி சிந்தித்துப் பாருங்கள்...!

ஒரு பெண்ணுக்குப் பிறந்ததில் இருந்து சாகும்வரை நிம் மதியற்ற வாழ்க்கைதான். சிலர் பிறந்த வீட்டில் சொகுசு வாழ்க்கை வாழ்ந்திருந்தாலும், புகுந்த வீட்டில் பல விதமான பிரச்சினைகளுக்கும், இன்னல்களுக்கும் முகம் கொடுக்கவேண்டியர்களாகிவிடுகின்றனர். பலருக்கோ பிறந்த வீட்டிலும், மதிப்பற்ற வாழ்க்கை. புகுந்த வீட்டிலும் அதேநிலை. இது இறைவனால் பெண்ணுக்கு வழங்கப்பட்ட சாபக்கேடா? இல்லவே இல்லை. எம்மவர்களால் இழைக்கப்படும் சாபக்கேடு.

இறைவன் மனிதனைப் படைத்தானே தவிர, சீதனத்தை வாங்கு என்றா எழுதிவைத்தான். ஏட்டிலே பெற்றோர்களே தாய்மார்களே இவற்றைப் படித்துவிட்டு சிந்தனா சக்தியை தவறான பாதைக்கு இட்டுச்செல்லாதீர்கள். மூத்தவர் சமுதாயம் - இளைய சமுதாயத்திற்கு எடுத்துக்காட்டாக, சமுதாய மேம்பாட்டுக்காக நம் சந்ததியினரின் எழுச்சிப் பாதைக்காக வாழவேண்டுமே தவிர, அவர்களை அழிவுப் பாதைக்கு அழைத்துச் செல்லக்கூடாது.

உண்மையில் சீதனம் என்பது ஒரு வித இலஞ்ச மோசடியைப் போன்றது என்பது பலரின் அபிப்பிராயம் ஆகும். இதனை நாமே தடுத்து நிறுத்தி, எல்லாப் பெண்களுக்கும் வாழ்வளிக்க முன்வருவதே புத்திசாலித்தனம் மட்டுமன்றி, போற்றுதற்குரிய விடயமாகும். அப்படியும் முடியாதுவிட்டால், அரசாங்கத்தால் இம்முறை தடைசெய்யப்படவேண்டும்.

எங்கள் மத்தியில் எத்தனையோ இளங்கன்னிப் பெண்கள் பணம் இன்மையால் காலகாலத்திற்கும் கரைசேர முடியாமல் தவித்துக்கொண்டிருக்கின்றனர். இவர்களுக்கு இளமை இருந்தும், அழகிருந்தும், அன்பு, அடக்கம் போன்ற சகல இலட்சணங்கள் இருந்தும் - சீதனம் என்ற பேய் குறுக்கே நிற்பதால் வாழவழியின்றி நடைப்பிணமாகியுள்ளனர்.

சீதனம் என்ற நச்சுப் பாம்பை சுற்றிவளைத்துக்கொண்டிருப்பவர் யார்? இதற்கு பெண்களும் காரணம் தான் - தன் மகனுக்கும் பெண்பார்ப்பதற்கு முதலே தாய் சீதனத்தைப் பற்றி விசாரித்து விடுவாள். தாய்மார்களே! நீங்கள் யாவரும் சீதனத்தோடும், வீடு நிறையப்பொருள் பண்டத்துடன் தான் கணவன் வீடு வந்து சேர்ந்தீர்களா? மனச்சாட்சி என்பது உங்களுக்கும் உள்ளதல்லவா? எங்கள் பெண்ணினமே பெண்களைத் தாக்கி, அவர்களின் எதிர்காலத்தை சீதனத்தால் மதிப்பிடலாமா? உங்கள் மகன் குருடனாக, செவிடனாக, நொண்டியாக, நோயாளியாக இருந்து, நீங்கள் சீதனத்தை எதிர்பார்த்தால் அதை ஏதோ ஒரு சமாதானச் சாட்டாக எடுத்துக்கொள்ளலாம். ஆனால், நன்றாக கைநிறைய உழைப்பவனுக்கன்றோ அதிக சீதனம் எதிர்க்கப்படுகின்றது. கேவலம்! தொட்டுத் தாலி கட்டியவளைக் காலம் முழுவதும்தன் சொந்தக்கைகளால் காப்பாற்ற வழியில்லாத கோழை ஜென்மங்கள்.

பெண்கள் படித்து, பட்டம்பெற்று, தொழில் புரிந்தாலும் சீதனம் தேவை. அப்படியானால் திருமணத்தின் பின் அவளின் உழைப்பு யாருக்குச் சொந்தமாகின்றது? இத்தகைய அவலநிலைக்கு முக்கிய காரண கர்த்தா யார்? சீதனம் வாங்கி மணம் முடிக்கும் ஆண்களை, பெண்கள் வேண்டாம் என ஒதுக்கினால், அவர்களின் ஆட்டம் குறிப்பிட்ட காலத்துக்கு மட்டுமே நிலைத்திருக்கும். ஆனால், பெண்கள் பெற்றோர்களுக்குக் கட்டுப்பட்டு எதுவாயினும் சரியென தலையசைத்து வாழ்க்கைப்பட்டுவருகின்றனர்.

மங்கையரே! ஒரு நாட்டுக்குச் சுதந்திரம் தேவை என்றால், அங்கு போராட்டம், தியாகம் அத்தியாவசியமானது. அதுபோலவேதான், வருங்கால சந்ததியினருக்காகப் பெண்கள் சீதனத்தை எதிர்த்து போராட வேண்டும் என்பதற்காகப் பல பெண்களின் வாழ்க்கை தியாகங்களாக மாறலாம். சீதனம்கொடுத்து நிம்மதியற்று வாழ்வதைவிட, இந்த தியாகமே மேலானது என்பதில் எந்த வித சந்தேகமும் இல்லை.

கன்னியர்களைக் கண்டவுடனே காதல் கொள்ளும் ஆணினம் - கல்யாணம் என்ற பேச்சை எடுக்கும்முன், சீதனம் என்ற எதிர்பார்ப்பைத்தான் தன் முகத்தில் தவழவிடுவான். இறுதியில் காலம் முழுவதும் கண்ணீரும், கனவுமாக வாழப்போகிறவள் பெண் என்பவள்தான்.

சகோதரிகளே! நீங்கள் ஒரு போராட்டத்தைத் தொடராவிட்டால், இந்தமுறையை காலங்காலமாக மாற்றியமைக்க முடியாது. நாளுக்குநாள் சீதனத்தின் வேகம் அதிகரிக்கின்றதே தவிர, குறைந்தபாடில்லை.

பெண் என்பவள் என்ன சந்தைச் சரக்கா? அவளை விலைகொடுத்து ஆணிடம் பணயம் வைப்பதைவிட, திருமணம் முடிக்காமல் எதிர்கால மங்கையர்களுக்காகச் சீதன ஒழிப்பு என்ற போராட்டத்தில் குதித்து வெற்றி மாலைகளை அவள் சூடி நலமாக வாழ ஆதரவுக்கரங்கள் உயரட்டும்.

கி.கமலதாஸ்

# நீங்களும் செய்யலாம்

**பேப்**பர் வெயிட் என்றவுடன் நினைவுக்கு வருவது ஒரு கண்ணாடி குமிழ்தானே, இங்கு நாம் செய்து பார்க்கப்போவது கூழாங்கல் பேப்பர் வெயிட். இது உங்களுக்கு நல்லாய் பிடிக்கும்.

எம்.சீல் கலவையில் செய்யப்போகும் இதற்கு, கை வேலைப்பாடு தெரிந்திருக்க வேண்டும் என்ற அவசியமில்லை. பூக்கள் செய்து அதற்கு பெயின்ட் அடிக்கப் போகின்றோம். ஆனால், பெயின்டிங் தெரிந்திருக்க தேவையில்லை. ஆர்வம் இருந்தால் போதும்.

இதனைப் பேப்பர் வெயிட்டாக மட்டுமன்றி, ஷோக்கேஸ் அழகு சாதனமாகவும், பரிசுப் பொருளாகவும்கூட பயன்படக் கூடியதும். இதற்கு அதிக செலவு தேவையில்லை. கை வேலைப்பாடு மட்டுமல்ல, நல்ல கைத்தொழிலும் கூட.

இது செய்வதற்குத் தேவையான பொருட்கள் - கூழாங்கல் அல்லது வழுவழுப்பான சாதாரணகல் - 1, எம்.சீல் (M-Seal) பசை - 1 வெள்ளைநிறப் பைக்கற் (தண்ணீர் குழாய்களில் கசிவுகளை அடைக்க பயன்படும் பசை), கலர் - பச்சை மற்றும் இளம் சிவப்பு ஒவ்வொரு போத்தல், தூரிகை - NO-0, முகப்பவுடர் - சிறிதளவு.

செய்யும் முறை - கூழாங்கல்லை எடுத்துக் கழுவிச் சுத்தம் செய்யுங்கள். எம். சீல் பசையை எடுத்து, அதில் இரண்டு நிறங்களை சம அளவில் சேர்த்துக்கொள்ளவும். இதை வழவழப்பான தரையில் போட்டு நன்றாக பிசையுங்கள். ஒரு பக்கெற்றில் உள்ள எம்.சீல் முழுவதையும் பிசைந்து வைத்துக்கொண்டால், பூக்கள் முழுவதையும் செய்வதற்குள் கலவை காய்ந்து இறுகிவிடும். எனவே, எம்.சீலின் கலவைகளையும் கொஞ்சமாக எடுத்து,



முதலில் வெட்டி எடுத்துக்கொண்டு சுண்டங்காய் அளவு உருண்டையாக எடுத்து உள்ளங்கையில் வைத்து உருட்ட வேண்டும். அதற்குமுன், உள்ளங்கையில் சிறிதளவு முகப்பவுடரைப் பூசிக் கொள்ளுங்கள். எம்.சீல் கலவை கைகளில் ஒட்டாமல்வரும். உருண்டையை இடது உள்ளங்கையல் வைத்து உருண்டையின் ஒரு பகுதியை வலது ஆள்காட்டி விரலால் தேய்த்தால் (படத்தில் உள்ளபடி), நீர்த்துளி போன்ற வடிவம் கிடைக்கும். ஒரு பவிற்கு ஒரு உருண்டை போதுமானது. இப்பொழுது கலவையின் கூரான பகுதியினை இடதுகையில் பிடித்துக்கொண்டு உருண்டையான பகுதியின் நடுவில் கத்திரிக்கோலால் வெட்டிவிடுங்கள். இரண்டு இதழ்களாகப்பிரியும். அதேபோல இரு இதழ்களுக்கும் நடுவில் வெட்டுங்கள். நான்கு இதழ்களாகப் பிரியும்.

ஒவ்வொரு இதழ்களையும் விரல்களால் தட்டையாக அமுக்கிவிட்டு ஓரங்களைப் படத்தில் உள்ளபடி வளைத்து விடவேண்டும். நான்கு இதழ்களையும் வளைத்த பிறகு பார்த்தால் அழகிய பூ கைகளில். இதை ஒரு மணிநேரம் உலரவிடுங்கள். கல்போல இறுகிவிடும். இதேபோல மூன்று பூக்கள் செய்துகொள்ளுங்கள். ஒரு கல்லுக்கு மூன்று பூக்கள் போதுமானது. மேலும் சேர்ப்பது அவரவர் விருப்பம்.



இலை செய்யும் முறையும் பூக்கள் செய்வதுபோலவே கோன் மாதிரி உருண்டை செய்து, இடது உள்ளங்கையில் வைத்துக்கொண்டு, வலது ஆள்காடடி விரலால் முழுவதும் அழுத்தி விட்டால் இலைவடிவம்வரும். அதன் மேல்கத்தியால் நரம்புகளைப் போல அழுத்தி விட வேண்டும் அதன்பின் அதன் அடிப்பகுதியை அழுத்திப் பிடித்துக் கொண்டு, நுனியை வளைத்துவிட்டால் இயற்கை இலைபோலவே இருக்கும். அதேபோல நான்கு இலைகளைச் செய்து ஒரு மணித்தியாலம் காய விடுங்கள்.

இளம் சிவப்பு நிறத்தை பூக்களுக்கும், பச்சைநிறத்தை இலைக்கும் பூசுங்கள். மினுமினுப்பாகவும் அழகாகவும் இருக்கும்.

சுத்தம் செய்யப்பட்டுள்ள கூழாங்கல்லை எடுத்து, எந்தப் பகுதியில் பூக்கள் பொருத்த வேண்டுமோ, அந்த இடத்தில் சிறிது எம். சீல் கலவையை வைத்து ஒட்டுங்கள். அதுகாயும் முன்பே அதன் மேல் பச்சைநிற பெயின்ரை பூசுங்கள். பின் உடனே பூக்கள் இலைகளை மாற்றி மாற்றி செருகி விடுங்கள். சற்று நேரம் காயவிடுங்கள். அழகான பேப்பர் வெயிட் தயார்.



தேவையான வாழ்த்துக்களைக் கல்மீது எழுதினால், பரிசுப்பொருள் தயார். கல்லை அப்படியே விட்டாலும் அழகு. பெயின்ட் அடித்தால் கூடுதல் அழகைத்தரும். கூழாங்கல் கிடைக்காதவர்கள் கருங்கல்லைக்கூட உபயோகிக்கலாம். கருங்கல்லில் பெயின்டுக்குப் பதிலாக வாணிஸ் அடித்தால் பள்பளப்பாகவும் இயற்கையாகவும் இருக்கும்.

# மேலைத்தேயவர்களும் இசைக் கலையை பயில்வதில் மிகுந்த ஆர்வம் கொண்டவர்கள்

**மாலைவேளை ஒன்றில் நல்லூர் திருஞானசம்பந்தர் ஆதீனத்தின் மண்டபத்தில் இசைக் கலை ரசிகர்களின் கூட்டம் நிரம்பியிருந்தது. இசை நிகழ்ச்சிகள் ஆரம்பமாவதற்கு முன்னர் தலைமையுரை, ஆசியுரை, வாழ்த்துரை, கௌரவிப்பு என்று உரைகள் இடம்பெற்றன. குறித்த நேரம் வந்தது. எல்லலோரும் எதிர்பார்த்த அந்த நிகழ்ச்சி தொடங்கியது. மண்டபத்தில் ஒருவருமே இல்லை. எல்லோரும் அந்த நிகழ்ச்சியில் மெய்மறந்துபோயிருந்தார்கள். லண்டனிலிருந்து வந்துள்ள சிவசக்தி சிவநேசனின் இசை நிகழ்ச்சியின்போதுதான் இந்தநிலைமை. நிகழ்ச்சி முடிந்து நாங்கள் அவரை சந்தித்தோம். -**



சிவசக்தி சிவநேசன் வாசகர்களுடன் இப்படிப் பேசுகிறார். ரம்ப இசைக்கலையை மருதனார் மடத்தில் வசித்த என்.சண்முக ரத்தினத்திடம் கற்றுக்கொண்டேன். எனது நாலுவய தில் இசைக்கலையைப் பயிலத் தொடங்கி னேன். எனது ஆறாவது வயதில் வீரமணி ஐயரிடம் இசை நடனம் கற்கும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது.

இந்தியாவிலிருந்து சித்தூர் சுப்பிரமணிய பிள்ளை இங்குவந்து, இராமநாதன் நுண்கலைப் பீடத்தில் கற்பித்தார். அவரிடமும் இசைக்கல்வி பயின்றேன்.

'சங்கீத ரத்தினம்' என்னும் பட்டப்படிப்பு கற்பதற்கு எனக்கு அப்போது வாய்ப்பு ஏற்பட்டது.

பின்னர் இந்தியாவிற்குச் சென்றேன்.

இந்தியாவில் இருந்தபோது நான் நிறைய இசைக்கச்சேரிகளைப் பார்ப்பேன். அப்போது கச்சேரிகளைப் பண்ணியவர்கள் பாராட்டப்படுவதும், அவர்களை உயர்ந்த நிலையில் வைத்து எண்ணப்படுவதையும் கண்டு பெருமிதம் கொண்டேன்.

பாடசாலையில் மாணவர்களுக்கு சங்கீதத்தை சொல்லிக்கொடுப்பது எவ்வாறு? ஒரு கச்சேரியில் நிகழ்ச்சிகளைச் செய்துகொள்வது எப்படி? ஒரு மணித்தியாலக் கச்சேரி, அரை மணித்தியாலயக் கச்சேரி ஆகியவற்றில் பாடல்களை எவ்வாறு சேர்த்துக்கொள்ளல், பக்கவாத்தியங்களை அமைத்துக்கொள்ளல் என்பது போன்ற விடயங்களைக் கற்றுக்கொண்டேன்.

சிங்கப்பூர், மலேசியா போன்ற நாடுகளில் ஒரு வருடம் நான் சென்று கச்சேரிகளை நடத்தினேன். அங்கிருந்து, யாழ்ப்பாணம் வந்தேன். யாழ்ப்பாணத்தில் வேம்படி மகளிர் கல்லூரியில் இசையாசிரியராகப் பணிபுரிந்தேன்.

அந்தப் பதவிக்கு வேம்படி மகளிர் கல்லூரி அதிபரின் தூண்டுதலால் விண்ணப்பித்து, இசையாசிரியர் பதவியில் பணிபுரிந்தேன். இராமநாதன் அக்கடமியில் சுமார் ஏழுவருடம் இசைப் பேராசிரியராகக் கடமைபுரிந்தேன். இந்த சமயத்தில் எனக்குத் திருமண ஏற்பாடுகள் நடைபெற்றன. எனக்கு நிச்சயம் செய்யப்பட்டவர் சீனாவில் அப்போது தங்கியிருந்தார். நானும் சீனாவுக்குப் போகவேண்டிய ஒரு நிர்ப்பந்தம் தோன்றியது.

அப்பேரதுதான் சீனாவுக்கு கித்தார் மேதை ரவிசங்கர் வந்திருந்தார். ஒரு கச்சேரி ஒன்றை அவர் நடத்தினார். நான் முன்வரிசையில் இருந்து அந்தக் கச்சேரியைப் பார்த்துக்கொண்டிருந்தேன். அந்த நிகழ்ச்சி முடிய நான் வீட் டுக்குச் சென்று அழுதேன். நான் இந்த இடத் தைவிட்டு கண்டிப்பாகச் செல்லவேண்டும் என்று கணவரிடம் சொன்னேன். என்னால் இசையைக் கற்றுவிட்டு பேசாமல் ஒரு இடத்தில் இருக்கமுடியவில்லை.

லண்டனுக்கு கணவர் சென்ற அந்த வேளையில், எட்டு மாதங்கள் இந்தியாவில் இருந்தேன். இந்தியாவில் என்னுடைய இசைக் கலையை வளர்த்துக்கொண்டேன். இசையில் மேற்கொண்டு என்ன கற்கமுடியுமோ அதை இந்தியாவில் கற்றுக்கொண்டேன். லண்டனுக்குச் சென்றேன். மாத்தூர் கிருஷ்ணமூர்த்தி என்பவர் லண்டனில் பாரதி வித்தியாபவன் நடத்திக்கொண்டிருந்தார். அவரிடம் கொடுக்கும்படி தந்த கடிதத்தை கொடுத்தேன். அவர் என்னை அழைத்துச்செனறு பாரதி வித்தியா பவன் வகுப்புக்கள் எல்லாவற்றையும் காண்பித்து, உன்னுடைய சேவை இங்கு தேவைப்படு கின்றது. நீ பாரதி வித்தியாபவனில் இசை கற்றுக்கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

முதன்முதலில் லண்டனில் இசைக்கல்வி கற்றுக்கொடுக்கின்றபோது நான் மிகவும் சிரமப்பட்டேன். எங்களுடைய பண்பாடு, நாங்கள் கற்றுக்கொண்டவிதம் யாவும் வேறுபட்டிருந்தது. லண்டனிலுள்ள பிள்ளைகளோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது, நமது பண்பாடு வேறுபட்டே அமைந்திருந்தது.

லண்டனில் உள்ளவர்கள் மேல்நாட்டு உடைகளைப் போட்டுக்கொண்டு வருவார்கள். இது போடவேண்டாம் பாவாடை தாவணி போட்டுக்கொண்டுவா என்று கூறினால், அவர்கள் முதலில் கேட்பது ஏன் என்ற ஒரு கேள்வியைத்தான். அப்படி அவர்கள் கேட்பதற்கு முன்னரே நான் அதனை விளங்கப்படுத்தி விடுவேன்.

இன்றும் என்னுடைய வகுப்பை வந்து பார்த்தால் - பண்பாடு, கலாசாரம், அவர்கள் பேசுவது எல்லாமே இதற்குத்தான் முதலிடம். இதற்குப்பின்னரே இசை கற்றுக் கொடுக்கப் படும்.

கலையைக் கற்றுக்கொள்வதற்காக லண்டனில் எடுத்துக்கொள்ளும் முயற்சி பாராட்டத்தக்கது என்றுதான் கூறவேண்டும். லண்டனிலுள்ள ஒவ்வொரு குடும்பத்திலும் யாராவது ஒருவர் ஏதேனும் ஒரு கலையைப் பயின்று அரங்கேற்றம் செய்து கொண்டிருப்பார் என்ற நிலையுள்ளது.

என்னிடமே 35 மாணவர்களுக்குக் கிட்ட வீணை, வாய்ப்பாட்டைக் கற்று அரங்கேற்றம் செய்துள்ளார்கள்.

ஏனையோரைப்போல முதற்கச்சேரி செய்யும்போது நான் அதிகம் பயப்படவில்லை. என்னுடைய குடும்பத்தவரும், என்னுடய ஆசிரியர்களும் என் முதற்கச்சேரியின் ஒழுங்குகளைச் செய்து நன்றாக அமைய வழிசெய்தார்கள். மிகுந்த எதிர்பார்ப்புக்களுடனும், சந்தோசத்துடனும் கச்சேரிகளைச் செய்தேன்.

என்னுடைய மாணவர்களுக்கு நான் அரங்கேற்றம் செய்யும்போது, மிகவும் சிரமப்பட்டுத்தான் ஆரம்பத்தில் செய்தேன். எனக்குக் கற்றுக்கொடுத்தவர்கள் அரங்கேற்றம் செய்தல் எப்படி என்ற முறைகளைச் சொல்லித் தரவில்லை. நானாகவே அவைகளைக் கற்றுக்கொண்டு, மாணவர்களின் அரங்கேற்றத்தினைச் செய்தேன். எந்தவிதமான பிரதி பலன்களையும் எதிர்பார்க்காமல் நான் என் மாணவர்களுக்கு அரங்கேற்றம் செய்து கொண்டேன்.

என்னுடைய நடன அரங்கேற்றத்தின் போது, என்னுடைய வீணையாசிரியர் வந்திருந்தார். என்னுடைய ஆசான் வீரமணி ஐயர் வந்திருந்தார். என்னுடைய குடும்பத்தினர் வந்து என்னை ஆசீர்வதித்தனர். இவையாவும் என்னால் மறக்கப்படாத நிகழ்ச்சியாகவே மனத்திரையில் உள்ளது.

ஒவ்வொருவரும் ஒவ்வொரு தனித்துறையில் திறமை பெற்றவர்களாக இருப்பார்கள். இந்த தனித்திறமைகளையுடைய யாவரிடமும் இசைக் கல்வியை பெற்றவள் என்ற வகையில், என்னிடம் இசை அனுபவங்கள் நிறைய உண்டு என்றுதான் கூறுவேன். இந்த வாய்ப்பை இறைவன் எனக்கு அருளியுள்ளான் என்றே கூறுவேன். இன்றைக்கும் ஒரு மாணவியாக இசைக்கலையின் நுணுக்கங்களைக் கற்றுவருகின்றேன்.

என்னுடைய குடும்பத்தில் அப்பா, அம்மாவைப் பொறுத்தவரை சிறுவயதில் இருந்தே எனக்கு ஆதரவை வழங்கி, என்னுடைய இசைக்கல்விக்கு ஒத்துழைப்பு தந்தனர். அவர்கள் தந்த ஒத்துழைப்பினைக் கண்டு எனக்கு வரப்போகின்ற கணவர் எனக்கு இவ்வளவு ஒத்துழைப்பு வழங்குவரா என்று பயந்தேன். என்னுடைய வாழ்க்கையில் இசைப்பணி - திருமணத்தின் பின்னர் எவ்வாறு செல்லப் போகின்றது என்ற ஏக்கம் இருந்தது.

இத்தகைய ஏக்கங்கள் யாவும் திருமணத்தின் பின்னர் கரைந்துபோயின. என்னுடைய அம்மா, அப்பா தந்த ஒத்துழைப்பை விடவும் எனக்கு பல்வகையிலும் எனது கணவர் ஒத்துழைப்பு வழங்கினார்.

என்னுடைய இசைப் பணிக்காகச் சீனாவில் கிடைத்த நல்லவேலையைக்கூட விட்டுவிட்டு, என் பணியோடு மிகுந்த ஒத்துழைப்பு வழங்கினார்.

என்னுடைய இசைக்கலையின் வளர்ச்சியில் எனக்கு கிடைத்த ஆசான் வீரமணி ஐயரின் பங்கு அளவிடற்கரியது. அவரின் முதல் மாணவி என்ற வகையில் நான் மிகவும் பெருமிதம் அடைகின்றேன்.



நான் லண்டனில் வாழ்ந்துகொண்டிருக்கின்றேன். ஆயினும், என் நினைவுகள் தாயகத்தைச் சுற்றியபடியேதான் உள்ளது. போர்ச்சூழல் என்னை இந்த நாட்டிலிருந்து வெளியேற்றிவிட்டது. ஆனால், எமது நாட்டைப்போல, எமது நாடடில் கிடைக்கும் மன நிம்மதியைப் போல வேறெங்கிலும் கிடையாது என்பதை உணர்கின்றேன்.

நான் எனது வேலையை விடுகின்ற காலத்தில் - எனது நாட்டில் ஆறுமாதமும் லண்டனில் ஆறுமாதமும் என்ற வகையில் வாழ்வதற்கான திட்டங்களைத் தீட்டியுள்ளேன்.

தற்போது செய்துவருகின்ற பணிகள் போல பல்வேறு வகையில் பணிகளைப் புரிவேன். சமூகத்தில் நலிந்துபோயுள்ள மக்களுக்கு என்னாலான பங்களிப்பை வழங்குவேன்.

இராமநாதன் அக்கடமியில் பரிசளிப்பு விழாவை நடத்துவதற்கு நிதி வசதி இல்லாமல் நிறுத்தியிருந்தார்கள் என்று கேள்விப்பட்டவுடன் நான் மிகவும் கவலை அடைந்தேன். ஒரு மாணவி பரிசு கிடைப்பதை எவ்வளவு பெருமையாக நினைக்கிறாள். அந்தப் பெருமையும், புகழும் மேடையில் பரிசு கிடைக்கும்போது அந்த மாணவிக்கு எவ்வளவு அதிகரிக்கின்றது. இந்த நிலை எல்லா மாணவர்களுக்கும் கிடைக்க வேண்டும் என்ற ஆசை என்னிடத்து பிறந்தது.

இதன் காரணமாக இராமநாதன் கல்லூரியில் பரிசளிப்பு விழாவை நடத்துவதற்கு வேண்டிய நிதியை நான் கொடுத்துதவினேன். தேவையானபோது வேண்டிய உதவிகளையும் செய்து வருகின்றேன். இவற்றை நான் இங்கு சொல்வது என்னுடைய பெருமைக்காக அல்ல.

என்னுடைய வேலை ஓய்வு காலத்தில் இப்படியான பணிகளைச் செய்யவேண்டும் என்ற உணர்வுடன் நான் இருக்கின்றேன் என்பதை இதன்மூலம் கூறிக்கொள்கின்றேன்.

இசைப் பயணத்தின்போது பல்வேறு சங்கடங்கள் ஏற்படுவதாகக் கூறுவார்கள். அந்த வகையில் எனக்கு எதுவிதமான சங்கடங்களையும் கடவுள் தரவில்லை. ஆண்டவன் தந்த கலையை அனைவருக்கும் கிடைக்கத்தக்க வகையில் ஒவ்வொருவரும் பயன்படுத்திக்கொள்ளவேண்டும். கலையின்மூலமாக மகிழ்ச்சியையும், மனத்திருப்தியையும் தானும் பெற்று, எல்லோருக்கும் கொடுக்கவேண்டும் என்பதே எனது எண்ணமாகும்.

**நேர்காணல்:- விக்கி, பூ.நகுலன்**

# பெண் நினைத்தால் எதையும் செய்யலாம்

உலகமுன்னேற்றம், சமூக வளர்ச்சி, குடும்பம், சந்தோசம், குழந்தை, பாரம்பரியம், அந்தஸ்து, மலர்ச்சி, கம்பீரம், வாழ்க்கை வசதிகள், 'திருப்தி - இவை அனைவருக்கும் வாய்க்க குடும்பத்தலைவியின் பங்கு என்ன தெரிந்துகொள்வோமா?

அவரவர் எண்ணமே வாழ்வு. நினைவுகளைச் செழிப்பாக வளர்க்கவும், சரியான மனநிலை வாய்ப்புக்களை நெருங்கச் செய்து, வாழ்வை வெற்றிப் பாதையாக்கும் சூழல் அனைவருக்கும் பரவும், அதிசயம் மலரும்.

இளம் பெண்களே! நீங்கள்தான் நாளைய உலகின் ஒளிவிளக்கு. நன்கு கல்வியில் சிறந்து விளங்கி, வேலையில் அமர்ந்து, திருமணத்திற்குக் காத்திருக்கும் பெண்ணா நீங்கள்? வாழ்க்கை எப்படி அமைந்தாலும், அதற்கு உயிர் அளித்து, உரமூட்டி, அமைதிகாத்து, குடும்பத்தை உயர்வாக்க உங்களால் முடியும். நீங்கள் அமைதியாகச் சிந்தித்துச் செயற்படுங்கள்.

நிதானமாக வெற்றியை உங்களுடைய தாக்குங்கள். வெற்றியைக் கலைத்து விடுவதைத் தவிருங்கள். கவனம் சிதறாதீர்கள். மனதை ஒரு நிலைப்படுத்துங்கள். ஒவ்வொரு அடியாக எடுத்துவைத்து பாதையைக் கண்டுபிடியுங்கள். அதுவரைவேண்டும் அமைதி. அடுத்தது குழந்தையைச் சுமந்து உருவாக்குவது. சுமக்கும் காலத்தையே குழந்தையின் எதிர்கால அத்திவாரமாக வெற்றிக்கு வித்தாக்குங்கள். தியான நிலை - இந்தக்காலம் மனதை உயர்நிலைக்குச் செல்லவைக்கும். நேரமிது. குழந்தைகளின் வளமான எதிர்காலத்தை உங்கள் கரங்களில் திட்டமிடுங்கள்.

## நீங்களும் தயாராகுங்கள்

கோபமான, தவறான எண்ணங்களைக் கட்டாயமாக ஒதுக்குங்கள். குழந்தையுடன் மானசீகமாக உரையாடுங்கள். நீங்கள் நினைத்தால் மாபெரும் மாற்றம் நிகழ்த்தும் மேதையை உலகிற்கு அளிக்கலாம்.

குழந்தை பிறந்தவுடன் அணைத்துத் தூக்கும்போதே எண்ணங்களைக் கவசமாக அளிக்கவும். பாலுடன் அன்பை உத்தரவாதமாக்குங்கள். குழந்தையுடன் பேசிக்கொண்டேயிருங்கள்.

24 மணிநேர அன்பை 5 நிமிடங்களில் செலுத்துங்கள். உங்கள் கண்கள் அன்பை எந்த நேரங்களிலும் பொழியட்டும். குழந்தை நடக்க ஆரம்பிக்கையில் வேண்டாம் எனச் சொல்லாமல, பயமுறுத்தாமல் முழு சுதந்திரம் உங்கள் பாதுகாப்பாக மலரட்டும். நம்பிக்கையே வாழ்க்கையென அவசரமில்லாமல் முன்னேறச் செய்யுங்கள்.

உடல் ப்லத்தை மூளையின் பலமாக உயர்த்த புதிய கல்வி உள்ளது. அதன்மூலம் மூளைக்கு குழந்தையின் மூன்று மாதத்திலிருந்து பயிற்சி அளியுங்கள்.



சமநிலை காத்தல்வேண்டும். வாழ்வின் ஆபத்துக்களையும் சலியாத மனதால் சந்தர்ப்பமாக மாற்றலாம். அந்த உறுதியை மழ லைப் பருவத்தில் ஆரம்பிக்கவேண்டும். மனம் என்று உருவானபின் மாற்றுவது கடினம். சுபாவம் வருமுன் உயர்த்தமுடியும். நம் வாழ்க்கை நிலையை உங்கள் வாரிசுகளுக்கு மிச்சமாக்காமல், உச்சிமீது வானிடிந்து விழுகின்றபோதிலும் - அச்சமில்லை அச்சமில்லை என்று இறுமாப்புடன் வெற்றியை அமைக்க, தொலைநோக்கு அமைய, ஒளிமயமாக்க, புன்னகையால் உலகை வெல்ல, மனதை நிறுத்தி செயற்பட நீங்கள் வழிகாட்டியாக மாறுவீர்களா பெண்களே!!? பெண் நினைத்தால் அனைத்தையும் மாற்றலாம். நீங்கள் தயாராகிவிட்டீர்களா?

## கலாசாரப் பேரவை நிர்வாகசபைக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் வடக்கு கலாசாரப் பேரவையினரின் நிர்வாகக் கூட்டம் எதிர்வரும் 4 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது. அளவெட்டி, இளவாலை, பன்னாலை ஆகிய கிராமங்களை ஒன்றிணைத்து, வலிகாமம் வடக்கு கலாசாரப் பேரவையினால் இந்த மாதம் 17 ஆம் திகதி கலாசார விழாவொன்று நடத்தப்படவுள்ளது.

இந்த விழா தொடர்பான முக்கிய விடயங்கள் ஆராயப்படவுள்ளதால், இந்தக் கூட்டத்திற்கு நிர்வாக சபையைச் சேர்ந்த உறுபபினர்கள் அனைவரையும் தவறாது கலந்துகொள்ளுமாறு வலி.வடக்கு கலாசார உத்தியோகத்தர் ம.அருள் சந்திரன் தெரிவித்துள்ளார். (ச)

# ஊடகவியலாளர் நிமலராஜன் நினைவாக பொம்மை வெளியில் குடியிருப்பு அமைப்பு

ஊடகவியலாளர் மயில்வாகனம் நிமலராஜனின் ஞாபகார்த்தமாக, குடியிருப்புத்திட்டமொன்று எதிர்வரும் 17 ஆம் திகதி யாழ்பொம்மை வெளிப பகுதியில் திறந்து வைக்கப்படவுள்ளது.

யாழ்.நகரை அண்டிய பொம்மை வெளிப்பகுதியில், இந்து கலாசார அமைச்சினால் நிர்மாணிக்கப்படும் குடியிருப்புத்திட்டத்திற்கே நிமலராஜனது பெயர் சூட்டப்படவுள்ளது.

தற்போது துரிதமாக இடம் பெற்றுவரும் நிர்மாணப்பணிகளின் மூலம் 79 வீடுகள் இப்பகுதியில் கட்டிமுடிக்கப்படவுள்ளன. அந்தக் குடியிருப்புத் தொகுதிக்கு 'நிமலராஜன் சதுக்கம்' எனப்பெயரிடப்படவுள்ளதாக அமைச்சர் தி.மகேஸ்வரன் தெரிவிக்கிறார்.

பல்வேறு அழுத்தங்களின் மத்தியிலும் எமது மக்களது அவலங்களை உலகிற்கு வெளிப்படுத்திய ஊடகவியலாளர் மயில்வாகனம் நிமலராஜனுக்கு கௌரவமொன்றை வழங்கும் முகமாகவே அவரது பெயரிலான குடியிருப்புத் தொகுதி திறந்துவைக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

ஊடகவியலாளர் மயில்வாகனம் நமலராஜன் அவரது வீட்டில் வைத்து ஆயுததாரிகளால் சுட்டுக்கொலை செய்யப்பட்டிருந்தமை அனைவரும் அறிந்ததே. (202)

## செல்வச் சந்நிதியில் திருவாசக விழா

தொண்டமனாறு செல்வச்சந்நிதியான் ஆச்சிரம திருவாசக விழா இன்று காலை 9 மணிக்கு ஆரம்பமாகி, நடைபெறவிருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

நல்லூர் திருஞான சம்பந்தர் ஆதீன சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள் தலைமையில் நடைபெறும இந்த விழாவுக்கு, தமிழ் நாடு பேரூர் ஆதீன முதல்வர் சாந்தலிங்கம் இராமசாமி அடிகளார் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்ளவுள்ளார். திருவாசக விழாவை முன்னிட்டு, ஆச்சிரமத்தால நடத்தப்பட்ட பண்ணிசைப் போட்டியில பங்குபற்றிய அனைத்து மாணவர்களுக்கும் பரிசில்கள் வழங்கப்படும். அத்துடன், சிறந்த இசையில் இராகததுடன் பாடிய போட்டியாளர்களின் இசை நிகழ்வும் இடம்பெறவுள்ளது. (101)

# அரச ஊழியர்கள் பலருக்கு நேற்றுமுதல் இடமாற்றம்!

(யாழ்ப்பாணம்)

மாவட்டச் செயலகம், பிரதேச செயலகங்கள் மற்றும் உதவி அரசாங்க அதிபர் அலுவலங்களில் கடமையாற்றும் ஊழியர்களுள் சிலருக்கு நேற்றுடன் வேறு பிரதேசங்களுக்கு இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

யாழ்.மாவட்டத்தில் பணியாற்றும் ஊழியர்கள் இந்தமாவட்டப் பிரதேசத்திற்குள்ளே இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்கள். எழுதுவினைஞர்கள் சேவையைச் சேர்ந்த 72 ஊழியர்களும், தட்டச்சு வேலையைச் சேர்ந்த 20 ஊழியர்களும் சுருக்கெழுத்தாளர் சேவையைச் சேர்ந்த 3 ஊழியர்களும், புத்தகக் காப்பாளர் சேவையைச் சேர்ந்த 5 ஊழியர்களும், அலுவலக வேலையாள் வேலையைச் சேர்ந்த 9 ஊழியர்களுமே இவ்வாறு இடமாற்றம் பெற்றுச்செல்கின்றனர்.

இவ்விடமாற்றங்கள் தொடர்பான கடிதங்கள் சம்பந்தப்பட்ட ஊழியர்களுக்கு ஏற்கனவே அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. சிலர் இடமாற்றம் தொடர்பாக மேன்முறையீடு செய்ததனால், சில மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அவை தொடர்பான விபரம் வருமாறு -

உ.கருணாகரன் முன்னர் காரைநகர் உதவி அரசாங்க அதிபர் அலுவலகத்திற்கும் இடமாற்றம் செய்யப்பட்டும், தற்போது கோப்பாய் பிரதேச செயலகத்திற்கும், செ.சண்முகராசா முன்னர் யாழ்ப்பாணப் பிரதேச செயலகத்திற்கும் இடமாற்றப்பட்டு, தற்போது கோப்பாய் பிரதேச செயலகத்திற்கும் எஸ்.தவயோகேஸ்வரி முன்னர் வேலணைப் பிரதேச செயலகத்திற்கு இடமாற்றப்பட்டு, தற்போது சாவகச்சேரி பிரதேச செயலகத்திற்கும் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

மேன்முறையீட்டின் காரணமாக சிலரது இடமாற்றங்கள் இரத்துச் செய்யப்பட்டுள்ளன. வேலணைப் பிரதேச செயலகத்தில் கடமையாற்றும் சு.பொன்மதி, கரவெட்டிப் பிரதேச செயலகத்தில் கடமையாற்றும் ரி.விக்னேஸ்வரதாசன் மற்றும் தி.இராசமாணிக்கம், பருத்தித்துறை பிரதேச செயலகத்தில் கடமையாற்றும் சி.கதிரமலை, அ.கதிரமலை, யாழ். மாவட்டம் செயலகத்தில் கடமையாற்றும் ப.கஜேந்திரன், சி.விக்னேஸ்வரன், சாவகச்சேரி பிரதேச செயலகத்தில் கடமையாற்றும் ஆர்.அன்னலட்சுமி ஆகியோரின் இடமாற்றங்களே தற்போது இரத்துச் செய்யப்பட்டுள்ளன.

இடமாற்றம் செய்யப்பட்ட ஊழியர்கள் அனைவரும் புதிய அலுவலகங்களில் தமது கடமையை இன்று தொடக்கம் பொறுப் பேற்றுக்கொள்ளும் வித்திலான ஏற்பாடுகள் அனைத்தும் முன்னரே செய்யப்பட்டுள்ளதாக, யாழ்.மாவட்டச் செயலக வட்டாரங்கள் தெரிவித்தன. (ச)



தென்மராட்சி பிரதேச செயலர் பிரிவில் கிராம அபிவிருத்தித் திணைக்களத்தின் ஏற்பாட்டில் நடத்தப்பட்ட தலைமைத்துவப்பயிற்சி வகுப்பின் இறுதிநாளன்று பயிற்சி பெற்ற உறுப்பினர் ஒருவருக்கு மாவட்ட கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் செ.செல்வரத்தினம் சான்றிதழ் வழங்குவதையும், தென்மராட்சி கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர். சி.உமாபாலன் தென்மராட்சிப் பிரதேச செயலர் செ.சிறிவாசன் ஆகியோரையும் படத்தில் காணலாம்.

# கௌரவ நிகழ்வில் படையினர் அட்டகாசம் விசாரணை நடத்துமாறு கோரிக்கை

## வடமராட்சி பொது அமைப்புக்கள் கோரிக்கை

கடந்தவாரம் இடம்பெற்ற எயிட்ஸ் பிரசார விழிப்புணர்வு நடவடிக்கையில் ஈடுபட்டவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வைப் குழப்பி அச்சத்தை ஊட்டும் வகையில் செயற்பட்டதாகத் தெரிவித்து, வடமராட்சி பொது அமைப்புகளின் ஒன்றியம் யாழ். மாவட்ட போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவிடம் முறைப்பாடு செய்துள்ளது.

கடந்த செவ்வாய்க்கிழமை கரவெட்டிப் பிரதேசசபை மண்டபத்தில், கரவெட்டி பிரதேசத்தில் எயிட்ஸ் விழிப்புணர்வு பிரசாரத்தில் ஈடுபட்டவர்களுக்கான கௌரவிப்பு நிகழ்வொன்று இடம்பெறவிருந்தவேளை, அங்குவந்த பொலிஸாரும் இராணுவத்தினரும் அங்கு வந்தவர்களைச் சோதனையிட்டனர்.

ஆசிரியர்கள், மாணவர்கள் என அனைவருமே படையின்ரின் இந்த நடவடிக்கையில் மனவேதனை அடைந்துள்ளதுடன், சமூகசேவை நிகழ்வொன்றைக் கௌரவிக்க எடுத்த முயற்சியை குழப்பும் முகமாக மேற்கொண்ட இந்த நடவடிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவித்துள்ளார்கள்.

இதுகுறித்து விசாரணை மேற்கொள்ளுமாறு தெரிவித்தே போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

# நெடுந்தீவு கழகங்களுக்கிடையிலான விளையாட்டுவிழா நாளை ஆரம்பம்

(நெடுந்தீவு)

நெடுந்தீவுப் பிரதேச செயலகப்பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக்கழகங்களுக்கிடையிலான 2004 ஆம் ஆண்டுக்கான விளையாட்டு நிகழ்வுகள் நாளை ஆரம்பமாகவுள்ளன.

அன்றைய நாள் போட்டியாக- ஆண், பெண் இருபாலாருக்குமான கிரிக்கெட், மென்பந்தாட்டப்போட்டி இடம்பெறவுள்ளது. இதில் காலை 9 மணிக்கு ஆண்களுக்கானதும், மாலை 1.30 மணிக்கு பெண்களுக்கான போட்டியும் இடம்பெறவுள்ளது.

இதேவேளை, நாளை மறுதினம் காலை 9 மணிக்கு ஆண்களுக்கும், மாலை 1.30 மணிக்கு பெண்களுக்குமான கரப்பந்தாட்டப் போட்டி இடம் பெறவுள்ளது.

மேற்படி போட்டிகள் அனைத்தும் நெடுந்தீவு மகாவித்தியாலய மைதானத்தில் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

சகல கழக வீர, வீராங்கனைகளையும் குறிப்பட்ட நேரத்திற்கு மைதானத்திற்கு சமூகம் தந்து, நிகழ்வுகள் திறம்பட இடம்பெற ஒத்துழைப்பு நல்குமாறு ஏற்கனவே நெடுந்தீவு விளையாட்டு உத்தியோகத்தர் கேட்டுள்ளார். (113)

# வடபகுதிக்கு அனுப்பமுடியாததால் 2200 தபால் பொதிகள் தேக்கம்

தபால் திணைக்களத்திற்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையே இணைக்கப்பாடொன்றை அடைவதில் ஏற்பட்டுள்ள தாமதத்தால், வடபகுதிக்கான இரண்டாயிரத்து இருநூற்றுக்கும் மேற்பட்ட தபால் பொதிகள் தேங்கிக்கிடப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வடபகுதிக்குத் தரைவழிப்பாதையூடாக எடுத்து வரும் தபால் பொதிகளை, ஓமந்தை சோதனைச்சாவடியில் வைத்து பரிசோதனைக்கு உட்படுத்திய பின்னரே, வடபகுதிக்கு எடுத்துச்செல்ல அனுமதிக்க முடியுமென விடுதலைப்புலிகள் தெரிவித்துள்ளனர்.

இந்த விடயமானது தபால் திணைக்களச் சட்டங்களுக்கு முரணானது என, தபால் திணைக்களம் தெரிவித்துள்ளது. இதனால், இரு பகுதியினருக்கும் இடையே இணக்கபாடொன்று ஏற்படுவது தாமதமாகி வருகிறது. இதன் காரணத்தினாலேயே ஏராளமான தபால் பொதிகளை தென்பகுதியிலுள்ள தபாலகங்களில் தேங்கிக்கிடப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

தபால் பொதிகள் மூலம் சட்ட விரோதமான சில பொருட்களும் எடுத்துவரப்படுவதாலேயே, அவற்றைப் பரிசோதனைக்கு உட்படுத்த வேண்டுமென விடுதலைப்புலிகள் தெரிவித்துள்ளனர்.

இந்த நிலைக்குச் சரியானதொரு தீர்வு காணப்படாவிட்டால், தபால் பொதிகளை வடபகுதிக்கு எடுத்து வருவது மேலும் காலதாமதமாகும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (01)

## வளலாய் உயர்பாதுகாப்பு வலயத்தில்

# தொண்டு நிறுவனங்களின் பணிக்கு படையினர் இடையூறாக உள்ளனர்

சர்வதேச தொண்டு நிறுவனங்களின் பணிகளுக்குப் படையினர் இடையூறாக இருப்பதாக பொதுமக்கள் தரப்பில் குற்றம் சாட்டப்பட்டுள்ளது. அச்சுவேலி - வளலாய் பகுதியில் உயர்பாதுகாப்பு வலயத்திற்கு வெளியேயுள்ள பிரதேசத்தில் பொதுமக்கள் குடியேற அனுமதிக்கப்பட்டுள்ளனர். ஆனால், இங்கு எதுவித அபிவிருத்தித்திட்டங்களையும் மேற்கொள்ள அனுமதி வழங்கப் படையினர் மறுத்துவருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

ஜி.ரி.இசற் நிறுவனம் இப்பகுதி மக்களுக்கு பதினைந்துக்கு மேற்பட்ட வீடுகளைக் கட்டிக்கொடுப்பதற்கு முன்வந்த போதும், படையினர் அதற்குத் தடைவிதித்துள்ளமையால் இந்தச் செயற்பாடு தற்போது கைவிடப்பட்டுள்ளது.

அதேபோன்று கெயர் நிறுவனமும் இந்தப் பகுதி விவசாயிகளுக்கு உரவகைகள், விதைதானியங்கள் என்பவற்றை வழங்கும் நோக்கில் இரு கூட்டங்களை நடாத்தியிருந்தது. ஆனால், மூன்றாவது தடவையாக கெயர் நிறுவனம் மக்களைத் திரட்டி கூட்டம் நடாத்த முற்பட்ட போது, அதற்கும் படையினர் அனுமதி வழங்கவில்லை. இதனால், கூட்டம் இரத்துச்செய்யப்பட்டதுடன் கெயர் நிறுவனம் தனது பணிகளையும் இடைநிறுத்தியுள்ளது.

இதனால், தமக்கு கிடைக்க வேண்டிய பல உதவிகள் கிடைக்காமற்போவதாகவும், இந்த விடயம் தொடர்பாகத் தமிழ்க் கூட்டமைப்பைச சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலருக்கும் தெரியப்படுத்தப்பட்ட போதும் எதுவித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லையென பொதுமக்கள் தரப்பில் கவலை வெளியிடப்பட்டுள்ளது.

பொதுமக்கள் கூட்டம் கூடிக் கதைப்பதற்கும், புதிய அபிவிருத்தி வேலைகளை மேற்கொள்வதும் படையினரால் தடைவிதிக்கப்பட்டுள்ளன. இதனால் - வாசிகசாலை, ஆலயங்கள் போன்ற பொதுக்கட்டடங்களும் எதுவித திருத்த வேலைகளும் இன்றிக் கிடக்கின்றன.

அதேவேளை, 1996 ஆம் ஆண்டிலிருந்து 2000 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் மீளக் குடியமர்ந்த மக்களை மட்டுமே தொடர்ந்து குடியிருக்கப் படையினர் அனுமதித்துள்ளதாகவும், புரிந்துணர்வு உடன்படிக்கைகளுக்குப் பின்னர் குடியேறிய மக்களை வெளியேறுமாறு பணித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

. இந்தப் பிரதேசத்தில் தற்பொழுது 350 இற்கு மேற்பட்ட குடும்பங்கள் வசித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச)

## நற்கருணை ஆராதனையும் குருமார் வழிபாடும்

யாழ்.நகரின் யாத்திரைத் தலமான பிரதான வீதி அரியாலையில் அமைந்துள்ள புனித யூதாதேயு ஆலயத்தில் புத்தாண்டுடன் மாதத்தின்முதல் வெள்ளிக்கிழமைகளில் மாலை 5 மணிக்கு நற்கருணை ஆராதனையும், திருப்பலியும், குணமாக்கல் வழிபாடும் இடம்பெறுமென பங்குத் தந்தை றெவிஸ் இராஜநாயகம் அடிகளார் தெரிவித்தார்.

இந்த ஆலயத்தில் புத்தாண்டு திருப்பலி இன்று காலை 7 மணிக்கு பங்குத்தந்தையால் ஒப்புக்கொடுக்கப்படவுள்ளன.

இன்று நடைபெறவுள்ள திருப்பலிக்கு செல்வோருக்கு விசேட மினி பஸ் ஒழுங்கும் செய்யப்பட்டுள்ளது.(44)

# அடிப்படை வசதிகளற்ற நிலையில் கொடிகாமம் மத்திய மருந்தகம்

சாவகச்சேரிக்கும் - பளைக்கும் இடையிலுள்ள ஒரேயொரு மத்திய மருந்தகம் கொடிகாமம் மத்திய மருந்தகமாகும். இந்த மருந்தகம் மிகவும் அடிப்படை வசதிகள் குறைந்த நிலையிலேயே இயங்கிவருகின்றது என, இந்த வைத்தியசாலையின் வைத்திய அதிகாரி தெரிவித்தார்.

மின்சார வசதியில்லாதிருப்பதுடன், நீர் வசதியும் குறைவாகவும், காணப்படுகின்றது. இராணுவத்தினரால் இடிக்கப்பட்ட கிணற்றினுள் வெளித்தண்ணீர் செல்கிறது. கட்டட வசதிகள் போதியதாக இல்லை. இதனால், மகப்பேற்று அறைக்கு அண்மையிலேயே வெளிநோயாளர் பிரிவு காணப்படுகின்றது. விடுதியும் திருத்தப்படவேண்டியுள்ளது. இது தொடர்பாக- சுகாதாரத் திணைக்களத்திற்குப் பல தடவைகள் முறையிட்டும் பிரயோசனம் எதுவுமேற்படவில்லை எனவும், வைத்திய அதிகாரி தெரிவித்தார். இந்த வைத்தியசாலையை நம்பி கெற்பேலி, விடத்தற்பளை, கொடிகாமம், உசன் மக்கள் வாழ்ந்து வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# இந்த வார பலன்கள்

## 02.01.2004 - 08.01.2004 (திருக்கணிதம்)

| | | | |
|---|---|---|---|
| செவ் | சந் ராகு | | சனி |
| யுரே | 03 ப. 11.34 இட -சந்<br>05 இ. 12.26 மிது-சந்<br>08 ப. 11.49 கட-சந் | | |
| சுக் நெப் | | | குரு |
| சூ. புத | | கேது | |

### மேடம்

*(அச்சுவினி, பரணி, கார்த்திகை 1 ஆம் பாதம்)*

மேடராசியில் பிறந்தவர்களுக்குத் தொழில் நன்கு பலிதமாகும். பொருளாதாரம் நன்றாக இருப்பதால் எந்த நேரமும் பணப்புழக்கம் இருந்து கொண்டிருக்கும். பிள்ளைகளால் உதவியும், பணவரவும் ஏற்படும். வீட்டில் மகிழ்ச்சியான சம்பவங்கள் நிகழும். குடும்பப்பெண்கள் சந்தோஷமாகவும், மனப்பூரிப்புடனும் காணப்படுவர். தொடங்குங் கருமங்கள் தங்குதடையின்றி நிறைவுபெறும். திருமணமாகாதோருக்கும் நற்பலன்கள் காத்திருக்கின்றன. உத்தியோகத்துறையினருக்கு தொழிலில் ஆர்வமும், உற்சாகமும் இருக்கும். சிலருக்கு விரும்பிய இடமாற்றம் கிடைக்கலாம். வியாபாரத்துறையினருக்கு தொழில் விருத்தியடையும். இரும்பு, அலுமினியம் விற்பனை செய்வோர் கூடிய இலாபம் பெறுவர். மாணவர்களுக்கு முன்னேற்றமுண்டு. மேற்படிப்பை முன்னிட்டு வெளியூர் செல்லும் வாய்ப்புகிட்டும்.

### இடபம்

*(கார்த்திகை 2,3,4 ஆம் பாதங்கள், ரோகினி, மிருகசீரிடம் 1, 2 ஆம் பாதங்கள்)*

இவர்களுக்கு தொழில் முறையில் பிரயாசை அதிகமாகும். வீண்விரயங்களும் ஏற்படும். குடும்பத்தில் கருத்து வேறுபாடுகள் தோன்றக்கூடும். தேகாரோக்கியமும் இடையிடையே பாதிப்படையும். கொடுக்கல், வாங்கல்களிலும் பிரச்சினை தலைதூக்கும். தேவையற்ற விடயங்களில் தலையிடுவதால், பல கஷ்டங்களை எதிர்கொள்ள நேரிடும். வெளியூரிலிருந்து பண உதவிகள் நேரத்துக்கு கிடையாது. தொடங்கும் எல்லாக் கருமங்களிலும் தாமதம் காணும். தூரதேசப் பிரயாணத்தை எதிர் நோக்குவோர் ஏமாற்றமடைவார்கள். திருமணம் சம்பந்தமான பேச்சுக்கள் இழுபறி நிலையிலேயே இருக்கும்.

உத்தியோகத்திலுள்ளவர்களுக்கு வேலைப் பழு அதிகமாகும். சக ஊழியர்களால் குழப்பங்கள் ஏற்படலாம். வர்த்தகர்கள் சரக்குகளை ஏற்றுமதி, இறக்குமதி செய்வதில் இடையூறுகளைச் சந்திப்பார்கள். மாணவர்கள் வீண பொழுது போக்குகளைத் தவீர்த்து, கல்வியில் ஊக்கம் செலுத்தவேண்டும்.

### மிதுனம்

*(மிருகசீரிடம் 3,4 ஆம் பாதங்கள், திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 ஆம் பாதங்கள் )*

மிதுனராசிக்காரருக்கு இந்தவாரம் தொழில் சிறப்பும் மனமகிழ்ச்சியும் ஏற்படும். பணவருவாய் போதியளவு இருக்கும். பிள்ளைகளால் சந்தோஷமும், சிறப்பும் உண்டு. வீட்டில் மகிழ்ச்சியான சம்பவங்கள் நிகழும். சிலருடைய சில கோரிக்கைகள் நிறைவேற வாய்ப்புக்கள் கிட்டும். வெளியூர்களிலிருந்து பண உதவி கிடைக்கலாம். தொழில் பெறுவதற்காக விண்ணப்பித்த இளைஞர்களுக்கு அனுகூலம் கிடைக்கும். திருமணப் பேச்சுக்களும் விருப்பம்போல் நிறைவேறும். உத்தியோகத்தர்களுக்கு தொழிலில் ஊக்கமும், விரும்பிய இடமாற்றங்களும், சம்பள அதிகரிப்பும் கிடைக்க இடமுண்டு. வர்த்தகர்களுக்கு வியாபாரம் அமோகமாக நடக்கும். பணமும் சேரும். பெண்கள் மன நிம்மதியுடன் வாழ்க்கை நடத்துவார்கள். மாணவர்கள் கல்வியில் முன்னேற்றமடைவார்கள். சிலருக்கு புலமைப் பரிசில்கள் கிடைக்கும்.

### கடகம்

*(புனர்பூசம் 4 ஆம் பாதம், பூசம், ஆயிலியம்)*

இவர்களுக்கு இந்தவாரம் மத்திமமான பலன்களே காட்டுகிறன. குடும்பஸ்தர்களுக்கு இடையிடை சில கருதது வேற்றுமை ஏற்படும். செலவுகள் அதிகமாகும். மனநிம்மதி குறைவாகவே இருக்கும். செலவுகளைச் சமாளிப்பது கஷ்டமாக இருக்கும். கடன்தொல்லைகளும் தலைதூக்கும். சிலருக்கு இடமாற்றங்களினால் அலைச்சல்கூடும். தேகாரோக்கியம் குறைவதுடன், உற்சாகமின்மையும் ஏற்படும். மருத்துவச்செலவும் அதிகமாகும். உத்தியோகத்தர்களுக்கு வேலைப்பழு அதிகரிப்பதுடன், மனவிரக்தியும் கூடும். சிலருக்கு இடமாற்றங்கள் அதிருப்தியைக் கொடுக்கும். குடும்பப் பெண்கள் பல பிரச்சினைகளைச் சமாளிக்க வேண்டியவர்களாக இருப்பர். வர்த்தகர்களுக்கு முதலீடுகள் விற்பனையாகாமல் தேங்கிக்கிடக்கும். வியாபாரம் மந்தநிலையாகவே இருக்கும். மாணவர்களுக்கு சோம்பல்தன்மை கூடுதலாக இருக்கும். உற்சாகம்தேவை.

### சிங்கம்

*(மகம், பூரம், உத்தராடம் 1 ஆம் கால்)*

இவர்களுக்கு தொழிலில் ஒரு மந்தநிலை காட்டும். பணவரவு குறைவாகவே இருக்கும். குடும்பத்தில் இடையிடையே சிறு சச்சரவுகள் தோன்றும். வீண்விரயங்களைத் தவீர்த்தல் நன்று. குடும்பக் கைத்தொழில்களை ஆரம்பித்தால், வருவாய் ஓரளவு பெறலாம். பிறநாட்டு உதவிகள் காலந்தாழ்த்திக் கிடைக்கும். அயலவர்களுடனும் மனவேறுபாடு தோன்றும். பிரயாணங்களின்போது பொருள் இழப்புக்கள் ஏற்படலாம். சொந்தமாகத் தொழில்செய்வோர் பல கஷ்டங்களுடன் முன்னேறுவார்கள்.

திருமணம் முதலியன காலதாமதமாகி நிறைவுபெறும். குடும்பப் பெண்கள் மனக்குழப்பத்துடன் காணப்படுவர். வர்த்தகத்துறையினர் மிகுந்த சிரமத்துடன் வியாபாரம் செய்யவேண்டியிருக்கும். இதனால், பணமுடக்கம் ஏற்படும். புது முதலீடுகளைத் தவீர்க்கவும். மாணவர்களுக்கு முன்னேற்றம் குறைவாகவே இருக்கும். விளையாட்டுக்களில் ஈடுபாடு கூடுதலாக இருக்கும்.

### கன்னி

*(உத்தரம் 2, 3, 4 ஆம் பாதங்கள், அத்தம், சித்திரை 1, 2 ஆம் பாதங்கள்)*

கன்னிராசியில் பிறந்தவர்களுக்குத் தொழில் முயற்சி நன்றாக அமையும். பணவருவாயிலும் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் உண்டு. குடும்பத்தில் மகிழ்ச்சியும் குதூகலமும் தோன்றும். தேக சுகம் பாதிப்படையாது. உறவினர்களாலும், பிள்ளைகளாலும் பண உதவி கிட்டும். தொழில் துறையை நாடும் இளைஞர்களுக்கு தொழில் வாய்ப்புகள் கிடைக்கும். சிலருக்கு தூரதேசப் பிரயாணங்கள் கைகூடும். திருமணப் பேச்சுக்கள் துரிதமாக நடைபெறும். வாழ்க்கைச் சிறப்பு கைகூடும். உத்தியோகத்துறையினர் தமது பணிகளை சிறப்பாகச் செய்து, உயரதிகாரிகளின் பாராட்டைப் பெறுவர். சிலருக்கு வசதியான இடமாற்றங்கள் கிடைக்கலாம். வர்த்தகர்களுக்கு வியாபாரம் மிகச்சிறப்பாக நடக்கும். புதிய முதலீடுகளும் செய்யலாம். மாணவர்கள் முன்னேற்றமடைவர். சிலருக்குப் புலமைப்பரிசில் பாராட்டு கிடைக்கும்.

### துலாம்

*(சித்திரை 3 ஆம், 4 ஆம் பாதங்கள், சுவாதி, விசாகம் 1,2,3 ஆம் பாதங்கள்)*

துலாம் ராசிக்காரருக்கு தொடங்கும் கருமஙகள் இலகுவில் சித்தியாகும். தொழில் முயற்சிகள் நல்ல முறையில் செயற்படும். போதிய வருவாய் கிடைக்கும். உறவினர்களாலும், நண்பர்களாலும் உதவி உண்டு. தனப்பட்ட தொழிலில் ஈடுபட்டோர் அடிக்கடி பிரயாணத்தை மேற்கொள்ள வேண்டியிருக்கும். உடல்நலம் நன்கு பேணப்படும். குடும்பப் பெண்கள் உற்சாகத்துடன் காணப்படுவா. திருமணப்பேச்சுக்கள் விரைவில் அனுகூலத்தைத்தரும். புதிதாகத் தொழிலுக்கு விண்ணப்பித்தோர், சற்று காலதாமதத்தின் மேல் நன்மையடைவர். வர்த்தகர்களுக்கு வியாபாரம் நன்றாக நடக்கும். புதிய வாடிக்கையாளர்கள் வந்து சேருவார்கள். வங்கிநிலை சிறப்பாக இருக்கும். மாணவர்கள் கல்வியில் முன்னேற்றமும், சித்தியும் பெறுவார்கள்.

### விருச்சிகம்

*(விசாகம் 4 ஆம் பாதம், அனுஷம், கேட்டை)*

இவ்விராசியினருக்கு அட்டமத்துச் சனியும், பத்தில் வியாழனும் நடைபெறுகிறது என்பதை ஞாபகப்படுத்திக்கொள்வது நன்று. கருமங்கள் புல தடங்கல்களின் மேல் கைகூடும். குடும்ப அங்கத்தவர்களுக்கிடையில் கருத்து வேற்றுமை தோன்றும். உறவினர், விருந்தினர்களின் வருகையால் பணச்செலவு அதிகமாக ஏற்படும். குடும்பப் பெண்கள் திருப்தியற்றுக் காணப்படுவர். செலவுகளைச் சமாளிப்பது மிகவும் கடினம். ஏமாற்றுப் பேர்வழிகளைப் பற்றியும் அவதானமாக இருக்கவும். பிரயாணங்களின்போது, விபதுக்கள் ஏற்படக்கூடியநிலை உண்டு. உத்தியோகத்தர்களுக்கு வேலைப்பழு அதிகமாகும். தொழிலில் பல சிரமங்களை எதிர்நோக்குவர். வியாபாரிகளுக்குத் தொழில் மந்த நிலையிலேயே நடக்கும். மாணவர்களுக்கு முன்னேற்றம் குறைவு.

### தனுசு

*(மகம், பூராடம், உத்தரம் 1 ஆம் பாதம்)*

தனுசு ராசியினருக்கு கருமங்களில் தாமதம் ஏற்படும். செய்கின்ற தொழிலுக்கேற்ற வருவாய் கிடைப்பது கஷ்டம். வரவிலும் பார்க்க செலவுகள் அதிகமாகக்கூடும். புத்திரர்களால் கவலை அதிகமாகும். கொடுக்கல் வாங்கல் கஷ்டங்களும் தலைதூக்கும். கொடுத்த பணத்தை திரும்பப்பெறுவது கடினம். உடல் நலத்தைப்பேணவேண்டும். மருத்துவச் செலவுகளும் அதிகமாகும். திருமணப் பேச்சுகள் இழுபறி நிலையைக் காட்டும். உத்தியோகத்தர்கள் பல புதிய வேலைகளைச் செய்யவேண்டியிருக்கும். மனக்குழப்பத்துடன் காணப்படுவர். வியாபாரிகளுக்கு வியாபாரம் மந்த நிலையிலேயே நடகக்கும். மாணவர்களுக்கு முன்னேற்றம்குறைவு. பொழுதுபோக்குத்துறையில் அதிகம் ஈடுபடுவர்.

### மகரம்

*(உத்தராடம் 2, 3, 4 ஆம் பாதங்கள், திருவோணம், அவிட்டம் 1, 2 ஆம் பாதங்கள்)*

இவர்களுக்குத் தொழில் சிறப்பும், செல்வாக்கும் அதிகரிக்கும். குடும்பத்தில் கணவன் மனைவியிடையே அன்னியோன்ய உறவு சிறப்பாக இருக்கும். பிள்ளைகளால் மகிழ்ச்சியும், புதுத்தென்பும் ஏற்படும். நண்பர்கள் உதவி செய்வார்கள். சிலருக்குத் திடீர் பொருள்வரவுகிட்டும். குடும்பப் பெண்கள் தமது தேவைகளைப் பூர்த்தி செய்யக் கூடியதாக இருப்பர். தேகாரோக்கியம் நன்றாக இருக்கும். உத்தியோகத்தர்களுக்கு தமது எதிர்பார்ப்புகள் நிறைவுபெற இடமுண்டு. திருமணப்பேச்சுக்கள் விரைவில் அனுகூலத்தைத்தரும். வர்த்தகர்கள் வியாபாரத்தில் புதிய ஒப்பந்தங்களைச் செய்யக் கூடும். வியாபாரம் சிறப்பாக நடக்கும். மாணவர்கள் தொழிற்கல்வியில் ஈடுபட்டோர் முன்னேற்றம் காண்பர். பொதுவாக ஊக்கம் தேவை.

### கும்பம்

*(அவிட்டம் 3, 4 ஆம் பாதங்கள், சதயம், பூரட்டாதி 1, 2, 3 ஆம் பாதங்கள் )*

கும்பராசியினர் நன்மை, தீமை கலந்த பலன்களையே இவ்வாரம் காண்பர். தொழில் சிறப்பாக நடந்தாலும், ஊதியம் குறைவாகவே இருக்கும். புத்திரர்கள்மூலம் சில சிக்கல்கள் தோன்றும். எடுக்கும் கருமங்கள் தாமதத்தின்மேல் நிறைவுபெறும். நண்பர்கள் உதவி செய்வார்கள். தேகாரோக்கியம் இடையிடையே பாதிக்கப்படலாம். தூரதேசப் பிரயாணங்கள் கைகூடுவது சாத்தியமில்லை. பிரயாணத்தில் பொருள் இழப்புக்கள் பற்றி அவதானம்தேவை. உத்தியோகததர்களுக்கு வேலைப்பழு அதிகமாயினும், செலவாக்கும், மதிப்பும் உயரும். பெண்களைப் பொறுதத வரையில் நினைத்த வரன்கிடைப்பார். வர்த்தகர்கள வியாபாரத்தில் முன்னேற்றம் காண்பர். கொடுக்கல் வாங்கல்களில் அவதானம்தேவை. மாணவர்கள் கல்வியில் சித்தியும், பாராட்டும் பெறுவர்.

### மீனம்

*(பூரட்டாதி 4 ஆம் பாதம், உத்தரட்டாதி, ரேவதி)*

இவர்கள் காரிய தாமதம், தொழில் பற்றாக்குறை போன்ற பலன்களைக் காண்பர். கணவன் மனைவியிடையே சிறு பூசல்கள் தோன்றி மறையும். புத்திரர்களால் செலவுகள் அதிகமாகும். குடும்பப்பெண்கள் தமது தேவைகளைப் பூர்த்திசெய்யமுடியாது கஷ்டமடைவர். அயலவர்களால் உதவியுண்டு. உடல் நலக்குறைவால் வைத்தியச்செலவு ஏற்படும். திருமணப்பேச்சுக்கள் காலதாமதத்தைக் காட்டும். தூரதேசப் பிரயாணங்கள் தடைப்படும். உத்தியோகத்தர்கள் சிலருக்கு வசதிகுறைந்த இடமாற்றம் கிடைக்கலாம். தொழிலில் பிரயாசை கூடுதலாக இருக்கும். வர்த்தகர்களுக்கு வியாபாரம் முன்னேற்றம் தராது. புதிய முதலீடுகளைத் தவீர்க்கவும். மாணவர்கள் விளையாட்டில் அதிக ஈடுபாடு காட்டுவார்கள்.

# அடிப்படை வசதிகளுக்காக ஏங்கும் வடமராட்சி கிழக்கு மக்கள்!

வடமராட்சி கிழக்கு உதவி அசாங்க அதிபர் பிரிவானது, 18 கிராம அலுவலர் பிரிவுகளையும், 54 கிலோமீற்றர் நீளமும் உடைய, யாழ்.மாவட்டத்தில் ஓர் அபிவிருத்தி அடையாத நீண்ட பிரதேசமாகும்.

இதில் அம்பன் கிராம அலுவலர் பிரிவின் ஒரு பகுதியும், நாகர் கோயில் கிழக்கு/மேற்கு/தெற்கு ஆகிய மூன்று கிராம அலுவலர் பிரிவுகளும், உயர்பாதுகாப்பு வலயத்துள் இருப்பதால் இங்கு மக்கள் குடியமர இன்னமும் அனுமதிக்கப்படவில்லை.

இந்தப் பிரதேசத்தில் கிழக்குப் பகுதியில் செம்பியன்பன்று தொடக்கம் சுண்டிக்குளம் வரை, 10 கிராம அலுவலர் பிரிவுகளும், 33 கிலோ மீற்றர் நீளம் கொண்டதும், 13 வருடங்களாக மக்கள் இடம்பெயர்ந்தும், பின்பு 22.02. 2002 இன் பின்பு சகலரும் மீளக்குடியேறி உள்ளார்கள். இந்த 10 பிரிவுகளிலும் 3287 குடும்பங்களைச்சேர்ந்த 13018 மக்கள் அடிப்படை வசதிகள் ஏதும் அற்றநிலையில், யாழ். மாவட்டத்திலிருந்து பிரிந்த வன்னிப் பிரதேச எல்லைகள் இருப்பதுபோன்று - சகல தரப்பினராலும் பாராமுகமாக விடப்பட்டுள்ளதா என எண்ணத்தோன்றுகிறது.

புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்பட்டு, இரண்டு வருடங்கள் ஆகின்றன. மக்கள் இந்தப் பிரதேசத்தில் மீளக்குடியமர்ந்து 20 மாதங்களுக்கு மேலாகிவிட்டது. தொண்டுநிறுவனங்கள்மூலம், பல இலட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுத் திட்டங்களும் முன்வைக்கப்பட்டன. ஆனால், இந்த வடமராட்சி கிழக்குப் பிரதேசத்தில் எந்தவித முன்னேற்றங்களையும் காணமுடியவில்லையென ஆதங்கப்படுகிறார் யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் செ.பத்மநாதன்.

கடந்த 20 ஆம், 21 ஆம் திகதிகளில் மருதங்கேணிப் பிரதேசத்தில் மீள்குடியேற்றம் நடைபெற்ற பகுதிகளை நேரடியாகப் பார்வையிட்டு, அப்பகுதி மக்களுடன் கலந்துரையாடி, அவர்களின் கஷ்ட நிலைமைகளை நேரடியாகக் கண்ணுற்ற பின்னரே, அவர் இந்தக் கருத்துக்களை முன்வைத்தார்.

கடந்த 14 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மருதங்கேணி இந்து தமிழ் கலவன் வித்தியாலயத்தில் - இந்தப் பிரதேசத்தில் 2004 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்படவேண்டிய வேலைத் திட்டங்கள் பற்றிய உயர்மட்ட மாநாடு - மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் வி.ப. வேலாயுதபிள்ளை தலைமையில் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் பல்வேறு திணைக்களங்களைச் சேர்ந்த, உயர்மட்ட அதிகாரிகளும், யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான - அ.விநாயகமூர்த்தி, எம்.கே.சிவாஜிலிங்கம் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

இந்தக் கூட்டத்தில், வடமராட்சி கிழக்கு புனர்வாழ்வு புனரமைப்பு நிறுவனத் தலைவர் சி.பொன்னம்பலத்தினால், 2004 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்படவேண்டிய திட்டங்கள் முன்வைக்கப்பட்டு, அரசாங்க அதிபரினதும், நாடாளுமன்ற உறுப்பினர்களதும் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது.

மீள் குடியேற்றம் நடைபெற்ற இந்தப் பிரதேசத்தில் - புனர்நிர்மாண நடவடிக்கைகளை மேற்கொள்ள, பல தொண்டு நிறுவனங்கள் முனவந்தன. இந்த நிறுவனங்கள் பல மில்லியன் ரூபாவினை ஒதுக்கடு செய்துள்ளன. ஆனால், புனரமைப்பு வேலைகள் மந்த நிலையிலேயே சென்று கொண்டிருக்கின்றன.

முக்கியமாக 500 வீடுகளைக் கட்டித்தருவதாகத் தொண்டு நிறுவனங்கள் முன்வந்து நிதி ஒதுக்கீடு செய்தன. ஆனால், எந்த ஒரு வீடும் இன்னும் பூர்த்தி செய்யப்படவில்லை. மீளக்குடியேறிய மக்கள் ஓலைக்குடிசைகளிலேயே வாழ்ந்து வருகின்றார்கள்.

இந்தப் பிரதேசத்தில் நிக்கொட் நிறுவனம் ஜி.ரி.இசற் நிறுவனம், யு.என்.எச்.சி.ஆர், மூவின் மொண்டோ, யுனிசெப் ஆகிய சர்வதேச தொண்டு நிறுவனங்கள் புனரமைப்பு வேலைகளில் ஈடுபட்டு வருகின்றன. இந்தப் பிரதேசத்தின் கல்விநிலைமையைப் பொறுத்தவரையில், நிக்கொட் நிறுவனம் பல வேலைத்திட்டங்களை முன்னெடுத்து வருகின்றது. மீள ஆரம்பிக்கப்பட்ட 8 பாடசாலைகளுக்கு, 35 இலட்சம் ரூபா செலவில் தளபாடங்களை வழங்கியுள்ளது. கட்டட வேலைகளைப் பொறுத்தவரையில், உடுத் துறை மகா வித்தியாலயத்திற்கு - 90.66 இலட்சம் ரூபாவினையும், ஆழியவளை சி.சி.த.க. வித்தியாலயத்திற்கு - 63.58 இலட்சம் ரூபாவினையும், வெற்றிலைக்கேணி பரமேஸ்வரா வித்தியாலயத்திற்கு- 61.72 இலட்சம் ரூபாவும், தாளையடி றோ.க.த.க.பாடசாலைக்கு- 31.12 இலட்சம் ரூபாவும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

ஆனால், கட்டட வேலைகள் மந்தகதியிலேயே நடைபெற்றுவருகிறது. சில பாடசாலைகளில் இன்னமும் வேலைகள் ஆரம்பிக்கப்படவில்லை என்பதும் வருத்தத்திற்குரியது.

இருந்தும், யு.என்.எச்.சி.ஆர் நிறுவனமும், யுனிசெப் நிறுவனமும் இந்தப் பிரதேசப் பாடசாலைகளுக்குத் தற்காலிகக் கொட்டகைகளை அமைத்துக் கொடுத்துள்ளன. சுகாதார வசதிகளைப் பொறுத்தவரையில் - தியாகதீபம் திலீபன் மருத்துவமனையை நம்பியே இந்தப் பிரதேச மக்கள் வாழ்ந்துவருகின்றனர். அத்துடன், இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தினர் வாரத்தின் மூன்று நாட்கள் நடமாடும் மருத்துவ சேவையினை நடாத்திவருகின்றனர்.

போரினால் பாதிப்படைந்த மருதங்கேணி கிராம வைத்தியசாலையினைப் புனரமைப்பதற்கும், அம்புலன்ஸ் வண்டியைப் பெற்றுக் கொடுப்பதற்கும் நிக்கொட் நிறுவனம் 242.07 இலட்சம் ரூபாவை வழங்கியது. கட்டடவேலைகள் முடிவுறும் தறுவாயில் உள்ளன. ஆனால், வைத்தியர்களும், ஊழியர்களும் இந்தப் பிரதேசத்திற்கு வேலைசெய்ய வருவார்களா? என்பது சந்தேகத்திற்கு இடமாகவே உள்ளது. ஏனெனில், இந்தப் பிரதேசத்தில் இந்த வைத்தியசாலையைத் தற்காலிகமாகத் தனியார் கட்டடமொன்றில் இயங்கவைப்பதற்கு எடுக்கப்பட்ட முயற்சிகள் - வைத்தியர் இன்மையால் கைகூடாமல் போயுள்ளமை குறிப்பிடததக்கது. இருந்தும், தைமாதமளவில் இந்த வைத்தியசாலையை இயங்கச்செய்வதற்கு அரச அதிபர் முயற்சி எடுத்துவருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. இந்தப் பிரதேசத்தின் வீதிகள் பலதத சேதமடைந்து காணப்படுகின்றது. மாமுனை தொடக்கம் கட்டைக்காடு வரையிலான 19 கி.மீ கடற்கரை வீதியினைப் புனரமைப்பு செய்வதற்கு, நிக்கொட் நிறுவனம் 324.12 இலட்சம் ரூபாவினை ஒதுக்கியுள்ளது. இதில் களியினால் செய்யப்படவேண்டிய வேலைகள் பூர்த்தியடைந்துள்ளன. ஆனால், கல்லினால் ஆன வேலைகள் இன்னமும் ஆரம்பிக்கப்படவில்லை.

இந்தப் பிரதேச மக்களுக்கு வீட்டு வசதிகளை ஏற்படுத்திக்கொடுப்பதற்கு, நிக்கொட் நிறுவனம் வெற்றிலைக்கேணி, முள்ளியான் பகுதிகளில் 125 வீடுகளையும், ஜி.ரி.இசற் நிறுவனம்- போக்கறுப்பு, வெற்றிலைக்கேணிப் பகுதிகளில் 175 வீடுகளையும், யு.என்.எச்.சி.ஆர் நிறுவனம் - உடுத்துறையில் 125 வீடுகளையும், அமைத்துக் கொடுக்க முன்வந்தது. ஆனால், இன்னமும் ஒரு வீடும் பூர்த்தியாகவில்லை என மக்கள் குறைகூறுகின்றனர்.

இந்தப்பிரதேசத்தின் கடற்தொழில் நடவடிக்கைகளை மேம்படுத்தும் பொருட்டு, நிக்கொட் நிறுவனம் - 300 இலட்சம் ரூபாவை வழங்கியுள்ளது. இந்தப்பிரதேசத்தில் இதுவரை 1064 குடும்பங்களுக்கு, 25 ஆயிரம் ரூபா கொடுப்பனவு வழங்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்தப் பிரதேசத்தை அபிவிருத்தி செய்ய வேண்டுமானால் - வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவு பிரதேச செயலகமாக தரமுயர்த்தப்படவேண்டும், வடமராட்சி கிழக்குக்கென தனியான ஒரு பிரதேசசபை உருவாக்கப்பட வேண்டும், இந்தப்பிரதேசததிலுள்ள வீதிகள் செப்பனிடப்படவேண்டும், நாகர்கோவில் பாதை திறக்கப்படவேண்டும். இந்தப் பிரதேசத்திற்கு மினசார வசதி செய்துகொடுக்கப்படவேண்டும். போன்ற கோரிக்கைககள் வடமராட்சி கிழக்கு மக்களின் சார்பில், வடமராட்சி கிழகக்கு புனரமைப்பு நிறுவனத்தினரால், நாடாளுமன்ற உறுப்பினர்களிடமும், அரசாங்க அதிபரிடமும் முன்வைக்கப்பட்டுள்ளன. (122)

☆ - அஸ்மிதா - ☆

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

**சிந்தனைக்கு**

*அன்புஅறிவு* தேற்றம் அவாவின்மை இந்நான்கும்
நன்குஉடையான் கட்டே தெளிவு
-திருக்குறள்.

## நமது நோக்கு

### அதிகரிக்கும் அமெரிக்க அழுத்தம்; அரசியலில் ஏற்படுத்தும் குழப்பம் !

நேற்றுப் பிறந்த புத்தாண்டு, புதிய அரசியல் நெருக்கடிகளைச் சுமந்தவண்ணம் தனது முதலடியை எடுத்துவைத்துள்ளதென்றே கூறவேண்டும். நம்பிக்கையீனங்களையும், ஏமாற்றங்களையும் கடந்துபோன ஆண்டில் எதிர்கொண்டு, சலித்துப்போன மக்களுக்கு, பிறக்கும் புத்தாண்டாவது, கொஞ்சமேனும் நிம்மதியைத்தருமா என்ற ஏக்கம் கவிந்துள்ள நலையில், பிறந்த ஆண்டும் இந்த ஆண்டைப் போன்றுதான் இருக்கப்போகிறது என்ற உணர்வையே வந்து கொண்டிருக்கும் செய்திகள் உணர்த்திநிற்கின்றன.

ஜனாதிபதிக்கும், பிரதமருக்கும் இடையிலான அரசியல் அதிகாரப் போட்டியின் அடிப்படையிலான முரண்பாடுகள் காரணமாக, விடுதலைப் புலிகளுடனான சமாதானப் பேச்சு வார்த்தை நகர்வுகள் மீதான நம்பிக்கைகள் படிப்படியாக உடைந்துபோகும் நிலையில், இந்த நெருக்கடியானது தொடர்வதை தொடர்ந்தும் அனுமதிக்க முடியாது என, அமெரிக்க பிரதி ராஜாங்க அமைச்சர் ரிச்சர்ட் ஆர்மிரேஜ் வொஷிங்ரனில் வைத்து சிறிலங்காவின் அமைச்சரான மிலிந்த மொறகொடவிடம் சற்று அச்சுறுத்தலாகவே கூறியுள்ளமையானது - கொழும்பில் ஒரு வித்தியாசமான அரசியல் உணர்வலையை ஏற்படுத்தியுள்ளதெனலாம்.

தற்போது பதவியில் பெயருக்கு அதிகாரங்கள் எதுவுமின்றி இருக்கும் ரணிலின் அரசாங்கத்தின் சமாதான முன்னெடுப்பு முயற்சிகளுக்கு, பின்புல ஆதரவை பெருமளவில் வழங்கியது அமெரிக்காதான் என்பது வெளிப்படையான விடயமாகும்.

சமாதான ஏற்பாட்டாளராக நோர்வே முன்னின்று, ஓடியாடி காரியங்களைப் பார்த்தாலும் - பிரிட்டன், ஜப்பான், அவுஸ்திரேலியா மற்றும் ஸ்கன்டிநேவிய நாடுகள் அதற்கு ஆதரவுப் பலத்தை வழங்கியிருந்தாலும், இவையனைத்தும் அமெரிக்காவின் நட்பு நாடுகள் என்பதும், இந்த நாடுகள் அனைத்தும் தமது சர்வதேசரீதியிலான அரசியல் மற்றும் ஏனைய நடவடிக்கைகள் அனைத்தையும், அமெரிக்காவின் ஆலோசனையுடன்தான் மேற்கொள்ளுகின்றன என்பதும் நிஜமே.

இந்த நாடுகளின் சகலவிதமான - சிறிலங்கா தொடர்பான கொள்கைகளும், அமெரிக்காவின் இந்து சமுத்திரப் பிராந்தியம் மீதான புவிசார் அரசியல் அபிலாஷைகளுக்கு ஏற்றவகையிலேயே திட்டமிடப்படுகின்றன என்பதும் யதார்த்தமானதேயாகும்.

எனவே, சிறிலங்காவின் இனப்பிரச்சினைக்கான தீர்வு விவகாரமும், அமெரிக்காவின் தலையீடின்றி மேற்கொள்ளப் படமுடியாத நிலை - பல்வேறு அரசியல், பொருளாதார தேவைகளின் பிரகாரம் ஏற்பட்டுள்ளது என்று கூறினால் மிகையாகாது.

இப்படியானதோர் நிலை உருவாவதற்கு - சிறிலங்காவின் பிரதான கட்சிகள் அனைத்தும் மூலகாரணமாகும்.

தமிழ்மக்கள் மீதான யுத்தத்தை, சிறிலங்கா அரசு தீவிரமாக மேற்கொண்டிருந்த காலங்களில், தமிழ்மக்களின் அரசியல் உரிமைகளுக்கான போராட்டத்தை, பயங்கரவாத நடவடிக்கை என பொய்யாகப் பிரசாரத்தை மேற்கொண்ட சிங்கள அரசின் வார்த்தைகளை - தனது அரசியல் லாபத்தைக் கவனத்தில்கொண்டு, ஏற்றுக்கொண்டு பாதுகாப்பு ஒத்துழைப்பு என்ற பெயரில் - இராணுவ ரீதியான பயிற்சிகளையும், ஆயுதங்களையும் வழங்கிய அமெரிக்கா - சிறிலங்காவை தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரும் மூலோபாயத்தை கைக்கொண்டது.

அமெரிக்க இராணுவ உதவிகள் - பயிற்சிகள்
அமெரிக்க புலனாய்வு தொடர்பான உதவிகள்
அமெரிக்க பொருளாதார ரீதியிலான உதவிகள், எனப் பலவற்றையும் கைநீட்டிப் பெறவேண்டிய, தவிர்க்கமுடியாத தேவையே- சிறிலங்காவை அமெரிக்காவின் அழுத்தங்களுக்கு அசைந்துகொடுக்கவேண்டிய நிலையை ஏற்படுத்தியது.

ரணில் அரசு ஆட்சிபீடம் ஏறியதும், அவரது பொருளாதார ஆலோசகரும், அமைச்சரும், அமெரிக்க மருமகனுமான மிலிந்த மொறகொட சமாதானத்தின் பேரால் அமெரிக்க-ரணில் உறவுகளை மென்மேலும் இறுக்கமாக்க உதவினார்.

இன்றைய சிறிலங்கா அரசு இயங்குவது 'சமாதானம்' என்பதன் பெயரால். அமெரிக்காவும், அதன் பணிப்பை ஏற்று இயங்கும் அதன் சார்பு நாடுகளும் வழங்கும் பல்வேறுபட்ட உதவிகளின் அடிப்படையில்தான்.

எனவே, சிறிலங்கா மீதான அமெரிக்க மேலாதிக்க அழுத்தங்கள் இன்றைய நிலையில் அதிகமாகியுள்ளதை அனைத்துத் தரப்பினரும் உணர்ந்தேயுள்ளனர்.

தற்போதைய நிலையில் - இந்திய சார்பு நிலையை எடுத்துள்ள சந்திரிகாவும், அமெரிக்காவின் பாதுகாப்பை பெற்றுள்ள ரணிலும், அதிகார மோதலில் ஈடுபட்டுள்ளமைக்கு இந்தப் பின்னணிகளே காரணமாகும்.

அமெரிக்கா விடுத்துள்ள இந்த அறிவுறுத்தல் - இலங்கை விவகாரங்களில் அளவுக்கதிகமாக அமெரிக்கா தலையீடு செய்து, அழுத்தத்தை பிரயோகிக்கின்றது என்ற குரல் எழ காரணமாகியுள்ளது.

அமெரிக்க ஆர்மிரேஜின் குற்றச்சாட்டை சிறிலங்கா ஜனாதிபதி நிராகரித்துமுள்ளார்.

இந்த நிலையில், கொழும்பு அரசியலில் சிக்கல்கள் தீரும் அறிகுறி தென்படுவதாக இல்லை. மாறாக, மேலும் புதிய சிக்கல்கள் எழுவதற்கான சாத்தியக்கூறுகளே தென்படுகின்றன.

## நாடும் நடப்பும்




# அடுத்த மூன்று வாரத்துக்குள் பொலிஸாருக்கு பதவியுயர்வு!

பொலிஸாருக்கான பதவி உயர்வுகள் அடுத்த மூன்று வாரங்களுக்குள் வழங்கப்படவுள்ளதாக பொலிஸ் சேவைகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக ஆணைக்குழு மேலும் தெரிவிக்கையில் கீழ் நிலையில் உள்ள அதிகாரிகள் இதுவரை பதவி உயர்வுகள் எதனையும் பெறவில்லை. எனவே, அடுத்த மூன்று வாரத்துக்குள் இவர்களுக்கான பதவிகள் உயர்த்தப்படும்.

இந்தப் பொலிஸ் அதிகாரிகளின் பதவி உயர்வுகள் குறித்த சிபார்சுகள் கிடைத்தவுடன், இவர்களுக்கான பதவி உயர்வுகள் வழங்கப்படுமென பொலிஸ் சேவைகள் ஆணைக்குழுவின் தலைவரான ரஞ்சித் அபேசூரிய தெரிவித்தார்.

பொலிஸ் இன்ஸ்பெக்டர்களாக உள்ள 137 பேர் பிரதம பொலிஸ் இன்ஸ்பெக்டர்களாகப் பதவி உயர்த்தப்படவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# வெளிநாடுகளில் மேற்படிப்பைத் தொடர இரண்டு படை அதிகாரிகள் மாற்றம்!

இந்தியா மற்றும் கென்யா ஆகிய நாடுகளில் உள்ள தேசிய பாதுகாப்புக் கல்லூரிகளில் மேற்படிப்பைத் தொடர இரண்டு மூத்த இராணுவ அதிகாரிகள் அடுத்த வாரம் பயணமாகவுள்ளனர்.

பிரிகேடியர் நிஸங்க விஜயசிங்க கென்யாவுக்கும், பிரிகேடியர் சுமித் பாலசூரிய இந்தியாவிலுள்ள வெலிங்டன் தேசிய பாதுகாப்புக் கல்லூரிக்கும் செல்லவுள்ளனர். இவர்களது மேற்படிப்புக்காலம் ஒருவருடமாகும்.

இதேவேளை, ஹவாயில் தமது பயிற்சியை முடித்துக் கொண்டு அண்மையில் நாடு திரும்பிய பிரிகேடியர் நிரஞ்சன் ரணசிங்க - வவுனியாவிலுள்ள 56 ஆவது படைப்பிரிவுக்கு பொறுப்பாக நியமிக்கப்பட்டுள்ளார். பிரிகேடியர் வஜிர விஜயகுணவர்த்தன 21 ஆவது படையணிப் பொறுப்பை பிரிகேடியர் பாலசூரியவிடம் இருந்து பெற்றுக்கொண்டார்.

இதேவேளை, பிரிகேடியர் வஜிர விஜயகுணவர்த்தன பொறுப்பாக இருந்த கிழக்கு மாகாண படைகளின் பொறுப்பை- பிரிகேடியர் திஸ்ஸ ஜெயவர்த்தன ஏற்றுள்ளார்.

# சுதந்திரக் கட்சியுடனான கூட்டணி; அனைத்து நடவடிக்கைகளும் வெற்றி

## ஜே.வி.பி கூறுகின்றது

சிறிலங்கா சுதந்திரக்கட்சியுடனான கூட்டணியை அமைப்பது தொடர்பாக அனைத்து நடவடிக்கைகளும் வெற்றிகரமாகப் பூர்த்தி செய்யப்பட்டிருப்பதாக ஜே.வி.பி அறிவித்துள்ளது.

ஜே.வி.பியின் பிரசார செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்சவே இந்த அறிவித்தலை வெளியிட்டார். இரு கட்சிகளும் இணங்கிக்கொண்ட ஒரு தினத்தில் இந்தக் கூட்டணி உடன்படிக்கை கைச்சாத்திடப்படும் எனவும் அவர் தெரிவித்தார். இரு கட்சிகளினதும் பொதுச்செயலாளர்கள் உடன்படிக்கை கைச்சாத்திடப்படும் திகதி குறித்து தீர்மானிப்பார்கள் எனவும் சுதந்திரக்கட்சி பொதுச்செயலாளர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

# மோட்டார் திணைக்களம் வழமைபோல் செயற்படும்

வருட இறுதிக்குரிய வேலைகளை பூரணப்படுத்துவதற்காக- பொதுமக்களின் தொடர்புகளை இடைநிறுத்தியிருந்த மோட்டார் போக்குவரத்து திணைக்களம், பிறப்பு இறப்பு மற்றும் விவாகப் பதிவு அலுவலகம் என்பன இனி வழமைபோல் செயற்படுமெனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த வருடம் நடைபெற்ற வேலைகளை கோவைப்படுத்துவதற்காகவும், வேறு சில நடவடிக்கைகளுக்காகவும், மேற்படி இரு அலுவலகங்களும் கடந்த இரு நாட்களும் பொதுமக்களின் சேவையை இடைநிறுத்தியிருந்தன.

வேலைகள் முடிவடைந்தமையால், அலுவலகங்கள் இரண்டும் இன்றுமுதல் வழமைபோல் செயற்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்டுவரும். சாரதி அனுமதிப்பத்திரம் வழங்கல், வாகனங்களின் ஆவணங்கள் வழங்கல் ஆகிய நடவடிக்கைகள் இன்று மாலை 2 மணிக்கு நடைபெறுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

## காரைநகர் - காவலூர் படகுச்சேவை

# வெளியிணைப்பு இயந்திரங்கள் கொழும்பிலிருந்து கொள்வனவு!

காரைநகர் ஊர்காவற்துறை இடையிலான கடல்வழிப் போக்குவரத்தில் ஈடுபடும் படகுக்குப் பொருத்தவென இரு வெளியிணைப்பு இயந்திரங்கள் கொழும்பிலிருந்து நேற்று தருவிக்கப்பட்டன. இதுவரைகாலமும் இந்தக் கடல்வழிப் போக்குவரத்திற்குக் கடற்படையினர் அனுமதி வழங்கவில்லை. கடந்த டிசெம்பர் மாதம் 1 ஆம் திகதியே வீதி அபிவிருத்தி அதிகாரசபையிடம் இக்கடல்வழிப்போக்குவரத்தினை நடத்த கடற்படையினர் அனுமதி வழங்கியிருந்தனர்.

அதன்பின்னர், கடற்படையினரின் வெளியிணைப்பு இயந்திரமொன்றைப் பயன்படுத்தியே வீதி அபிவிருத்தி அதிகாரசபையினர் போக்குவரத்து சேவையை நடத்தியிருந்தனர். ஆனால், அந்த இயந்திரம் தற்போது திருத்தமுடியாத நிலையில் பழுதடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதனாலேயே, புதிதாகக் கொழும்பிலிருந்து இரு வெளியிணைப்பு இயந்திரங்கள் வீதி அபிவிருத்தி அதிகாரசபையினால் தருவிக்கப்பட்டதாகவும் மிகவிரைவில் அவை பொருத்தப்பட்டு - காரைநகர் ஊர்காவற்துறை இடையேயான போக்குவரத்து சேவை ஆரம்பமாகும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, நெடுந்தீவுப் பகுதிக்கான கடல்வழிப் போக்குவரத்துச் சேவையில் ஈடுபட்ட குமுதினி படகும் பழுதடைந்துள்ளது. இதனால் நெடுந்தீவு மக்கள் போக்குவரத்தில் சிரமங்களை எதிர்கொள்ளநேரிடுகிறது. தற்போது குமுதினிப் படகைத் திருத்துவதற்கான ஏற்பாடுகளை வீதி அபிவிருத்தி அதிகாரசபை மேற்கொண்டுவருகிறது.

பழுதடைந்த நிலையில் ஊர்காவற்றுறையில் தரித்துள்ள குமுதினி படகை திருத்துவதற்கான செப்புத் தகடுகளும் கொழும்பிலிருந்து எடுத்துவரப்பட்டுள்ளன. குமுதினிப்படகை முழுமையாகத் திருத்தம் செய்தபின்னர் மிகவிரைவில் சேவையில் ஈடுபடுத்த முடியுமென வீதி அபிவிருத்தி அதிகாரசபை வட்டாரங்கள் தெரிவித்தன. (ச)

# மற்றவர்களை மகிழ்விப்பதற்கே பண்டிகைகள்

மகிழ்வைத்தரக்கூடிய பண்டிகைகள் கொண்டாடப்படும் காலம் இக்காலமாகும். நத்தார் பண்டிகை முதல் வருடப்பிறப்பு , தைப்பொங்கல் என எல்லோருமே குதூகலிக்கும் காலம் இதுவாகும்.

இந்தக் காலப்பகுதியில் பட்டாசு கொளுத்தி மகிழ்வது என்பது எல்லோருக்கும் ஆனந்தமானதுதான். ஆனால், இதனை மற்றவர்களுக்கு துன்பத்தை ஏற்படுத்தும் வகையில் செய்வதென்பது கவலைக்குரியதாகும்.

1995 ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் இராணுவத்தினரால் கைப்பற்றப்படும்வரையில் சுமார் ஆறு ஆண்டுகளாக பட்டாசு, ஈர்க்கு வாணம், சீறுவாணம் என்பன இல்லாமலே சிறப்பாக இந்தக் கொண்டாட்டங்கள் இடம் பெற்றன. ஆனால், இன்று நாட்டின் தென் பகுதியில் கிடைக்கக்கூடிய சகலவகையான பட்டாசுகள் மற்றும் வான வாணங்கள் மற்றும் பூந்திரிகள் என்பன கிடைக்கின்றன.

இதனால், மக்கள் அவற்றை கொளுத்தி மகிழ்வடைகின்றனர். சிலர் தமது வீர சாகசங்களைக்காட்ட பட்டாசுகளையும், ஈர்க்குவாணங்களையும் பயன்படுத்துவதோடு, பல்வேறு பயனற்ற செயல்களிலும் ஈடுபட்டுவருகின்றனர்.

மிக முக்கியமாக சில இளைஞர்கள் வீதிகளில் செல்வோருக்கு இடையூறாகவும், சில சந்தர்ப்பங்களில் மற்றவர்களை வேண்டுமென்றே காயப்படுத்துவதற்காகவும், பட்டாசு கொளுத்தி மகிழ்வதானது அடாவடித்தனமான செயல்களாக அமைகின்றன.

பொதுவாக - மகிழ்வைக் கொண்டாடுவோர் அதனைப் பறைசாற்றி, மற்றவரையும் மகிழ்விக்கவே பாரிய சத்தங்களை உருவாக்கும் வெடிளைக் கொளுத்தியும் வெளிச்சமூட்டக்கூடிய வேடிக்கையான பொருட்களைக் கொளுததியும் கொண்டாடுவது வழக்கம்.

ஆனாலும், இன்று பலரும் கவனமற்ற முறையிலும், பொறுப்பற்ற தன்மையிலும், மற்றவர்களை அச்சமூட்டக்கூடிய வகையிலும் அவற்றைக் கொளுத்தி மகிழ்கின்றனர். இது பெண்கள், குழந்தைகள், முதியோர், மற்றும் சமூகநலன்மிக்கோர் மத்தியில் வெறுப்பையும், பயத்தையும், கவலையையும் ஏற்படுத்துகின்றது.

இதனைத் தடுப்பதற்கு சமூகத்தில் முன்மாதிரியான இளைஞர்களும், கலாசாரத்தைப் பேணும் குழுவினரும் கடந்த ஆண்டு முயன்றிருந்தபோதிலும் பல அசம்பாவிதங்கள் இடம் பெற்றே இருந்தன.

கடந்த புதன்கிழமை இடம்பெற்ற சம்பவம் ஒன்றில் இரவு வீதியால் சென்ற இளைஞர்மீது ஈர்க்கு வாணம் பட்டதில் நெற்றியில் காயமடைந்தார். அதுமட்டுமன்றி வீதிகளால் சென்றோர் மீதும் பட்டாசுகள் கொளுத்தி வீசப் பட்டுள்ளன.

நாகரிகமற்ற இந்தச் செயல்கள் தொடராது தடுக்கவேண்டிய கடப்பாடு அனைவருக்கும் உரியதாகும். மிகமுக்கியமாக இளைஞர்களின் பெற்றோர்கள் இத்தகைய செயல்களில் ஈடுபடும் தமது பிள்ளைகளுக்கு இதனால், ஏற்படக்கூடிய அவப்பெயர் பற்றி விளக்கிக்கூற வேண்டும்.

கிறிஸ்தவ தேவாலயங்கள், இந்துமத வழிபாட்டுத்தலங்கள் முதலானவற்றில் பூசைகளின் முடிவில் அங்குள்ளோரிடம் இத்தகைய வீண்செயல்களால் உருவாகக்கூடிய பிரச்சினைகள் குறித்து விளக்கும்போதும் ஓரளவிற்கு இத்தகைய செயல்களைக் கட்டுப் படுத்த முடியும்.

கணப்பொழுதில் மற்றவர்களுக்கு ஏற்படும் சத்தத்தினால் உண்டாகும் மகிழ்விற்காக கண்ணையோ, கையையோ, இழக்கக்கூடாது. உடலில் காயமேற்பட்டு, அவஸ்தைப்படும் நிலையும் ஏற்படக்கூடாது. இதற்கு நாம்தான் அவதானமாக இருக்கவேண்டும்.

வேண்டுமென்றே பெண்கள் மீது பட்டாசைக் கொளுத்தி எறிபவர்கள் தமது சகோதரிகளுக்கும் யாரேனும் அவ்வாறு செய்தால் ஏற்படக்கூடிய நிலையை எண்ணிப் பார்த்து நடந்துகொள்ளவேண்டும் அதே வேளை அவதானமும் வேண்டும்.

மிகமுக்கியமாக கொளுத்தி எறியப் படும் பட்டாசுகள் வெடிக்காதுவிடின் அதனை எடுக்கும்போது, மிகவும் கவனமாக கையாளல் வேண்டும். கட்டைத்திரியுடன் கூடிய வெடிகளை அவதானத்துடன் கொளுத்துதல்வேண்டும்.

ஈர்க்கு வாணங்களைக் கொளுத்துவோர் வானத்தை நோக்கி விடுவதே பாதுகாப்பானது. சிலர் வீதிகளில் நின்று இரு குழுக்கழாகப் பிரிந்து தமக்குள் 'றொக்கெட்' தாக்குதல் செய்வதுபோல் செயற்படுவது ஆபத்தையும் அவலத்தையும் ஏற்படுத்தக்கூடியதுமாகும்.

நகர்ப்புறங்களிலும், சன நெரிசல்கூடிய இடங்களிலும் வெடிகளைக்கொளுத்தி மகிழ்வது ஆபத்தானது என்பதை உணர்ந்து செயற் படவேண்டும்.

மற்றவர்களுக்கு இடையூறுகள் ஏற்படக் கூடிய வகையில் நாம் செயற்பட்டுவிடக் கூடாது என்பது எம்மனங்களில் ஒலிக்கின்ற போதுதான், நாம் சரியான பாதையில் செயற் படுவோம். சிறுகுழந்தைகள், கர்ப்பிணிகள், முதியவர்கள், நோயாளிகள் உள்ள வீடுகளில்- திடீரென அதிர்ச்சியூட்டத்தக்க வகையில் இத்தகைய வெடிகள் கொளுத்தப்படுவது அவர்கள் மத்தியில் பெரும் அச்சத்தையும், நம்மீது வெறுப்பையும் ஏற்படுத்தும் என்பதைப் புரிந்து கொள்ளவேண்டும்.

குழந்தைகள் தூங்கிக் கொண்டிருக்கும்போது - நள்ளிரவில் வெடிகளைக் கொளுத்தி அவர்களின் தூக்கத்தைக் குலைப்பதும் மிகவும் பண்பற்ற ஒரு செயலாகும். மிக முக்கியமாக வைத்தியசாலைகள், முதியோர் இல்லங்கள், பாடசாலைகள், தொழில் ஸ்தாபனங்கள், ஆலயங்கள் முதலான மிகமுக்கியமான இடங்களில் பட்டாசு கொளுத்துவதைத் தவிர்ப்பதே நல்லது.

மற்றவர்களுக்குத் துன்பத்தை ஏற்படுத்தி, நாம் அதில் மகிழ்வடைவதென்பது மிருகத்தனமான, அறிவற்ற செயலாகும். இன்று பல இளைஞர்கள் வீதியால் செல்லும் பெண்பிள்ளைகள், சிறுவர்கள், சித்தசுவாதீன



இந்த வெடிச்சத்தங்கள் அமைந்துவிடுகின்றன. நள்ளிரவில்கூட "திடுக்கிட்டெழும் சிலர் - வெடியோசையை இனங்கண்டுகொள்ளமுடியாமல் கலங்குகின்றனர்.

இந்த வெடிச்சத்தங்களால் மாரடைப்பு நோய்கூட ஏற்பட்டு பலர் பாதிக்கப்பட்டுள்ளனர். சிலர் இறக்கவும் காரணமாக அமைந்து விடும் நிலையில் - இந்த வெடிச்சத்தம் எமக்குத் தேவைதானா? என்கின்ற கேள்வி எழாமல் இல்லை. வளர்ச்சியடைந்த நாடுகளில் பட்டாசு கொளுத்தி மகிழ்வது என்பது அறியப்படாத ஒன்றாகவே உள்ளது.

இந்தியாவைப் பொறுத்தவரையில் ஒவ்வொரு ஆண்டும் பண்டிகைகளின் போது கொளுத்தப்படும் வெடிகளால் 5 ஆயிரம் பேர்வரை உளப்பாதிப்பிற்கும், 20 ஆயிரம் பேர்வரை உடற்காயங்களுக்கும் உட்படுகின்றனர் என ஒரு புள்ளிவிபரம் தெரிவிக்கின்றது.

எமது நாட்டில் இன்னமும் இது குறித்துச் சரியான கணக்கெடுப்பு மேற்கொள்ளப்படவில்லை. எனினும், குறிப்பிடக்கூடியளவு உள, உடல் பாதிப்புக்களுக்கு மக்களை உட்படுத்தும் ஓர் நிகழ்வாகப்பட்டாசு கொளுத்துதல் அமைய வாய்ப்பிருக்கின்றது.



# மனங்களைப்புண்படுத்தும் பட்டாசைக் கொளுத்தவல்ல

மற்றோர், முதியோர்கள் எனப்பலதரப்பினர்களுக்கும், வெடிகளைக் கொளுத்தி எறிந்து கேலிசெய்து மகிழ்கின்றனர். இதனை அவர்கள் வீரம்மிக்க செயல்கள் என எண்ணுகின்றனரோ? தெரியவில்லை. ஆனால், இது ஒரு சித்த சுவாதீனமற்ற அதாவது, பைத்தியக்காரர்கள் செய்யும் செயல் என்றே சமூகம் கருதும் என்பதை உணரமறுக்கின்றனர்.

இந்தப் பயனற்ற சத்தத்தைக் கேட்பதற்காக எத்தனை கோடி ரூபாக்கள் செலவாகின்றன. யாழ்.நகரிலுள்ள பட்டாசு விற்பனை நிலையம் ஒன்றில் எடுத்த புள்ளிவிபரத்தின்படி- நத்தார் பண்டிகையன்று மட்டும் 50 ஆயிரம் ரூபா பட்டாசும், 82 ஆயிரம் ரூபா பெறுமதியான ஏனைய வானவெடிகளும், இதர பட்டாசு வகைகளும் விற்கப்பட்டுள்ளன.

யாழ்.நகரில் மட்டும் 20 இற்கும் மேற்பட்ட பட்டாசு விற்பனைக் கடைகள் உள்ளன. சராசரியாகப் பார்த்தால்கூட 10 லட்சம் ரூபாக்கு மேல் பண்டிகைத்தினங்களில் கருகிப் போகின்றன. அவற்றை ஏழைகளுக்கும், முதியோர் இல்லங்களுக்கும், அநாதை இல்லங்களுக்கும் வழங்கி உதவினால், எத்தனை வயிறுகள் பசியாறும், எத்தனை மனங்கள் எம்மை வாழ்த்தும்.

கடந்தகால யுத்தத்தால் உருவாகியிருந்த பெரும் வெடியோசைகள் சற்று ஓய்ந்திருக்கின்றநிலையில், பலரது உள்ளத்தில் மீண்டும் யுத்த பீதியை ஏற்படுத்தும் ஓர் நிகழ்வாக

சில சந்தர்ப்பங்களில் இந்தச் சாதாரண நிகழ்வு பெரும் மதக்கலவரங்கள், உறவினிடையே வெட்டுக்குத்துக்களைக்கூட ஏற்படுத்தும். கடந்த வியாழக்கிழமை கொண்டாடப்பட்ட நத்தார் பண்டிகையின்போது, வெடி கொளுத்திய இளைஞர்களின் அட்டகாசம் தாங்காது கொதிப்படைந்த பிக்கு ஒருவர் - இளைஞர்கள்மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதில் ஒருவர் கொல்லப்பட்டார், இருவர் காயமடைந்தனர். இதேபோன்று யாழ்ப்பாணத்தின் குருநகர்ப்பகுதியில் நத்தார் தினத்தன்று இடம்பெற்ற உறவினர்களிடையேயான கலகத்திற்கூட வெடிகொளுத்தியதால் ஏற்பட்ட தர்க்கமே காரணம் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

எனவே, குறுகியநேர மகிழ்விற்காக இளைஞர்கள் தமது நற்பெயரைக் கெடுத்துக் கொள்ளாது, மற்றவர்களின் அங்கங்களுக்கோ, அகச் செயற்பாடுகளுக்கோ ஆபத்தை ஏற்படுத்தாதவகையில் செயற்பட்டு, பண்டிகைகளைக் கொண்டாடுதல் அவர்களுக்கு மட்டுமல்ல, அனைவருக்குமே மகிழ்வினை ஏற்படுத்தக்கூடிய ஒன்றாக அமையும்.

வெடிபொருட்களைக் கொளுத்துவதைத் தடுப்பது ஒட்டுமொத்தத்தில் நல்லதொருநிகழ்வாகவே அமையும் என்றேபலரும் கருதுகின்றனர். இவ்விடயத்தில் பண்புள்ள இளைஞர்களும், கலாசாரம்பேணும் குழுவினரும் அக்கறை கொள்ளவேண்டும்.

**- செந்தணன் -**



நேற்றைய தினம் யாழ்.குடாநாட்டுக்கான இராணுவ கட்டளைத்தளபதி மேஜர் ஜெனரல் சுசில் சந்திரபால கல்லுண்டாய் பகுதிக்குச்சென்று அங்குள்ள மக்களுடன் கலந்துரையாடுவதைகாணலாம்.

(படங்கள் சர்வேஸ்)

# யு.என்.எச்.சி.ஆர். செயற்பாடுகளுக்கு 15 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீடு !

## -திட்டமிடல் அதிகாரி தெரிவிப்பு-

அகதிகளுக்கான ஐ.நா உயர்ஸ்தானிகராலயத்தின் அடுத்த ஆண்டுக்கான அபிவிருத்திப் பணிகளுக்காக 15 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதாக, யாழ்.செயலகத்தில் இயங்கிவரும் அகதிகளுக்கான ஐ.நா உயர்ஸ்தானிகராலயத்தின் திட்ட அமுலாக்கல் பிரிவின் திட்டமிடல் அதிகாரி கதிரமலை தெரிவித்தார்.

கடந்த வருடத்திற்கான எமது செயற்பாடுகளுக்கு 112 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டிருந்தது. அவை வீடமைப்பு, மீன்பிடிஅபிவிருத்தி, சிறுகைத்தொழில் அபிவிருத்திப்பயிற்சித்திட்டங்கள், சமூகசேவை மன்றங்களின் புனரமைப்பு முதலான பல்வேறு செயற்பாடுகளுக்கும் பயன்படுத்தப்பட்டன.

இதில் வீடமைப்பு மற்றும் மக்களுக்கான தங்குமிட வசதிகளை ஏற்படுத்துவதற்காக அதிகூடிய தொகையாக 69 மில்லியன் ரூபாகள் செலவு செய்யப்பட்டிருந்தன. ஏனைய சேவைக்களுக்காக மிகுதிப்பணம் பயன்படுத் தப்பட்டிருந்தது.

இந்தமுறை எமது செயற்பாடுகளுக்காக 15 மில்லியன் ரூபா மட்டுமே ஒதுக்கப்பட்டுள்ளன. இந்தப் பணத்தில் அதிகமான தொகை யாழ்.மாவட்டத்தில் உள்ள நலன்புரி நிலையங்களில் வசிக்கும் மக்களுக்கு செலவு செய்யவென்றே வழங்கப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டுக்கான வேலைத்திட்டங்கள் யாவும் அடுத்த மாதத்துடன் பூர்த்தி அடையும். அதனைத் தொடர்ந்து மார்ச்மாதம் முதல் நலன்புரி நிலையங்களில் தங்கியிருக்கும் மக்களின் நலன் தொடர்பான விடங்களில் அக்கறை செலுத்தப்படவுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (ப)

# ஈராக்கில் தற்கொலை தாக்குதலில்; 8 பேர் பலி; 35 பேர் படுகாயமடைந்தனர்!



(பக்தாத்)

ஈராக்கின் தலைநகரில் உள்ள 'கராடா' மாவட்டத்தில், உல்லாசப் பிரயாணிகள் விடுதியின் மீது குண்டு நிரப்பிய காரொன்று மோதி வெடித்துச் சிதறியதில், 8 பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளதாகவும் 35 பேர்வரை படுகாயமடைந்ததாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

தற்கொலைக் குண்டுதாரியினால் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டதாகவும், இரண்டாவது தற்கொலைக் குண்டுதாரி விடுதிக்குள் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

தாக்குதல் நடத்தப்பட்டபோது விடுதிக்குள் உல்லாசப் பிரயாணிகள் அதிக எண்ணிக்கையில் காணப்பட்டதாக பி.பி.ஸியின் செய்தியாளர் 'கிரிஷ் சொக்' தெரிவித்தார்.

பலத்த ஒலியை - குண்டுவெடிப்பு நடைபெற்ற பிரதேசத்தில் கேட்கக்கூடியதாக இருந்ததாகவும், அருகிலிருந்த கட்டடங்களும் பாதிப்படைந்து காணப்படுவதாகவும், தாக்கப்பட்ட கட்டடத்தின் அருகில் இடிந்த பகுதிகள் குவியலாகக் காணப்பட்டதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

கிறிஸ்மஸ் தினத்தை முன்னிட்டு உல்லாசப் பிரயாணிகள் தங்கும் விடுதிகளின் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டிருந்த வேளையிலும் இந்தச் சம்பவம் நடைபெற்றது குறிப்பிடத்தக்கது.

# பூமியதிர்ச்சியில் சிக்கியோர் ஆறு நாட்களின் பின் மீட்பு!

சரித்திரப் பிரசித்திபெற்ற 'பாம்' நகரில் பூமியதிர்ச்சி ஏற்பட்டு 6 நாட்களின் பின் 'ஜடோல்கா சாடட்' என்ற 26 வயதுடையவர் உயிருடன் காப்பாற்றப்பட்டுள்ளார்.

மனைவியின் அயராத முயற்சியின் காரணமாகவே இவர் காப்பாற்றப்பட்டுள்ளதாகவும், இரும்புப் பெட்டி ஒன்றின் அடியில் சிக்குண்டதாலேயே இடிபாடுகளினுள் தங்கியிருந்து தப்பித்துக்கொள்ள முடிந்ததாக, மீட்புப் பணியாளர்கள் தெரிவித்தனர்.

இடிபாடுகளில் இருந்து மீட்கப்பட்டபோது சுயநினைவற்றிருந்ததால், வைத்தியசாலைக்கு அவரை எடுத்துச்சென்றதாகவும், மீட்புப் பணியாளர்கள் தெரிவித்தனர்.

மேலும் 2 மீட்கப்பட்டதாக பிந்திய செய்திகள் தெரிவிக்கின்றன.

## உலக நோக்கு

# இந்திய - பாகிஸ்தான் விமானசேவை மீளவும் ஆரம்பிப்பதற்கு முடிவு



இந்திய, பாகிஸ்தான் ஆகிய நாடுகளுக்கு இடையிலான விமான சேவையை இரண்டு ஆண்டுகளின் பின் மீண்டும் ஆரம்பிப்பதற்கான ஒழுங்குகளை பாகிஸ்தான் விமான நிலைய ஊழியர்கள் செய்துவருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

பாகிஸ்தானின் சர்வதேச விமானங்கள் இந்தியாவிற்கான பிரயாணங்களை வியாழக்கிழமை மேற்கொள்ளுவதற்குத் திட்டமிட்டுள்ளது.

லாகூர், கராச்சி ஆகிய விமான நிலையத்தில் இருந்து வாரத்திற்கு 6 பிரயாணங்கள் இந்தியாவிற்கு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதாக, பாகிஸ்தான் சர்வதேச விமான சேவையின் பேச்சாளர் 'இம்ரான். கார்டெஷி' ரொய்ட்டருக்குத் தெரிவித்தார்.

1947 ஆம் ஆண்டு பாகிஸ்தான் இந்தியா ஆகிய நாடுகளிடையே எல்லைகள் வரையறுக்கப்பட்ட நேரத்தில், பல உறவு நிலைகள் பிரிக்கப்பட்டன. அவ்வாறு பிரிபட்டிருந்தவர்கள் - இதுவரை தமது உறவினர்களைச் சந்திப்பதற்கு அதிக செலவில், கிராமங்கள் மத்தியில் மூன்றாம் நாடொன்றினூடாகப் பிரயாணம் செய்யவேண்டியிருந்தது குறிப்பிடத்தக்கது.

## இந்தோனேசியாவில்

# இசைநிகழ்ச்சியில் குண்டுவெடிப்பு; ஒன்பது பேர் பலி, 30 பேர் படுகாயம்!

(ஜகார்த்தா)

இந்தோனேசியாவின் மாகாணமான 'ஆச்' சில் இசை அரங்கு ஒன்றில் ஏற்பட்ட குண்டுவெடிப்பில் 9 பேர் கொல்லப்பட்டும் 30 பேர் காயமடைந்தும் உள்ளதாக, இராணுவ அதிகாரிகள் தெரிவித்தனர்.

புதுவருடத்தினத்தன்று நடைபெற்ற இசை நிகழ்ச்சியின்போதே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இறந்தவர்களில் ஒரு வயதுக் குழந்தையும், ஏழு வயதுச் சிறுவ னும் அடங்குவர்.

இந்தோனேசியாவின் 'ஆச்' பிரிவினைவாதிகளே குண்டுத் தாக்குதலுக்குக் காரணமானவர்களென இராணுவ அதிகாரிகள் தெரிவித்தனர்.

இசை நிகழ்ச்சி நடைபெற்றுக் கொண்டிருந்த நேரத்தில் திடீரென ஏற்பட்ட குண்டுவெடிப்பில், இசையை ரசித்துக்கொண்டிருந்தவர்கள் எல்லாத் திசையிலும் சிதறி ஓடியதாகவும், கொல்லப்பட்டவர்களில் கூடுதலானவர்கள் இளைஞர்கள் எனவும் தெரிவிக்கப்படுகிறது.



இந்தோனேசிய - 'ஆச்' மாகா ணத்தை இராணுவக் கட்டுப்பாட்டில் 2003 ஆம் ஆண்டு மே மாதத்தில் இருந்து வைத்திருக்கின்றது.

# நெடுமாறனின் பிணை மனு மீதான விசாரணைகள் இன்று ஆரம்பம்!

(புதுடில்லி)

தமிழர் தேசிய இயக்கத்தலைவர் பழ.நெடுமாறன் தாக்கல் செய்த பிணைமனு மீதான விசாரணை இன்று நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

விடுதலைப்புலிகளின் முன்னணித் தலைவர்களில் ஒருவராக இருந்த கிட்டு குறித்து புத்தகம் வெளியிட்டது தொடர்பாக, நெடுமாறன்மீது மீனம்பாக்கம் காவல் நிலையத்தில் வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இந்த வழக்கில் இருந்து தன்னைப் பிணையில் விடக்கோரி ஆலந்தூர் நீதிமன்றத்தில் நெடுமாறன் மனுத்தாக்கல் செய்திருந்தார்.

மனுமீதான விசாரணை முடிவடைந்து, தீர்ப்பு வழங்கப்பட வேண்டிய நிலையில் நீதிபதியை தமிழக அரசு திடீரென இடமாற்றம் செய்து விட்டது. இதையடுத்து பூந்தமல்லி கூடுதல் அமர்வு நீதிமன்றத்தில் நெடுமாறனின் சார்பில் பிணைமனு தாக்கல் செய்யப்பட்டது. ஆனால் அங்கு அவரது பிணை மனு நிராகரிக்கப்பட்டது.

இதைத்தொடர்ந்து செங்கல்பட்டு மாவட்ட நீதிமன்றத்தில் நெடுமாறனின் வழக்கறிஞர் சந்திரசேகர் பிணை மனுவைத் தாக்கல் செய்துள்ளார். இந்த மனு நேற்று முன்தினம் விசாரணைக்கு வந்தபோது, அரச சட்டத்தரணி ஆறுமுகம் 2 ஆம் திகதிவரை மனு மீதான விசாரணையைத் தள்ளிவைக்குமாறு கோரிக்கை விடுத்தார்.

அதை ஏற்ற நீதிபதி பெரியகருப்பையா வழக்கை 2 ஆம் திகதிக்கு தள்ளிவைத்தார்.

பொடா சட்டத்தில் பிணை அனுமதி பெற்றுவிட்டாலும் இந்த வழக்கில் பழ.நெடுமாறனுக்கு பிணை கிடைக்காததால் தொடர்ந்து சிறையிலேயே அடைக்கப்பட்டுள்ளார்.

# 10 இடங்களைக் கொடுக்கும் கட்சியுடன் கூட்டணி அமைப்பதற்குத் தயார்

## பா.ம.க. நிறுவுனர் ராமதாஸ் அறிவிப்பு

(புதுடில்லி)

நாடாளுமன்றத் தேர்தலில் 10 இடங்கள் கொடுக்கும் கட்சியுடன் பாட்டாளி மக்கள் கட்சி கூட்டணி அமைக்கத்தயார் என்று அந்தக் கட்சியின் நிறுவுனர் ராமதாஸ் தெரிவித்தார்.

திண்டிவனம் அருகே தைலாபுரத்தில் நடந்த பா.ம.க பொதுக் குழுக்கூட்டத்திற்குப் பின்னர் தொண்டர்களிடையே அவர் பேசுகையில் பாட்டாளி மக்கள் கட்சிக்கு எதிர் வரும் நாடாளுமன்றத் தேர்தலில் 10 இடங்களை ஒதுக்கும் அரசியல் கட்சியுடன் தான் கூட்டணி அமைப்போம்.

கடந்த 1998 ஆம் ஆண்டு முதல் பா.ம.க இடம்பெறும் கூட்டணிதான் தமிழகத் தேர்தலில் வெற்றிக்கூட்டணியாக திகழ்கிறது. தற்போது பா.மகவில் 5 எம்.பிக்கள் உள்ளனர். இதை இரட்டிப்பாக்க வேண்டும்.

பா.ம.க தொண்டர்கள் தேர்தல் தொடர்பான பணிகளைத் தொடங்க வேண்டும் என்றார்.

நேற்றுமுன்தினம் நடந்த பொதுக குழுக் கூட்டத்தில், கூட்டணி தொடர்பாக முடிவெடுக்கும் அதிகாரத்தை ராமதாஸிடம் வழங்கி கட்சி தீர்மானம் நிறைவேற்றியது.

## அமெரிக்காவின் நியூயோர்க் நகரில்

# பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் புதுவருடம் கொண்டாடப்பட்டது



(நியூயோர்க்)

புதுவருடத்தை இந்த வருடம் மிகுந்த பாதுகாப்பின் மத்தியில் கொண்டாடவேண்டிய நிலை நியூயோர்க் மக்களுக்கு ஏற்பட்டிருந்தது.

நியூயோர்க் சதுக்கத்தில் கொண்டாடப்பட்ட விழாவிற்கு வந்தவர்கள் தீவிர பரிசோதனைகளின் பின்பே அனுமதிக்கப்பட்டார்கள்.

பொலிஸாரின் உடற்பரிசோதனைகள், போர் விமானங்களின் வான் பாதுகாப்பு என்பனவற்றின் மத்தியில் புதுவருட விழா கொண்டாடப்பட்டது. சர்வதேச விமானப் பிரயாணங்கள் புதுவருடதினத்தன்று நிறுத்தப்பட்டிருந்தன. கழிவுநீர்க் குழாய்களின் வாயில்கள், தபால் பெட்டிகள், குப்பைத் தொட்டிகள் யாவும் விழா நடைபெறும் இடத்திற்கு அருகிலிருந்து அகற்றப்பட்டிருந்தன.

இதனிடையே துருக்கியும் 'இஸ்தான்புல்' லில் புதுவருட கொண்டாட்டங்களை நிறுத்தியிருந்தது. இஸ்தான்புல்லில் சென்ற மாதம் குண்டுத் தாக்குதலில் 82 பேர்வரை கொல்லப்பட்டிருந்தார்கள்.

மேலும் பிரித்தானியாவின் தலைநகர் லண்டனில் 3 000 இற்கும் அதிகமான பொலிஸார் புதுவருட விழாவின் போர்து காவல் கடமையில் ஈடுபட்டிருந்தனர்.

# பாகிஸ்தான் ஜனாதிபதி முஷாரப் மேலும் 5 ஆண்டுகள் பதவி வகிப்பார்



(பாகிஸ்தான்)

பாகிஸ்தானின் தேசிய நாடாளுமன்றமும், நான்கு மாகாண நாடாளுமன்றங்களும் பர்வேஷ் முஷாரப்பை ஐந்து ஆண்டுகளுக்கு அந்த நாட்டின் தலைவராக தேர்ந்தெடுத்துள்ளன.

2001 ஆம் ஆண்டு தன்னை பாகிஸ்தானின் ஜனாதிபதியாக, முஷாரப் பிரகடனம் செய்திருந்தார். ஆனால், அரசியல் யாப்பின்மூலம் அவர் தெரிந்தெடுக்கப்படவில்லை.

அரசியல் யாப்பு இந்த வாரம் மாற்றி அமைக்கப்பட்டது. ஆனால், எதிர்க்கட்சிகள் இது ஒரு ஏமாற்றுவித்தை எனக் குறிப்பிட்டு, சபையில் இருந்து வெளியேறியிருந்தனர்.

பாகிஸ்தானின் முக்கியமான இஸ்லாமியக் கட்சிகள் முஷாரப்புடனான உரையாடல்களின் பின் 2007 ஆம் ஆண்டுவரை பதவியில் இருப்பதற்கு சம்மதம் தெரிவித்திருந்தன.

இதேநேரத்தில், நாடாளுமன்றத்தில் ஜனாதிபதி முஷாரப் எவ்வளவு அதிகாரங்களை வைத்திருக்கலாம் என்ற கருத்துக்களுக்கு முடிவு ஏற்பட்டுள்ளதாக அரசியல் ஆய்வாளர்கள் தெரிவித்தனர்.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland



"என்ன மணியம் நேற்று புதுவருசம் பிறக்கேக்கை வாழ்த்துச் சொல்லலாம் என்று உன்னைத் தேடினா சந்திப் பக்கம் ஆளையே காணவில்லை..."

"உண்மையிலை வாழ்த்துச் சொல்ல உனக்கு விருப்பம் இருந்திருந்தா வீட்டுக்கு வந்திருக்கலாம்தானே.....! சும்மா புளுடா விடாதே கனகு..."

"சத்தியமா மச்சான் சந்திக்கு நாலுதரம் வந்து பார்த்தனான் கடைசியிலை... வருசத்துக்கு முதல்நாளே ஆரோ ம்ீக்குமுட்ட தண்ணி வாத்திட்டாங்கள் உனக்கு என்று நினைச்சிட்டுப் போட்டன்... நீ வீட்டிலையே இருந்தனீ.....ஏன் சந்திப்பக்கம் வரேல்லை..."

"அந்த அனியாயத்தை ஏன் கேட்கிறாய்.....எங்கட வாரிசுகள் வீதி வீதியா ரோந்து வந்து வெடி கொழுத்தி போறவாற சனத்தின்ரை காலுகளுக்குள்ளையும், அடுத்தவங்கட காணிக்குள்ளேயுமெல்லே போடுதுகள்.... வாலுகள்...."

"அதுவும் உன்னைப் போல ஆக்களைக் கண்டா அவைக்கு குஷி கூடிப்போய் கோணங்கித்தனம் காட்ட வெளிக்கிட்டிடுவினம்..."

"சரியாச் சொன்னாய்.... எடேய் வெறிக்குட்டி மாமா வாறார் என்று சொல்லிப்போட்டெல்லே இடிஇடிச்சமாதிரி ஒரு வெடியை போட்டாங்க.... கந்தம்மான்ரை கணக்கில அடிச்ச ஒரு போத்தல் சாராய வெறியும் "பக்" என்று பறந்திட்டுது....."

"வெடிவெடிக்குறது வேடிக்கைக்கும் சந்தோசத்துக்கும் தான்....ஆனால் சிலசமயம் வேதனையும் தரும் விபரீதத்தையுமெல்லே உண்டாக்கிப்போட்டுது..."

"உந்த கோதாரி வெடிக்கு பயந்துதான் வீட்டை விட்டு வெளிக்கிடாமை உள்ளுக்கையே கிடந்திட்டன்...."

"மிதிவெடிக்கு பயப்படுகிற நாங்கள் சீன வெடிக்கும் பயபடவேண்டியருக்கு... வெடியென்றால் வெடவெடன்று நடுங்குது."

தெருவோசி

# ஆசிரியர்களுக்கான வெற்றிடங்களை நிரப்புவதற்கு அரசாங்கம் நடவடிக்கை

(கொழும்பு)

தேசிய பாடசாலைகளில் நிலவும் ஆசிரிய வெற்றிடங்கள் நிரப்பப்படவுள்ளன. இதற்காக முதலில் வடக்கு - கிழக்கு மாகாணத்தில் உள்ள மாவட்டங்களில் இருந்து இடமாற்றங்கள் கோரப்பட்டுள்ளன.

மாகாண சபை மற்றும் மத்திய அரசாங்கத்தின் கீழ் இயங்கும் பாடசாலைகளில் கடமையாற்றும் நிரந்தர ஆசிரியர்களே இந்தப் பதவிக்கு விண்ணப்பிக்கும் தகுதியைக் கொண்டுள்ளனர்.

இவர்கள் 1981 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் திகதிக்கு முன்னர் ஆசிரிய நியமனங்களைப் பெற்றவர்களாக இருக்கவேண்டும். அத்துடன், இடமாற்றங்களின்றி சுமார் 5 வருடங்கள் தேசியப் பாடசாலைகளில் கடமையாற்ற வேண்டும் என்ற விருப்பத்தையும் இவர்கள் கொண்டிருக்க வேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இதுவரை மத்திய மாகாணத்திற்கும் ஆசிரிய இடமாற்றங்கள் இன்று முதல் அமுலாகின்றன. மத்திய மாகாணத்தில் சுமார் 10 வருடங்களுக்கு மேலாகவும், சில ஆசிரியர்கள் ஒரே பாடசாலையில் கடமையாற்றி வருவதாக தெரியவந்துள்ளதாக மத்திய மாகாண சபை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

## பிரதேசசபை உறுப்பினரின் வாகனம் மோதி இருவர் பலி

கலவான பிரதேசத்தில் உள்ள பிரதேசசபை உறுப்பினர் ஒருவர், தமது வாகனத்தால் இருவரை மோதி கொலைசெய்துவிட்டுத் தப்பிச் சென்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்றது. இந்தச் சம்பவத்தால் அந்தப் பிரதேசத்தில் பதற்றநிலை நிலவியதாகத் தெரியவருகிறது.

ஆத்திரம் கொண்ட அந்தப் பகுதி மக்கள் லொறி ஒன்றில் ஆயுதங்களைத் தாங்கிவந்து, பிரதேச சபை உறுப்பினர்களுக்குச் சொந்தமான வியாபார நிலையத்தை சேதப்படுத்தினர். இதன்போது, 10 பேர் பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டனர்.

# ஓய்வூதியக் கூப்பன்களை அனுப்பிவைக்க உத்தரவு

(கொழும்பு)

இந்த வருடத்துக்கான 12 மாதங்களுக்குரிய ஓய்வூதியக் கொடுப்பனவுக் கூப்பன்களை சகல ஓய்வூதியக்காரர்களுக்கும் விநியோகிக்குமாறு ஓய்வூதிய கொடுப்பனவுப் பணிப்பாளர் சகல மாவட்ட செயலாளர்களுக்கும் பணித்துள்ளார்.

இந்தக் கூப்பன்களை பெற்றுக் கொள்வதற்கு சில பிரதேச செயலகங்கள் ஓய்வூதியக்காரர்களுக்கு அழைப்பு விடுத்திருந்தமையால் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டதாக பணிப்பாளர் விக்டர் சமரவீரசிங்க தெரிவித்தார்.

தனிப்பட்ட ரீதியில் இவை குறித்து பரிசீலிக்குமாறு கடந்த நவம்பர் மாதம் 24 ஆம் திகதி அனுப்பப்பட்ட சுற்றுநிருபத்தின் பிரகாரம் அந்த கூப்பன்களை விநியோகிக்குமாறு சகல மாவட்ட செயலாளர்களையும் கேட்டுக்கொண்டுள்ளார்.

# புலிகளின் தற்கொலைப் படையினர் கொழும்பில் அதிகளவில் ஊடுருவலாம்!

## ஜனாதிபதி சந்திரிகா கூறுகிறார்

பெருமளவான விடுதலைப்புலிகளின் தற்கொலைப் படையினர் கொழும்புக்குள் ஊடுருவியுள்ளதாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் நடந்த வானொலிப் பேட்டி ஒன்றிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அந்தப் பேட்டியில் அவர் மேலும் தெரிவித்ததாவது -

கொஞ்சம், கொஞ்சமாக கொழும்பில் ஊடுருவியுள்ள விடுதலைப்புலிகளின் தற்கொலைப் படையினர் இன்று பெருமளவில் உள்ளனர்.

அத்துடன், கிழக்கில் பாதுகாப்பு மிகவும் பலவீனமாக இருந்தது. புலிகள் திருகோணமலையிலுள்ள கடற்படையினரின் கடற்படைத் தளத்தை கைப்பற்றும் நிலையில் இருந்தனர். அந்த நேரத்திலேயே நான் பாதுகாப்பு அமைச்சினைப் பொறுப்பேற்றுக்கொண்டேன்.

முன்னாள் பாதுகாப்பு அமைச்சர் ஒரு பொறுப்பில்லாதவர். அவர் மிகவும் பொறுப்புணர்வுடன் நடந்தால் நான் ஏன் பாதுகாப்பு அமைச்சை பொறுப்பேற்க வேண்டுமெனவும் அவர் கேள்வியெழுப்பினார்.

நான் பாதுகாப்பு அமைச்சை பொறுப்பேற்க முன்னர் திருகோணமலை கடற்படைத்தளத்தைச் சுற்றி விடுதலைப்புலிகள் தமது நடவடிக்கையை தொடர்ந்த வண்ணமே இருந்தனர்.

இது தொடர்பாக நடவடிக்கை எடுக்குமாறு நான் அப்போதைய பாதுகாப்பு அமைச்சரைக் கேட்டிருந்த போதும் அவர் எதுவித நடவடிக்கையையும் எடுக்கவில்லையெனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## காவலரணிலிருந்த துப்பாக்கி மாயம்

(திருகோணமலை)

திருகோணமலை - மூதூர் அரபிக் கல்லூரி படையினரின் காவலரணிலிருந்த ரி-56 ரக துப்பாக்கி ஒன்று நேற்றுமுன்தினம் அதிகாலை காணாமற்போய்விட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பாக படையினரால் மூதூர் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. மூதூர் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.(04)

# கச்சதீவில் அத்துமீறிய 24 தமிழக மீனவர் கைது!

(ஊர்காவற்துறை)

இலங்கைக் கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடித்ததாக குற்றம் சாட்டப்பட்டு, கச்சதீவுப் பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் இலங்கைக் கடற்படையினரால் கைதுசெய்யப்பட்ட 24 தமிழக மீனவர்களில் 6 பேரை இன்றுவரை விளக்க மறியலில் வைக்குமாறு ஊர்காவற்துறை நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டது. எஞ்சிய 18 பேர் ஊர்காவற்துறையில் பொலிஸார் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளார்கள். விளக்கமறியலில் உள்ள 6 பேரும் இன்று நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்படுவர். இவர்களது 6 மீன்பிடிப்படகுகளும் கடற்படையின் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளன.

பொலிஸாரின் பாதுகாப்பில் உள்ள 18 மீனவர்கள் இன்று கடற்படையினர் மூலமாக இந்திய கடற்படையினரிடம் கையளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

# ஜே.வி.பியுடனான கூட்டணியை சுதந்திரக்கட்சி அமைக்கக்கூடாது!

## 60 எம்.பிக்கள் சந்திரிகாவுக்கு மகஜர்

(கொழும்பு)

சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கும் மக்கள் விடுதலை முன்னணிக்கும் இடையிலான கூட்டு தொடர்பான பேச்சுவார்த்தைகள் மேற்கொள்ளக் கூடாது என்று ஜனாதிபதியிடம் அறுபது நாடாளுமன்ற உறுப்பினர்கள் கையெழுத்திட்ட மகஜர் ஒன்று சமர்ப்பிக்கப்படவுள்ளது.

இந்த மகஜரை எதிர்வரும் 10 ஆம் திகதியளவில் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மக்கள் முன்னணியுடன் சிறிலங்கா சுதந்திரக்கட்சி கூட்டு அமைத்துக்கொள்வது என்பது சுதந்திரக் கட்சிக்கு முன்னேற்றகரமானதாக அமையமாட்டாது என்று பொதுஜன ஐக்கிய முன்னணியின் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சந்தன கத்திரியாராச்சி தெரிவித்தார்.

இனப்பிரச்சினைத் தீர்வில் அதிகாரப் பகிர்வை ஏற்றுக்கொள்ளாத ஒரு கட்சியுடன் எவ்வாறு பேச்சுக்கள் நடத்த முடியும் என்றும் அவர் கேள்வி எழுப்பினார்.

இதேவேளை - இந்த மாத இறுதிக்குள் சுதந்திரக்கட்சியுடனான கூட்டு ஒப்பந்தம் ஒன்று மேற்கொள்ளப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது என்றும், இந்தகால எல்லைக்குள் ஒப்பந்தம் மேற்கொள்ளப்படாவிட்டால், சுதந்திரக்கட்சியுடன் கூட்டணி அமைக்கும் ஒப்பந்தத்தை ஜே.வி.பி. விலத்திக்கொள்ள இருப்பதாக அந்தக் கட்சியின் பிரசாரச் செயலாளர் விமல் வீரவன்ச தெரிவித்தார்.

பொதுத் தேர்தல் ஒன்றை மையமாகக் கொண்டே தாம் செயற்படுவதாகவும் அடுத்த கட்ட நடவடிக்கையாக பொதுத்தேர்தல் ஒன்றையே எதிர்பார்த்திருப்பதாகவும் ஜே.வி.பியின் பிரசாரச் செயலர் விமல் வீரவன்ச தெரிவித்தார்.

பொதுஜன ஐக்கிய முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் எச்.எம்.பௌஸி கருத்துத் தெரிவிக்கையில்,

நாடு ஒரு தேர்தலை மீண்டும் எதிர்கொள்ளாது. ஜனாதிபதியும் பிரதமரும் ஒரு இணக்கப்பாட்டுக்கு வந்து இலங்கை இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண்வேண்டும் எனக் கேட்டுள்ளார். (01)

# 2003 இன் சிறந்த தமிழனாக...

எனினும், ஆயிரக்கணக்கோரின் வேண்டுகோளை ஏற்றுக்கொண்ட இந்த இணையத்தளம், வாக்களிப்புக் காலம் முடிவடைய நான்கு நாட்கள் முன்னதாக தமிழீழத் தேசியத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் மற்றும் இந்திய ஜனாதிபதி அப்துல் கலாம் ஆகியோரின் பெயர்களையும் வாக்களிப்பிற்கு விட்டிருந்தது.

இந்த வாக்களிப்பின் முடிவுகளை இந்த இணையத்தளம் நேற்று வெளியிட்டது.

இதன்படி வைகோ 52 வீத வாக்குகளைப் பெற்று முதலாவது இடத்திலும், ஜெயலலிதா 16 வீத வாக்குகளைப் பெற்று இரண்டாவது இடத்திலும், தமிழீழத் தேசியத் தலைவர் வே.பிரபாகரன் 9 வீத வாக்குகளைப்பெற்று மூன்றாவது இடத்திலும் உள்ளனர்.

இதேவேளை, அப்துல்கலாம் 7 வீத வாக்குகளையும், இயக்குனர் பாலா 7 வீத வாக்குகளையும், காஞ்சி சங்கராச்சாரியார் 5 வீத வாக்குகளையும், திருமாவளவன் நான்கு வீத வாக்குகளையும் பெற்றுள்ளனர்.

கடந்த ஆண்டு இந்த இணையத்தளம் நடத்திய இதேகருத்துக் கணிப்பில் தமிழீழத் தேசிய தலைவர் வே.பிரபாகரன் முதலிடத்தை பெற்றிருந்தமை தெரிந்ததே.

## ஆசிரிய...

அத்துடன் சங்கீதம், நடனம், சித்திரம், மனையியல், விவசாயம், கடல்வள தொழில்நுட்பம் ஆகிய ஆறு பாடங்களுக்கும் முன்னர் கோரிய நான்கு பாடத்தை விட தற்போது மேலதிகமாக விண்ணப்பிக்கலாமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த ஆயிரம் ஆசிரியர்களுக்கான பரீட்சை கொழும்பில் மாத்திரம் நடத்தப்படுமென, ஏற்கனவே தெரிவிக்கப்பட்டிருந்தது. இதனை மாற்றி வடக்கு - கிழக்கு மாவட்ட தலைநகரங்களில் நடத்துமாறும் விளம்பரப்படுத்தப்படாத மேலும் ஆறு பாடங்களைச் சேர்த்து விளம்பரப்படுத்துமாறும் தமிழர் ஆசிரியர் சங்கம் விடுத்த கோரிக்கையை கல்வி அமைச்சு ஏற்றுக்கொண்டுள்ளதாக சங்கத்தின் பொதுச்செயலர் ச.மகாசிவம் தெரிவித்தார்.(04,10)

## திட்டமிடல்...

அபிவிருத்திக்கான சிரேஷ்ட ஆலோசகர் ஆகியோர் இந்த ஆரம்ப வைபவத்தில் கலந்து கொண்டனர்.

மேலும் சிரான் பணிப்பாளர் செல்வின் இரேனியல் உள்ளூரில் செயற்படும் அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் மற்றும் புலிகளின் நிர்வாக சேவையைச் சேர்ந்தோர் இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

## மோட்டார்...

சேர்ந்த நாகராசா ஆனந்தரூபன் (வயது 35) என்பவரே படுகாயமடைந்துள்ளார்.

இந்த இருவரும் உடனடியாக மந்திகை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட போதிலும், ஒருவர் இறந்துபோக மற்றவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இறந்தவரின் உடல் பிரேத பரிசோதனையின் பொருட்டு நேற்று மாலைவரை மந்திகை வைத்தியசாலையில் வைக்கப்பட்டிருந்தது. (13)

## சர்வதேச...

வேண்டியுள்ளது. இந்தப் பிரதேசங்களில் வாழும் மக்களின் அன்றாடத் தேவைகளைப் பூர்த்திசெய்யும் இந்த அபிவிருத்தித் திட்டங்கள் தேக்கமடைந்தால், பெரும் ஏமாற்றத்தைக் கொடுக்கும் என்று அவர் தெரிவித்தார்.

## குடியிருப்புக்கான...

இவ் விடயம் தொடர்பாக இன்று படையதிகாரிகள், பிரதேச செயலாளர் ஆகியோருடன் கலந்துரையாடல் நடைபெறவுள்ளது எனவும், இந்தக் கூட்டத்தில் தொடர்பாக முடிவு எடுக்கப்படும் எனவும் பிரதேச செயலாளர் உறுதியளித்ததை அடுத்து போராட்டம் கைவிடப்பட்டது. இதனால், பிரதேச செயலாளர் பணிமனையின் செயற்பாடுகள் மூன்று மணிநேரம் தடைப்பட்டது. (29,24)

## கூட்டணி மத்தி...

ஆனந்தசங்கரி கொழும்பு மாவட்ட நீதிமன்றத்திற்கு தமது முறையீட்டில் குறிப்பிப்பட்டுள்ளன.

கட்சியின் யாப்பு விதிகளின்படி தற்போதும் தலைவராக இருப்பதாகவும் எனவே தனது அனுமதியில்லாமல் செயலாளர் கூட்டம் எதையும் கூட்ட முடியாது எனினும் ஆனந்தசங்கரி ஏற்கனவே சமர்ப்பித்த மனுவில் தெரிவித்துள்ளார்.

## தற்போதைய...

வேண்டும். இவைகள் எல்லாவற்றையும்விட நாட்டில் ஓர் தேர்தலை நடத்துவதனூடாகவும் நெருக்கடி நிலைமைக்கு தீர்வுகாணமுடியும்.

புதிய தேர்தல் ஒன்றை நடத்துவதே சிறந்த வழி, இதனைவிட மாற்று ஜனநாயக வழிகள் சாத்தியப்பட வாய்ப்பில்லை. ஜனாதிபதி தனது நிறைவேற்று அதிகாரத்தினை கட்டுப்படுத்திக் கொள்ளாத வரையில், சமாதான முயற்சிகள் பிரச்சினைக்குள்ளாகிவரும் என்பதில் சந்தேகம் இல்லை.

எமக்கிருக்கும் மக்கள் மத்தியிலான ஆதரவை வெளிப்படுத்த சிறந்த வழி பொதுத்தேர்தல் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இப்பத்திரிகை இல. 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 02.01.2004 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.